
அலெக்சாந்தர் கிரீன்

செந்நிறக் கடற்பாய்கள்



வாசக நண்பர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் ராதுகா பதிப்பகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. கடிதங்களைத் தயை செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்: Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow *119859*, USSR.

அலெகசாந்தர் கிரீன்

செந்நிறக் கடற்பாய்கள்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. முகம்மது செரீபு, எம். ஏ.
ஓவியர்: பியோத்தர் கராச்சின்ஸெவ்

Александр Грин

АЛЫЕ ПАРУСА

Феерия

На тамильском языке

Alexander Grin

CRIMSON SAILS

A Fantasy

In Tamil

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-001438-7

அலெக்சாந்தர் கிரீனின் வாழ்க்கை

அலெக்சாந்தர் ஸ்தெபானொவிச் கிரினேவ்ஸ்கி, அலெக் சாந்தர் கிரீன் என்ற புனைபெயரில் எழுதியவர், ஜூலை 1932இல், நூற்றாண்டு காலப் பழமை மிக்க கொட்டை மரங்கள் நிறைந்த ஸ்டாரி கிரீம் என்ற சிறிய நகரத்தில் காலமானார்.

அவரது வாழ்க்கை கடுமையானதாக இருந்தது. அதில் ஒவ்வொன்றுமே அவரைக் குற்றவாளியாகவோ, தீய பிலிஸ் டைனாகவோ மாற்றச் சதிசெய்தது போலக் காணப்பட்டது. ஆயினும், நம்புதற்கரிய சச்சரவுகளுக்கிடையே, இந்தத் துயருற்ற மனிதர் தனது வேதனைக் குட்பட்ட கறைபடாத வாழ்க்கையில் உயரிய கற்பனையையும், உணர்வுகளின் தூய்மையையும் நாணமிக்க புன்முறுவலையும் காப்பாற்றி வந்தார்.

மனித உறவுகளின் புரட்சிக்கு முந்திய அமைப்பின் கருணையற்ற தண்டித்தலாக கிரீனின் வாழ்க்கை இருந் தது. பழைய ருஷ்யா கிரீனை கொடுமையாக நடத்தியது: எதார்த்தத்தை நேசிக்க வேண்டும் என்ற ஆரம்பகால குழந்தைத்தன ஆவல் அவருக்கு இழக்கச் செய்யப்பட்டது. அவரது சூழ்நிலைகள் திகைக்க வைப்பதாக இருந்தன, வாழ்க்கை கூடப் பயனுள்ளதாக அமையவில்லை; அது நாகரிகத்தடமற்ற, சட்டமுறையற்ற தண்டனை போலவே இருந்தது. கிரீன் தப்பிப் பிழைத்தார், ஆனால் அவரது எஞ்சிய வாழ்க்கை முழுக்கவே எதார்த்தத்தின் அவநம்பிக்கை அவரிடம் இருந்து வந்தது. அன்றாடம் நடைமுறையிலுள்ள ''கழிவுகளுக்கும் குப்பைக் கூளங் களுக்கும்'' மேலாக நழுவுவதைக் காட்டிலும் பிடிபடாத

கனவுகளை நம்பிக் கொண்டு வாழ்வது சிறந்தது என்று கருதிய போது, அவர் எப்பொழுதுமே தப்பிக் கொள்ள முயன்று வந்தார்.

மகிழ்ச்சியுள்ளதும் துணிவுள்ளதுமான மக்களின் ஓர் உலகை, வரைப்படத்தில் காட்டப்படாத நறுமணமுள்ள கானகமும், நிறைவான கதிரொளியும் நிறைந்த ஓர் அழகிய பூமியை, வெறியூட்டுகிற மதுவைப் பருகியதால் தலையைச் சுற்றச் செய்வது போன்ற அற்புதமான நிகழ்வுகளைத் தனது நூல்களில் கிரீன் உருவாக்கினார்.

''ஆர்வமூட்டும் கதைகளை மக்கள் விரும்புகிறார்கள் என்பதை நான் எப்போதுமே கவனித்திருக்கிறேன். ஏனெனில் அவை மட்டுமே அவர்களுடைய துயரமிக்க, ஆனால் பழகிப் போன வாழ்க்கைய்ய குறைந்தது ஒரு மணி நேரத்திற்கேனும் மறக்கச் செய்கிறது,'' என்று **எனது பல்கலைக்கழகங்கள்** என்ற நூலிலே மாக்சிம் கோர்க்கி எழுதினார்.

இது கிரீனுக்கு முற்றிலும் பொருந்தும் உண்மை.

அவருக்கு ருஷ்ய வாழ்க்கையானது வியாத்கா நகரத்தின் எல்லைக்குள்ளேயே, அழுக்கடைந்த தொழில் முறை பயிற்சிப்பள்ளி, தூங்கி வழியும் வீடுகள், முது கெலும்பை முரிக்கும் வேலை, சிறைக்கூடம் மற்றும் நிரந்தரமான பசி, இவற்றோடு சுருங்கிப் போய் விட்டது. ஆயினும், சாம்பல்நிறத் தொடுவானத்தின் கோட்டிற்கு அப்பால் எங்கோ ஓரிடத்தில் ஒளிக் கற்றைகள் மின்னின, கடலின் மென்காற்று வீசியது, புற்கள் பூத்துக் குலுங்கின. கதிரவன் ஒளியில் கருகிப் போன மக்கள் அங்கே வாழ்ந்தனர், — தங்கக் கனிவளம் நாடுவோர், வேட்டைக் காரர்கள், கலைஞர்கள், துக்கப்படாத நாடோடிகள், குழந்தைகளைப் போல மகிழ்ச்சியும் மென்மையும் மிக்க பெண்கள், ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக, கடலோடி களும் — இருந்தனர்.

அத்தகைய நாடுகள் எதோ தொலைதூரத்துப் பெருங் கடலில் உள்ள தீவுகளில் மலர்கிறது, ஓசை எழுப்புகிறது என்பது பற்றிய நம்பிக்கையில்லாமல் வாழ்க்கை கிரீனுக் காக மிகவும் கஷ்டமாகவும், சிலவேளை பொறுக்க முடி யாததாகவும் இருந்தது.

புரட்சி வந்தது. அது கிரீனை அழுத்திக் கொண்டிருந்த பலவற்றை ஊசலாட்டியது: பழைய மனித உறவுகளின் மிருகத் தன்மையான அமைப்பு, சுரண்டல், ஆகிய ஒவ்வொன்றுமே அவரை வாழ்க்கையினின்றும் கனவு உலகத்திற்கும், புத்தக உலகத்திற்கும் ஓடிப் போகுமாறு செய்தது.

புரட்சி வந்ததனால் கிரீன் நன்றியோடு பெரு மகிழ்ச்சியடைந்தார். ஆனால் புதிய வருங்காலத்திற்கான அழகிய அகல் பரப்புகள் ஏனோ அப்போதும் மிக மங்கலாகத்தான் கண்ணிற்பட்டன. நாட்பட்ட பொறுமையின்மையால் அவதிப்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

புரட்சி வந்த போது, அது விழாக்கால ஒப்பனையோடு வரவில்லை. ஆனால் போர்க்களத்தில் புண்பட்ட வீரன் அல்லது ஓர் அறுவை சிகிச்சை மருத்துவன் போல வந்தது. நூற்றாண்டு காலப் பழமை நவுந்துபோன வாழ்க்கை முறையின் பாளங்களை அது உழுது மாற்றியது.

ஒளிமிக்க எதிர்காலம் தொலை தூரத்தில் இருப்பது போலக் கிரீனுக்குத் தென்பட்டது, ஆனால் அதை அவர் இப்போதே அநுபவிக்க வேண்டும் என்று விரும்பினார். நகரங்களின் புத்தம் புது காற்றை நுகரவும், மரங்களின் முணுமுணுப்பு ஓசையோடு கூடிய வாழ்த்தினைப் பெறவும், குழந்தைகளின் சிரிப்பொலியைக் கேட்கவும் ஆவல் கொண்டார். அங்குள்ள மக்களது வீடுகளுக்குச் செல்லவும், அவர்களது கிளர்ச்சியூட்டும் கண்டுபிடிப்பு முயற்சிகளில் பங்கு பெறவும், அருத்தமுள்ளதும் மகிழ்ச்சியுள்ளதுமான வாழ்க்கையை அவர்களோடு பங்கு போட்டுக் கொள்ளவும் வேட்கை கொண்டார்.

இவை எல்லாவற்றையும், எதார்த்தமானது நேரடியாகக் கிரீனுக்குத் தந்துவிடவில்லை. அசாதாரணமான நிகழ்வுகளும், மனிதர்களும் நிறைந்த உலகுக்காக ஏங்கிய அவரை கற்பனையால் மட்டுமே அங்கு எடுத்துச்செல்ல முடிந்தது.

கிரீன் காலமான போது, அவ்வாறு உணர்ச்சிக்கு ஆட்பட்டுக் கனவு காண்போர்கள் நமது காலத்திற்குத்

தேவையா இல்லையா என்பதை முடிவு கட்டும் பொறுப்பை நம்மிடமே விட்டுச் சென்றார்.

ஆமாம், அவர்கள் நமக்குத் தேவைதான். 'கனவு காண்பவர்கள்' என்ற சொல்லை ஒரு கேலியாகக் கருதுவதை நிறுத்த வேண்டிய நேரமிது. அநேகம் பேருக்கு எப்படிக் கனவு காண்பது என்பது கூட இன்னமும் தெரியாது, காலத்தோடு அவர்களால் ஏன் ஒரு போதும் ஒட்டிப் போக முடியாமற் போகிறது என்பதற்கு இது கூட ஒருவேளை காரணமாக இருக்கலாம்.

கனவு காண்கின்ற திறமையை ஒரு மனிதனிலிருந்து இழக்கச் செய்தால், கலாசாரம், கலை, விஞ்ஞானம் மற்றும் அழகிய எதிர்காலத்திற்கான போராட்டத்தின் ஆசை ஆகியவற்றிற்குரிய முன்னேற்றத்திற்கான சக்திமிக்க தூண்டுதல்களில் ஒன்று இழந்து விடப்படுகிறது. எனினும் கனவுகளை எதார்த்தத்திலிருந்து தொடர்பறுமாறு செய்தல் கூடாது; அவை எதிர்காலத்தை வருவதுரைப்பதாக இருக்க வேண்டும், அந்த எதிர்காலத்தில் நாம் ஏற்கெனவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம், நாமும் மாறிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வை அவை நமக்கு ஏற்படுத்த வேண்டும்.

கிரீனின் கனவுகள் வாழ்க்கையினின்றும் தொடர்பறுபட்டவை, மனத்தின் விசித்திரமான, பொருளற்ற பொழுதுபோக்குகள் என்று பொதுவாக எண்ணப்பட்டது. கிரீன் சாதனைக் கதைகளின் எழுத்தாளர் என்றும் வழக்கமாக எண்ணப்பட்டது — ஒரு கதையமைப்பதில் வல்லவர், அது உண்மைதான், ஆனால் சமூக முக்கியத்துவத்தை முற்றிலும் ஒழித்த நூல்கள் யாருடையவை.

ஓர் எழுத்தாளருடைய முக்கியத்துவம், அவர் நம் மீது கொண்டுள்ள உணர்வுகள், அவரது நூல்கள் ஏற்படுத்தும் சிந்தனைகள், ஒழுகலாறு மற்றும் அவை நமது அறிவை வளர்க்கின்றனவா, வெறுமனே வார்த்தை அமைப்புகளால் மகிழ்வூட்டுகிறதா என்பதைப் பொருத்து நிர்ணயிக்கப்படுகிறது.

கிரீன் தனது நூல்களில் வரும் மக்களைப் பெருமை மிக்கவர்களாக, தன்னலமற்றவர்களாக, குழந்தைக்குரிய

எளிமையோடு அன்புள்ளம் கொண்ட இனத்தினராகப் படைத்தார்.

கிரீனின் கதைகள், முற்றிலும் இடர் வரவு நிறைந்த கிளர்ச்சியூட்டுகிற வாழ்க்கை, அஞ்சாமை, கண்டுபிடிப் பாளர்கள், கடலோடிகள் மற்றும் பயணிகள் இவர்களுக்கு இயல்பான 'உன்னதமான உணர்வை' மக்களுக்குத் தூண்டுகிறது. கிரீனின் கதைகளுக்குப் பின்னால், எழுத் தாளரது கற்பனையில் எழுந்த நாடுகளை அல்லாது — சூரிய வெளிச்சத்தையும், காடுகளையும் பல மொழிகளின் ஆரவாரம் கேட்கும் துறைமுகங்களையும், மனித உணர்வும் அன்பும் நிறைந்த உண்மையான, மெய்யான நாடுகளை, ஏன், முழுமையான உலகத்தைப் பார்க்க வாசகர் விரும்புகிறார்.

''இந்த உலகம் என்னை ஏங்க வைக்கிறது. அதனது பெருங்கடல்கள் பரந்தவை, தீவுகள் எண்ணிக்கையற்றவை, எத்தனையோ பல புதிர்கள், இடரார்ந்த முறையில் ஈர்த்துப் பற்றுகின்ற ஒதுக்கிடங்களும், மறைவிடங்களும் இருக்கின்றன,'' என கிரீன் எழுதினார்.

வயது வந்தவர்கள், குழந்தைகளும் கூடத்தான், கற்பனைக் கதைகளை விரும்புகிறார்கள்; ஏனெனில் அவை அகக்கிளர்ச்சியூட்டுகிறது — உயர்ந்த ஆர்வங்களின் மூலந்தான். நம்மை அகமகிழ்ச்சியடையச் செய்வதோடு விட்டுவிடுவதில்லை, அவை நம்மை எப்போதும் புதிய, ஒளிமிக்க தொடுவானங்களுக்கு எடுத்துச் செல்கிறது, மற்றுமொரு வாழ்க்கையை அவை நமக்குக் காட்டுகின்றன. அவை நம்மை அலைக்கழித்து அந்தப் புதிய வாழ்வுக்கு ஆசைப்படும்படி செய்கிறது. இதில் தான் அவற்றின் நற்பண்பு, இதில் தான் கிரீனின் சிறுகதைகளின், வார்த் தைகளில் எப்பொழுதுமே வடிக்க முடியா விட்டாலும், தெளிவான, வலிமைமிக்க கவர்ச்சியின் நன்மையாகும்.

கிரீனின் கதையமைப்பில் உள்ள சாதனைக் கூறு குறித்து கவனம் ஈர்க்கப்படுகிறது. ஐயத்திற்கிடமின்றி, சாதனை ஆர்வம் அதில் இருக்கிறது. ஆனால் அது மிக ஆழமான சாரத்தின் வெளி உறை மட்டுந்தான். கிரீனின் நூல்களில் காணப்படக்கூடிய மனித நேய அன்பை ஒருவரால் காண முடியவில்லை என்றால்

அவர் குருடராகத்தான் இருக்க வேண்டும்.

வீறார்ந்த இயற்கை நிலக்காட்சிகளை வடிக்கும் ஓவியர் மற்றும் கதை சொல்பவர் மட்டுமே அல்ல கிரீன், அவர் மிக நுட்பமான மனவியலாளர். மிகச் சாதாரண மக்களுடைய தன்னல மறுப்பு, துணிவு மற்றும் வீரச்செயல் பற்றி அவர் எழுதினார். பணிக்கான காதல் பற்றியும், தனது சொந்தத் தொழிலுக்காகவும், இயற்கையின் வலிமையையும், ஆழங் காண முடியாத தன்மையையும் அவர் எழுதினார். இறுதியாக, ஓரிரு எழுத்தாளர்களே பெண்களுக்கான காதல் பற்றி கிரீனைப் போல தூய்மையாக, நேர்த்தியாக, உணர்ச்சி பூர்வமாக எழுதினார்கள்.

அழகுக்கு ஆட்படாத திறமையை இழந்து விடாத எவரையும் நிலை பெயரச் செய்யும் வகையில் கிரீனின் நூல்களினின்றும் நூற்றுக்கணக்கான மேற்கோள்களை நான் காட்ட முடியும். ஆனால் வாசகர் தானே அவற்றைக் கண்டுகொள்வார்.

கிரீன் சொன்னார்: ''முழுமையான பூமி, அதன் மீது உள்ள எல்லாவற்றினோடும், வாழ்வதற்காகவும், அந்த வாழ்க்கை நிலவுமிடங்கள் எல்லாவற்றையும் அங்கீகரிப்பதற்காகவும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.''

நமது காலத்திற்குத் தேவைப்பட்ட ஓர் எழுத் தாளர் கிரீன், ஏனெனில் விழுமிய உணர்வுகளின் முன்னேற்றத்திற்கு அவர் தனது பங்கினை ஆற்றியுள்ளார். அது இல்லையெனில் சோஷலிச சமூகத்தை ஒருபோதும் நிறைவு பெறச் செய்ய முடியாது.

கன்ஸ்தந்தீன் பௌஸ்தோவ்ஸ்கி,
தலைசிறந்த சோவியத் எழுத்தாளர்

செந்நிறக் கடற்பாய்கள்

ஒரு புனை கதை

ஆசிரியரால்
நீனா நிக்கலாயெவ்னா கிரீனுக்கு வழங்கி,
அர்ப்பணைஞ் செய்யப்பட்டது
நவம்பர் 23, 1922
பெத்ரோகிராட்

1

முன்னறிவிப்பு

லங்கிரேன், அரியோன் என்னும் முந்நூறு டன் நிறையுள்ள உறுதியான இருபாய்மரக் கப்பலில் பத்தாண்டுகளுக்கு மேல் மாலுமியாகப் பணிபுரிந்து விட்டான். ஒரு புதல்வன் தன் தாயிடம் கொண்டிருந்த நெருக்கத்தை விடத் தனது கப்பல் மீது அதிகமான நெருக்கம் கொண்டிருந்த அவன், இறுதியில் கடல் வாழ்வை விட்டுவிட வேண்டிய கட்டாயத் திற்கு ஆளானான்.

அது இவ்வாறாகத்தான் நடந்தது. அடிக்கடி நிகழாத அவனது வருகைகளில் ஒன்றின் போது, அவன் எப்பொழுதுமே பார்த்தது போல, தொலைவில் வரும் போதே, வாசற்படியில் நின்று கொண்டு, தனது கைகளை நீட்டியபடி, மூச்சுவிடாதபடி தன்னை நோக்கி ஓடி வருகின்ற அவனது மனைவி மேரியை அவன் காணவில்லை. அவளுக்கு மாறாக, மனம் உடைந்து போன அண்டை வீட்டுக்காரி தொட்டில் — அவனது வீட்டில் புதிதாக ஒரு மரச்சாமான் — அருகே நிற்பதை அவன் கண்டான்.

''இவளை நான் மூன்று மாதங்கள் பேணி

வளர்த்தேன், பக்கத்து வீட்டுக்காரரே, இதோ உன்னுடைய மகள்,'' என்றாள் அந்தப் பெண்.

இதயம் வேதனையால் உணர்ச்சியற்றுப் போய் லங்கிரேன் கீழே குனிகையில், தனது நீண்ட தாடியைக் கூர்ந்து நோக்குகின்ற எட்டு மாத மதலையைப் பார்த்தான். பிறகு அவன் கீழே அமர்ந்து, தரையை வெறித்துப் பார்த்தான். தனது மீசையை முறுக்கிவிடத் தொடங்கினான். மழையில் நனைந்தது போல அது ஈரமாக இருந்தது.

''மேரி எப்போது இறந்தாள்?'' அவன் வினவினான்.

அந்தத் துயரமிக்க கதையை அப்பெண் சொன்னாள். குழந்தையை இடையிடையே செல்லம் கொஞ்சியவளாக, மேரி இப்போது சுவர்க்கத்தில் இருப்பாள் என்று அவனுக்கு உறுதி சொன்னாள். விவரங்களை எல்லாம் லங்கிரேன் அறிந்த போது, விறகுக்கிடங்கை விட அதிக ஒளிமிக்கதாக சுவர்க்கம் இல்லாதது போல அவனுக்குக் காணப்பட்டது. சாதாரண விளக்கு ஒளியானது, இப்போது மூன்று பேரும் ஒன்றாக இருந்தால், அறிய முடியாத தொலைவிற்குச் சென்று விட்ட பெண்ணுக்கு அது விஞ்ச இயலாத மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கும்.

ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு முன்னால் இளம் தாயினுடைய பண விவகாரங்கள் மோசமடைந்தன. லங்கிரேன் அவளுக்கு விட்டுச் சென்றிருந்த பணத்தில் பாதியை

அவளது சிரமமான பிள்ளைப் பேற்று நிலைமைக்காக மருத்துவர்களுக்கும், புதிதாகப் பிறந்த மதலையைக் காப்பாற்றுவதற்கும் செலவிட்டது; இறுதியாக, சிறிய ஆனால் உயிராதாரமான பண இழப்பு ஆகியன மென்னர்ஸிடம் மேரியைக் கடன் கேட்கும் கட்டாயத்திற்கு ஆளாக்கியது. மென்னர்ஸ் அருந்தகம் ஒன்றும், கடை ஒன்றும் வைத் திருந்தான், பெரும் பணக்காரன் என்றும் கருதப்பட்டான்.

மாலை ஆறு மணிக்கு அவனைக் காண மேரி சென்றாள். லிஸ் செல்லும் சாலையில் ஏழு மணி வாக்கில் பக்கத்து வீட்டுப் பெண் அவளைச் சந்தித்தாள். மேரி அழுதுகொண் டிருந்தாள், மிகவும் நிலைகுலைந்து காணப் பட்டாள். தனது திருமண மோதிரத்தை அடகு வைக்க தான் நகரத்திற்குப் போய்க் கொண்டிருப்பதாக அவள் கூறினாள். பிறகு, மென்னர்ஸ் அவளுக்குக் கொஞ்சப் பணம் தர ஒத்துக் கொண்டிருப்பதாக மேலும் தெரிவித்தாள். ஆனால் பதிலுக்கு அவளது காதலை அவன் கோரியிருக்கிறான். மேரியோ அவனை மறுத்து விட்டாள்.

''வீட்டில் ஓர் அப்பத்துண்டு கூட இல்லை. நான் நகரத்திற்குச் செல்வேன். என் கணவர் திரும்புகின்ற வரை எப்படியோ நாங்கள் சமாளித்துக் கொள்வோம்,'' என்று அண்டை வீட்டுக்காரியிடம் அவள் கூறியிருந் தாள்.

குளிரும், காற்றும் வீசிய மாலை நேரம்

அது. இரவு நெருங்கிக் கொண்டிருப்பதால் லிஸ் நகரத்திற்குச் செல்ல வேண்டாம் என அண்டை வீட்டுக்காரி இந்த இளம் பெண்ணிடம் கேட்டுக் கொண்டதெல்லாம் வீணாய்ப் போயிற்று.

''மேரி, நீ நனைந்து போவாய். மழை பெய்யத் தொடங்கி விட்டது, ஒரு பெரும் புயலைக் கொண்டு வருவது போல காற்றுக் காணப்படு கிறது.''

கடற்கரைக் கிராமத்திலிருந்து நகரத்திற்குச் சென்று வர விரைந்து நடந்தாலும் மூன்று மணி நேரம் பிடிக்கும், ஆனால் அண்டை வீட்டுக்காரியின் ஆலோசனையை மேரி செவி மடுக்கவில்லை. ''இதற்கு மேலும் நான் உங்களுக்குக் கண்ணறாவியாக இருக்க மாட்டேன். உள்ளபடியே, ரொட்டி, தேயிலை, அல்லது மாவு இவற்றை ஒருபோதும் நான் பெறாத எந்த ஒரு குடும்பமும் இல்லை. எனது மோதிரத்தை அடகு வைப்பேன். எல்லாவற்றை யும் அது முறையாகப் பார்த்துக் கொள்ளும்,'' என்று அவள் கூறினாள். நகரத்திற்குச் சென்று திரும்பினாள், மறுநாள் காய்ச்சலாலும், புலப்பத்தாலும் படுக்கையில் சாய்ந்தாள். அன்புள்ளம் கொண்ட பக்கத்து வீட்டுக் காரியால் நகரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட மருத்துவர், மழையாலும், மாலை நேரப் பனியாலும் இரட்டை நிமோனியாக் காய்ச்சல் கண்டிருப்பதாகத் தெரிவித்தார். ஒரு வாரத் திற்குப் பிறகு லங்கிரேனின் இரட்டைப் படுக்கையானது வெறிச்சோடிக் கிடந்தது.

இவனது மகளைப் பார்த்துக் கொள்வதற்காக அண்டை வீட்டுக்காரி இவனது வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அவள் விதவையாகவும், இந்த உலகத்தில் தனிமையில் விடப்பட்டவளாகவும் இருந்தாள், ஆகவே இது அவளுக்கு ஒரு கடினமான பணியாக இருக்கவில்லை. ''மேலும் இந்தக் குழந்தை எனது நாட்களை நிரப்பியது,'' என்று தொடர்ந்து அவள் கூறினாள்.

நகரத்திற்குச் சென்று வேலையினின்றும் நீங்கி, தனது தோழர்களுக்குப் பிரிவு வணக்கம் தெரிவித்து விட்டு, சின்ன ஆஸ்ஸோலை வளர்ப்பதற்காக லங்கிரேன் வீடு திரும்பினான். குழந்தை நடக்கக் கற்றுக் கொள்கின்ற வரை, ஒரு வளர்ப்புத் தாய் போல மாலுமியின் வீட்டிலேயே அந்த விதவை தங்கினாள். ஆனால் வாசற்படியைத் தாண்டிச் செல்வதற்குத் தனது காலை உயர்த்திய போது, ஆஸ்ஸோல் கீழே விழுவதினின்றும் நின்ற அப்பொழுதிலிருந்து குழந்தையை தான் கவனித்துக் கொள்ள முடிவுசெய்திருப்பதாக லங்கிரேன் அறிவித்தான். உதவியும் அன்பும் காட்டியதற்காக அந்தப் பெண்ணுக்கு நன்றி பாராட்டிக் கொண்டு, தனிமையான மனைவியை இழந்த வாழ்க்கையிலே தலைப்பட்டு, சின்னக் குழந்தையிடம் தனது அனைத்துச் சிந்தனைகளையும், நம்பிக்கைகளையும், அன்பையும், நினைவுகளையும் ஒருமுகப்படுத்தலானான்.

கடலிலே அலைந்த வாழ்வின் பத்தாண்டு

கள் அதிகளவு செல்வத்தை அவனுக்குத் தரவில்லை. அவன் வேலை செய்யத் தொடங்கினான். விரைவிலேயே இவனது விளையாட்டுப் பொருள்களை நகரத்திலிருந்த கடைகள் விற்பனை செய்யத் தொடங்கின. நன்கு செதுக்கப்பட்ட சிறிய மாதிரிப் படகுகள், தட்டையான அடிப்பரப்புப் படகு கள், ஒன்றிரண்டு அடுக்குகளைக் கொண்ட மிதவைக் கலங்கள், இன்ப உலாப் படகுகள் மற்றும் நீராவிப் படகுகள் — ஒரே வார்த் தையில் சொன்னால், அவன் மிக நன்றாக அறிந்திருந்த எல்லாமே, இப்போது ஓரளவுக்கு அவனது கடற் பயண வாழ்க்கையின் தீரச்செயல்களை ஈடு செய்தன. இந்த வழியில் லங்கிரேன் வசதியான வாழ்க் கைக்குப் போதுமானதை ஈட்டினான். அவன் சமூகப் பழக்க வழக்கத்திற்கு ஏற்ற மனிதன் அன்று, ஆனால் இப்பொழுது, அவனது மனைவியின் மரணத்திற்குப் பிறகு, அவன் ஏதோ மாதிரியாக ஒதுங்கி வாழலானான். சில வேளை விடுமுறை நாட்களில் அருந் தகத்தில் அவன் காணப்பட்டான். ஆனாலும், மேசையில் அமராது மது வழங்குமிடத்தில் வோத்கா கிளாஸை விரைந்து பருகி, தனது எல்லாவகையான அண்டை அயலவர் களுடைய வினாக்களுக்கும் வாழ்த்துகளுக்கும் 'ஆமாம்', 'ஹலோ', 'போய் வருகிறேன்', 'நன்றாக இருக்கிறேன்' என்று சுருக்கமாகச் சொல்லியபடி அவன் போய் விடுவான். விருந்தினர்களை அவன் நிறுத்திவைப்பதில்லை.

எந்த வலிமையையும் பயன்படுத்தாது அவர் களை விலக்கிவிட்டான், இன்னும் உறுதியாக, குறிப்புகளாலும், சாக்குப் போக்குகளாலும் மேற்கொண்டு தங்கி இருப்பதைத் தவிர்க்கும் ஒரு காரணத்தைக் கண்டுபிடிப்பதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லாதபடி செய்தான்.

மறுபுறம், இவனும் யாரையும் பார்க்கவில் லை; இவ்வாறாக, அவனுக்கும் அவனது உடன் கிராமத்தவர்க்கும் இடையே ஒரு மனத்தாங்கல் என்ற சுவர் எழுந்தது. லங்கிரேனுடைய வேலையானது, அவன் தயாரித்த விளையாட்டுப் பொருள்கள், கிராம விவகாரங்களில் எந்தவகையிலேனும் சார்ந் திருக்குமேயானால், இந்த உறவின் விளைவு கள் குறித்து அவன் ஆழமாகச் சிந்தித் திருக்க முடியும். எல்லாவித உபயோகப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் நகரத்திலேயே அவன் வாங்கினான். லங் கிரேனுக்கு விற்றவற்றில் ஒரு தீப்பெட்டியும் இருந்ததென்று மென்னர்ஸ் வீண்பெருமை பேச முடியவில்லை. வீட்டு வேலை அனைத் தையும் லங்கிரேன் தானே செய்தான். ஒரு மனிதனுக்கு வழமையற்ற, ஒரு சிறுமியை வளர்க்கின்ற கடினமான கலையைப் பொறு மையாகக் கற்றுக் கொண்டான்.

ஆஸ்ஸோலுக்கு இப்போது வயது ஐந்து. அவனது மடியிலே அவள் அமர்ந்து, அவனது பொத்தான்களிட்ட மார்புச்சட்டையைக் கண்டு மலைப்புற்ற போதோ, காற்றில் பாடிச்

செல்லும் கனத்த ராகங்களை, மாலுமி பண்ணிசைகின்ற போதோ, கூரறிவுமிக்க தனது அன்பான சிறிய முகத்தைத் திரும்பிப் பார்க்கின்ற போது அவளது தந்தை மிகவும் மென்மையாக முறுவலிக்கத் தொடங்கி னான். ஒரு குழந்தை பாடிய போது, அங்குமிங்கும் குறைபட்ட உச்சரிப்புடன், கழுத்தைச் சுற்றி வெளிறிய நீல நிற நாடாவை மாட்டிக் கொண்ட ஒரு கரடி நடனமாடுவதாக, அந்த ராகங்கள் ஒருவர்க்கு நினைவுப்படுத்தும். இதே நேரத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் நிழல் தந்தை மீது படிந்து, மகளையும் மூடி மறைத்துவிடும்.

அது இளவேனிற் காலம், முன் இளவேனிற் காலமானது குளிர்காலத்தைப் போலக் கடுமை யானதாக இருந்தது, ஆனால் இன்னமும் அது வித்தியாசமானதாகவே இருந்தது. வாட்டுமாறு வடக்கிலிருந்து கடல் நோக்கி வீசும் காற்று, குளிர்ந்த நிலத்தின் குறுக்காக மூன்று வாரங்களாக வீசிக் கொண்டிருந்தது.

கடற்கரையில் இழுக்கப்பட்ட மீன்பிடிப் படகுகள், இருண்ட ஓடக்கட்டைகளின் ஒரு நீண்ட வரிசையை ஏற்படுத்தி இருந்தன. வெள்ளை மணலில் ஏதோ ராட்சச மீன்களின் முதுகெலும்புகளைப் போல அவை காட்சி யளித்தன. அத்தகைய வானிலையில் கடல் மேற்செல்ல எவருக்கும் துணிவில்லை. கிராமத் தின் ஒரே தெருவும் வெறிச்சோடிக் கிடந்தது; குளிர்ந்த சுழற் காற்று, குன்றுகளினின்றும் கடற்கரை வழியாக வெற்றிடமான தொடு

வானத்தை நோக்கி வீசி, 'திறந்த வெளி'யைப் பயங்கரமான சித்திரவதைக்குள்ளதாக மாற்றியது. கபேர்னாவின் புகைப்போக்கிகள் அனைத்துமே, காலைக் கருக்கல் முதல் மாலை மறையும் வரை புகைந்து, கூர்மையான கூரைகளின் மீது புகையைப் பரப்பின.

எனினும், கடுமையாக வீசிய வடதிசைக் காற்று லங்கிரேனை, தெளிவான நாளில் கடலுக்கும் கபேர்னாவுக்கும் மேலாக தங்க நூல் நூற்றது போலப் படுக்கை விரித்த கதிரவனைக் காட்டிலும் அவனது வசதிமிக்க சிறிய வீட்டிலிருந்து மிக அடிக்கடி வெளியேற வைத்தது. நீளமான மரத்தாலான அலைதாங்கியின் முனை வரை லங்கிரேன் செல்வதுண்டு. அங்கே தனது சுங்கானை நீண்ட நேரம் புகைத்துக் கொண்டிருப்பான், காற்றோ புகையை அடித்துக் கொண்டு செல்லும். அலைகள் பின்வாங்கும் போது கடற்கரையருகே வெளிப்பட்ட மணற்பாங்கான அடிப்பரப்பைக் காண்பான். இருளை நோக்கி ஊடுருவி முன்னேறி வருகின்ற அலைகளிலே நுரை பொங்கியது. புலம்பலும், இரைச்சலும், நிமிர்வெழுச்சி கொண்ட நீரின் பெருத்த ஓசையும், காற்றின் விரைவான வீச்சும் அண்மையில் கேட்கும். அது லங்கிரேனுடைய புண்பட்ட ஆன்மாவிற்கு சோர்வான, செவிடாக்கும் படியான உணர்வினைத் தந்தது, அது ஆழ்ந்த உறக்கத்திற்குச் சமமானதாக இருக்கும்.

இது போன்ற ஒரு நாளில் மென்னர்ஸினுடைய பன்னிரண்டு வயதுப் பையன் ஹின், தனது தந்தையினுடைய படகு அலைதாங்கிக்கு அடியில் கூர்ங்கழிகளுக்கிடேயே மோதிக்கொண்டு கிடப்பதையும், அதனது பக்கங்கள் உருக்குலைந்து கொண்டிருப்பதையும் கவனித்தவனாய், இது பற்றி தனது தந்தையிடம் கூறச் சென்றான். புயல் அப்பொழுதுதான் வீசத் தொடங்கியிருந்தது; தனது படகைக் கரையில் இழுத்துப் போட மென்னர்ஸ் மறந்து போயிருந்தான். கடற்கரைக்கு விரைந்து போன அவன் அலைதாங்கியின் முனையில் தன் பக்கம் முதுகைக் காட்டி நின்றபடி லங்கிரேன் புகைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தான். வேறு எந்த நபரும் காணப்படவில்லை. அலைதாங்கி நெடுகிலும் பாதிதூரம் வரை மென்னர்ஸ் நடந்து சென்று, சீற்றத்தோடு அடித்துக் கொண்டிருந்த நீருக்குள்ளாக இறங்கி, தனது படகை அவிழ்த்து விட்டான்; பிறகு, அதில் நிமிர்ந்து நின்றபடி, கழிகளின் வழியாகத் தன்னை இழுத்துக் கொண்டு சென்று கரையை நோக்கி நகரத் தொடங்கினான். அவன் துடுப்பை எடுத்துச்செல்ல மறந்து விட்டான். தடுமாறியபடி அடுத்த கழியைப் பிடிக்க அவன் தவறிய போது, ஒரு வலுவான காற்று படகின் முன் பகுதியை அலைதாங்கியினின்றும் விடுத்து பெருங்கடலை நோக்கிச் செல்லுமாறு அடித்தது. முழுமையாகக் கையை நீட்டி

முயற்சித்த போதும், இப்பொழுது மென்னர்ஸால் பக்கத்திலிருந்த கூர்ங்கழியைப் பிடிக்க முடியவில்லை. காற்றும் அலைகளும், படகை அசைந்தாட்டியபடி, தொலைதூரத்திற்கு அழிவை நோக்கி இழுத்துச்சென்று கொண்டிருந்தன. தனது இக்கட்டான நிலையை மென்னர்ஸ் உணர்ந்து கொண்டு, நீருக்குள் குதித்து கரைக்கு நீந்திச் செல்ல விரும்பினான், ஆனால் இந்த முடிவு எடுத்தது மிகவும் சுணங்கிப் போய்விட்டது. ஏனெனில் அலைதாங்கியின் முனை அருகே போதுமான ஆழமும் சீறிக்கொண்டிருந்த அலைகளும், சாவைத் தவிர்க்க முடியாது என்று எண்ணவைத்த இடத்திலே இப்போது படகு சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. லங்கிரேனுக்கும் கொந்தளிப்பான தொலைவிற்கு அடித்துச் செல்லப்பட்ட மென்னர்ஸுக்கும் ஏறத்தாழ இருபது மீட்டர் இடைவெளியே இருந்தது. இன்னமும் காப்பாற்றக்கூடிய வாய்ப்பு இருந்தது, ஏனெனில் வலுவான முனை கொண்ட கயிற்றுச் சுருள் லங்கிரேனுக்கு அருகே அலைதாங்கியில் தொங்கிக் கொண்டிருந்தது. புயற்காற்று வீசுகின்ற போது எந்தப் படகையும் தரை சேர்க்கவும், அலைதாங்கியை விட்டு விலகிச் சென்றதை இழுக்கவும் அந்தக் கயிறு அங்கே கிடந்தது.

''லங்கிரேன்!'' மென்னர்ஸ் அச்சத்தால் கத்தினான். ''அங்கே வெறுமனே நிற்காதே! நான் இழுத்துச் செல்லப்படுவதை நீ பார்க்கவில்லை

யா? அந்தக் கயிற்றை என்னிடம் வீசு!''

வெறிபிடித்த அந்த மனிதனை அமைதி யாகப் பார்த்தபடி தனது சுங்கானை முன்னிலும் வலுவாக இழுத்தபடி எதுவும் சொல்லாமல் லங்கிரேன் இருந்தான். பிறகு, நடந்து கொண்டிருப்பதைச் சரியாகப் பார்க் கும் பொருட்டு, தனது வாயிலிருந்து சுங்கானை எடுத்தான்.

''லங்கிரேன்!'' மென்னர்ஸ் கெஞ்சினான். ''நான் சொல்வது உனக்குக் கேட்கும் என்று எனக்குத் தெரியும். நான் மூழ்கிப் போவேன்! என்னைக் காப்பாற்று!''

ஆனால் லங்கிரேன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை; வெறிபிடித்த புலம்பலை அவன் கேட்காதது போலவே காணப்பட்டது. மென் னர்ஸினுடைய குரல் சரியாகக் கேட்காத அளவுக்குப் படகு கடலில் வெகு தூரம் எடுத்துச் செல்லப்பட்டது வரை அவன் நகரக் கூட இல்லை.

மென்னர்ஸ் அச்சத்தால் தேம்பியழுது, உதவிக்கு மீனவர்களை அழைக்க ஓடும்படி மாலுமியைக் கெஞ்சினான்; அவனுக்கு வெகுமதி தருவதாக உறுதி சொன்னான், அவனை அச்சுறுத்தவும் வசை மொழியவும் செய்தான்; ஆனால் லங்கிரேன் செய்த தெல்லாம், தத்தளித்தபடி சுற்றிச் சுழன்று விரைந்து மறையப்போகும் படகைக் காண் பதைத் தவறவிடக் கூடாது என்பதற்காக, அலைதாங்கியின் முனையை நெருங்கிநடந்து சென்றதுதான்.

''லங்கிரேன், என்னைக் காப்பாற்று!'' ஒரு வீட்டின் கூரையிலிருந்து வீட்டிற்குள் இருக்கும் யாரோ ஒருவரிடம் கூறுவது போல இந்த வார்த்தைகள் அவனுக்கு மந்தமாக வந்தன.

பிறகு, தனது நுரையீரல்களில் காற்றை நிரப்பிக் கொண்டு, பலமாக மூச்சு இழுத்துக் கொண்டு, ஒரு வார்த்தை கூட காற்றில் எடுத்துச் செல்லாதபடி, லங்கிரேன் உரக்கக் கத்தினான்: ''இப்படித் தான் அவளும் உன்னிடம் மன்றாடினாள்! நீ இன்னமும் உயிரோடு இருக்கும் போது, அதை நினைத் துப் பார், மென்னர்ஸ், மறந்து விடாதே!''

பிறகு அழுகுரல் நின்றது, லங்கிரேன் வீடு சென்றான். இப்பொழுது மிகவும் தாழ்வாக எரிந்து கொண்டிருந்த விளக்குக்கு முன்னால் சிந்தனை வயப்பட்டவனாய் உட்கார்ந்து கொண்டிருந்த தனது தந்தையைப் பார்க்க ஆஸ்ஸோல் விழித்தாள். தன்னை அழைக் கின்ற குழந்தையின் குரல் கேட்டு, அவன் அவளிடம் சென்று, பாசத்தோடு அவளை முத்தமிட்டு, சுருண்டு கிடந்த போர்வையை எடுத்துப் போட்டான்.

''தூங்கப் போ, கண்ணே. விடிவதற்கு இன்னும் நீண்ட நேரம் இருக்கிறது,'' என்றான் அவன்.

''என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?''

''ஒரு கறுப்பு பொம்மை செய்து முடித் தேன், ஆஸ்ஸோல். இப்போது தூங்கப் போ.''

மென்னர்ஸ் காணாமற் போன செய்தி மறுநாள் கிராமத்தில் ஆரவாரத்தை ஏற் படுத்தியது. ஐந்து நாட்களுக்குப் பிறகு, முற்றிலும் கோபத்தால் செத்துக் கொண் டிருக்கிற அவன் கொண்டுவரப்பட்டான். அக்கம்பக்கத்திலுள்ள ஒவ்வொரு கிராமத் திற்கும் அவனது கதை விரைவாகப் பரவியது. மாலை வரை மென்னர்ஸ் திறந்த கடலிலே இருந்தான்; பிதற்றிக் கொண்டிருந்த கடைக் காரனைக் கடலில் வீழ்த்தி விடும்படி தொடர்ந்து அச்சுறுத்தி, மோதி உடைக்கின்ற அலைகளோடு பயங்கரமான அவனது போரின் போது, படகின் அடிப்பகுதியிலும், பக்கவாட்டு களிலும் அவன் கடுமையாக அலைக்கழிக் கப்பட்டான்; பின்னர் காஸ்ஸேத்தை நோக்கி வந்து கொண்டிருந்த **லுக்ரேஷியா** என்னும் கப்பலால் தூக்கிவரப்பட்டான். கடும் குளிரில் கிடந்ததும், அவன் அடைந்த மனக்கிலியும் மென்னர்ஸினுடைய நாட்களை ஒரு முடிவுக் குக் கொண்டு வந்தன. பூமியிலும் அவனு டைய கற்பனையிலும் எத்தனை வகையான சீரழிவுகள் ஏற்பட முடியுமோ அவை லங்கிரேனுக்கு ஏற்பட வேண்டும் என வசை மொழிந்து கொண்டே, ஒரு நாற்பத் தெட்டு மணிநேரம் முழுமையாக அவன் உயிர்வாழவில்லை. மென்னர்ஸினுடைய அழி வை மாலுமி பார்த்துக் கொண்டிருந்தது, அவனுக்கு உதவி செய்ய மறுத்தது பற்றிய கதை கபேர்னா ஊர்வாசிகளிடையே அதிர்ச் சியை ஏற்படுத்தியது. செத்துக் கொண்டிருந்

தவன் சிரமப்பட்டு மூச்சு விட்டது, அழுது அரற்றிக் கொண்டிருந்தது அனைத்தும் இக் கதையை மிகவும் உறுதிசெய்வதாக இருந்தது. லங்கிரேனுக்கு இழைக்கப்பட்ட தீங்கைக் காட்டிலும் மிகப் பெரியதை நினைவு வைக்கவும், மேரிக்காகத் தனது வாழ்நாள் முழுக்க அவனைப் போலத் துயரப்படவும் அவர்களில் எவரும் இல்லை. லங்கிரேனுடைய அமைதியால் அவர்கள் வெறுப்புற்றும், வியப்புற்றும், அதிர்ச்சியுற்றும் போனார்கள். மென்னர்ஸிடம் அவன் கடைசி வார்த்தை களைக் கூச்சலிட்டுச் சொல்லும் வரை லங்கிரேன் அங்கே பேசாமல் நின்றான்; நகராமல், உறுதியாக, அமைதியாக, மென் னர்ஸ் மீது இகழ்ச்சி தோன்ற ஒரு நீதி பதியைப் போல — அவன் நின்றான். அவனது மௌனத்தில் வெறுப்பை விட மேலான ஏதோ ஒன்று இருந்தது. அவர்கள் எல்லாருமே இதை உணர்ந்து கொண்டார்கள். அவன் உரக்கக் கத்தியிருப்பானேயானால், தனது அவல மகிழ்ச்சியை, சைகை அல்லது அமளி மூலமாகவோ, மென்னர்ஸ் நம்பிக்கை இழந்து போனதைப் பார்த்த வெற்றிப் பெரு மிதத்தை வேறு எந்த வழியிலேனும் காட் டியிருப்பானேயானால் மீனவர்கள் அவனைப் புரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் அவர் கள் செயல்படுவதற்கு மாறாக அவன் நடந்து கொண்டு விட்டான் — ஆழ்ந்த உணர்ச்சி யைத் தூண்டுமாறும், விநோதமாகவும் நடந்து கொண்டு மற்றவர்களினின்றும் தன்னை

உயர்த்திக் கொண்டான் — ஒரு வார்த்தையில் சொன்னால், மன்னிக்க முடியாத ஒன்றை அவன் செய்துவிட்டான். அதன் பிறகு தெருவில் அவனுக்கு யாரும் வணக்கம் செலுத்தவோ, அவனிடம் கை கொடுக்கவோ முன்வரவில்லை, அல்லது தெரிந்ததைக் காட்டிக் கொள்ள நட்புமுறையில் பார்க்கவோ, வாழ்த்துச் சொல்லவோ இல்லை. இப்போழுதிலிருந்து கடைசி வரை அவன் கிராம விவகாரங்களினின்றும் ஒதுங்கி தனித்து இருந்து வந்தான்; தெருவிலே இவனைப் பார்க்கின்ற பையன்கள் இவனுக்குப் பின்னால் நின்று, ''லங்கிரேன் மென்னர்ஸை மூழ்கடித்து விட்டான்!'' என்று கத்துவார்கள். இதை அவன் பொருட்படுத்தவே இல்லை. அருந்தகத்திலோ, படகுகளுக்கிடையே கடற்கறையிலோ மீனவர்கள் இவனது முன்னிலையில் பேசுவதை நிறுத்திக் கொள்வதையும், கொள்ளை நோய் வந்தவனைப் போல அவனிடமிருந்து நகர்வதையும் அவன் கவனிக்காததாகக் காணப் பட்டது. மென்னர்ஸினுடைய நிகழ்ச்சியானது லங்கிரேனுக்கும் கிராமத்தவர்களுக்கும் இடையே முன்னமேயே ஓரளவுக்கு இருந்த மனத்தாங்கலை வலுப்படுத்திக் கொள்ள உதவியது. முழுமையாக மாறி, இது தவிர்க்க முடியாதபடி ஒருவருக்கொருவர் வெறுப்பை ஏற்படுத்தியது, அதன் நிழல் ஆஸ்ஸோல் மீதும் படிந்தது.

நண்பர்கள் எவருமின்றியே இச்சிறுமி வளர்ந்தாள். நீரில் கிடக்கும் கடற்பாசி

போல, பெற்றோர்களின் மறுப்பிற்கிடமற்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட கடுமையான குடும்பச் சட்டங்களில் தோய்ந்து பின்பற்றும் கபேர்னாவில் வசித்த, உலகத்திலுள்ள எல்லாக் குழந்தைகளும் போல, சுலபமாகப் பாதிக்கப்பட்ட அவளது வயதையொத்த இரண்டு அல்லது மூன்று டஜன் குழந்தைகள் தங்களது பாதுகாப்பு மற்றும் அக்கறை என்ற வட்டத்தினின்றும் ஆஸ்ஸோலை ஒரேயடியாக ஒதுக்கி வெளியேற்றி விட்டார்கள். இயல்பாகவே இது படிப்படியாக, வயதுவந்தவர்களின் கடிந்துரைகளாலும், வசைமொழிகளாலும் பயங்கரமாக ஒதுக்கி வைக்கக் கூடிய அளவுக்குச் சென்றது. இது மோசமான பேச்சாலும், வதந்தியாலும் கூடுதலாகி குழந்தைகளின் மனத்தில் மாலுமியின் குடும்பத்தைப் பற்றிய ஓர் அச்சமாக வளர்ந்து உருவெடுத்தது.

மேலும், லங்கிரேனின் தனிமைப்பட்ட வாழ்க்கையானது, வம்புபேச்சின் வலிப்பு நோய்க்குரிய நாக்குகளில் இப்பொழுது புடைப்பை ஏற்படுத்தியிருந்தது; மாலுமி எங்கேயோ, யாரையோ கொலை செய்து விட்டான், ஆகவே தான் அவன் எந்தக் கப்பலுக்கும் அழைக்கப்படவில்லை என்றும், 'குற்ற உணர்வின் வேதனையால்' அவன் எத்தனை சிடுசிடுப்பானவனாகவும், இணங்கிப் பழகும் பாங்கற்றவனாகவும் மாறிவிட்டான் என்றும் அவர்கள் பேசினார்கள். விளையாடுகின்ற போது ஆஸ்ஸோல் அருகே வந்தால்,

குழந்தைகள் அவளைத் தூரத் துரத்துவார்கள், அவள் மீது சேற்றை வீசுவார்கள்; அவளது தந்தை மனித இறைச்சியைச் சாப்பிட்டான் என்றும், இப்பொழுது கள்ள நோட்டு அடிப்பவனாக மாறியிருக்கிறான் என்றும் கூறி அவளை இடித்துரைப்பார்கள். அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஒன்றன் பின் ஒன்றான அவளது வெகுளித்தனமான முயற்சிகள் மோசமான அழுகையுடனும், வடுக்களுடனும், கீறல்களுடனும், **பொது மக்கள் கருத்து** என்ற பிற சுட்டிக்காட்டல்களுடனும் முடிந்தன; இறுதியில் அவள் குறைபட்டுக்கொள்வதை நிறுத்தினாள், ஆனால் இன்னமும் கூட சில வேளைகளில் தனது தந்தையிடம் கேட்பாள்:

''ஏன் அவர்கள் நம்மை விரும்புவதில்லை? எனக்குக் கூறுங்கள்.''

''ஆ! ஆஸ்ஸோல், எப்படி விரும்புவது அல்லது நேசிப்பது என்பது அவர்களுக்குத் தெரியாது. நேசிக்க ஒருவர் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும், அதை அவர்களால் செய்ய முடியாது.''

'''தெரிந்திருக்க வேண்டும்' என்று எதைச் சொல்கிறீர்கள்?''

''இது தான்!''

இதற்கு அவன் குழந்தையைக் கட்டியணைத்து அவளது சோகமான கண்களில் வாஞ்சையோடு முத்தமிடுவான், அவளும் பேரின்ப மகிழ்ச்சியால் கண்களை இறுக்க மூடிக்கொள்வாள்.

ஆஸ்ஸோலுடைய விருப்பமான பொழுது போக்கு, ஒரு மாலை நேரத்திலோ விடுமுறையிலோ, தனது பசைப் பாண்டங்களையும், கருவிகளையும், முற்றுப் பெறாத வேலையையும் அங்கே வைத்து விட்டு, முன்றானையைக் கழற்றி வைத்து விட்டு, பற்கள் சுங்கானைப் பற்றியிருக்க, ஓய்வெடுக்க உட்கார்ந்த அவளது தந்தையின் மடி மீது ஏறி அமர்வதாகத்தான் இருந்தது. தனது தந்தையினுடைய தோளின் பாதுகாப்பான வளையத்திற்குள்ளாக முறுக்கிக் கொண்டும், திரும்பிக் கொண்டும், பொம்மைகளுடைய பல்வேறு பாகங்களை அவள் தொட்டுப் பார்ப்பதும், ஒவ்வொன்றினுடைய நோக்கத்தைப் பற்றி வினவுவதும் உண்டு. இந்த மாதிரியாக மக்களும் வாழ்க்கையும் பற்றிய வித்தியாசமான, கற்பனை உரை தொடங்கியது. லங்கிரேனின் முன்னாளைய வாழ்க்கைமுறை காரணமாக எல்லாவித எதிர்பாரா நிகழ்ச்சியும், பொதுவான சந்தர்ப்பமும், வியப்பூட்டக் கூடியதும், வழமையற்ற நிகழ்ச்சிகளும் அந்த உரையில் முக்கியமாக இடம் பெற்றன. லங்கிரேன் தன் மகளுக்குப் பல்வேறு கயிறுகளின், கப்பற்பாய்களின், கப்பல் தளவாடங்களின் பெயர்களைச் சொல்லி வரும்போது, படிப்படியாக அவன் சாதாரண விளக்கத்திலிருந்து பல்வேறு கிளைக் கதைகளுக்குச் செல்வான். அதில் இப்போது ஒரு பாரஞ்சாம்பி, இப்போது ஒரு சுக்கான், இப்போது ஒரு கப்பற்பாய்மரம் அல்லது இது அல்லது வேறு வகையான மரக்கலம்

மற்றும் இடம் பெற்ற நிகழ்வுகள் இப்படி தனித்தனியான விளக்கங்கள் முதல் அலை வீசும் கடல் மேற்செல்லும் கப்பலோட்டிகளின் சுற்றுப் பயணத்தின் வீசியடிக்கும் வருணனைகள் வரை, எதார்த்தமும், அவனது கற்பனையில் உருவான கருத்துருவோடு எதார்த்தமும் கூடிய மூடப் பழக்கவழக்கங்களைப் பின்னிப்பிணைந்த வாறு மேன்மேலும் சொல்லிக் கொண்டிருப்பான். இதில் **புலிப்பூனை,** கப்பல் உடைபடுதலை முன்னறிவித்தல், பயணத்தின் போது ஒருவருடைய திசையை இழந்து விடாதிருக்க கீழ்ப்படிந்து செயல்பட வேண்டிய பேசுகின்ற பறக்கும் மீன், பறக்கின்ற டச்சுக்காரன் அதனது மூர்க்கத்தனமான கப்பல் குழுவினர்களோடு, அடையாளங்கள், பேய்கள், கடற்கன்னிகள் மற்றும் கடற்கொள்ளையர்கள் ஆகியன தோன்றின. ஒரே வார்த்தையில் சொன்னால், வேலையற்ற நேரத்தில் அல்லது ஏதேனும் விருப்பமான அருந்தகத்தில் நேரத்தைப் போக்க ஒரு மாலுமிக்கு உதவிய எல்லாக் கட்டுக் கதைகளுமே. உடைபட்ட கப்பல் குழுவினர், காட்டுமிராண்டிகளாக மாறி எப்படிப் பேசுவது என்பதை மறந்து போனவர்கள், அதிசயிக்கத்தக்க வகையில் புதைந்து போன செல்வங்கள், தண்டிக்கப்பட்ட கலகக்காரர்கள் ஆகியன குறித்தும் லங்கிரேன் பேசினான். புதிய கண்டம் பற்றிய கொலம்பஸினுடைய கதையை முதலாவது கேட்ட நபர்களை விட, ஒரு வேளை, சிறுமி அதிக அக்கறையோடு

கேட்டாள். லங்கிரேன், சிந்தனை இழந்தவனாய், மௌனமாகி விடும் போது, ''இன்னும் எனக்குச் சொல்லுங்கள்,'' என்று ஆஸ்ஸோல் கெஞ்சுவாள். தலை நிறைய அதிசயமான கனவுகளுடன் அவனது மார்பிலே அவள் தூங்கிப் போவாள்.

லங்கிரேன் எதைச் செய்திருந்தாலும் அதை வாங்குவதில் மகிழ்ந்து, நகரத்திலுள்ள பொம்மைக் கடையிலிருந்து வரும் விற்பனையாளனின் வருகையானது, எப்பொழுதுமே அவளுக்கு மிகப் பெரிய, பொருள் ஆதாயமான ஒன்றாக இருந்தது. தந்தையினுடைய நல்லெண்ணத்தைப் பெறவும், நன்கு பேரம் பேசவும், அந்தச் சிறுமிக்காக ஓரிரு ஆப்பிள்கள், ஓர் அப்பம், கையளவு பருப்பு இவற்றை அந்த விற்பனையாளன் எடுத்து வருவதுண்டு. லங்கிரேன் வழக்கமாக ஒரு பொம்மைக்கான உண்மை விலைதான் கேட்பான், ஏனெனில் பேரத்தை அவன் அறவே வெறுப்பவன்; ஆனால் அந்த விற்பனையாளன் விலையைக் குறைப்பதுண்டு. ''ஏன், இந்தப் படகைச் செய்வதற்கு எனக்கு ஒரு வாரக் காலம் பிடித்தது. (படகு ஒன்பது அங்குல நீளம் இருந்தது.) எவ்வளவு வலுவாகவும் செப்பமாகவும் இருக்கிறது பார். ஏன், புயலில் இது பதினைந்து பேரைக் கொள்ளும்,'' என்று லங்கிரேன் சொல்வான். இறுதியில், சிறுமியினுடைய மென்மையான மழலையும், ஆப்பிளோடு கூடிய அவளது படபடப்பும் லங்கிரேனுடைய தீர்மானத்தையும்

விவாதம் செய்ய வேண்டும் என்ற வேட்கையையும் தளர்த்திவிடும்; அவன் விட்டுக் கொடுத்து விடுவான், விற்பனையாளன் நன்கு செய்யப்பட்ட அருமையான பொம்மைகளைத் தனது கூடையில் நிரப்பிக் கொண்டு, மீசைக்குள்ளாகச் சிரித்தபடி வெளியேறுவான்.

வீட்டு வேலை அத்தனையும் லங்கிரேன் தானே செய்தான்: விறகு உடைத்தான், நீர் சுமந்தான், அடுப்பு மூட்டினான், சமைத்தான், துணிகளை வெளுத்தான், சலவைப் பெட்டி போட்டு தேய்த்தான், இத்துடன் அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருளீட்ட நேரத்தையும் ஒதுக்கினான். ஆஸ்ஸோலுக்கு எட்டு வயது ஆன போது தந்தை அவளுக்குப் படிக்கவும் எழுதவும் கற்பித்தான். அவ்வப்பொழுது அவளை நகரத்திற்குக் கூட்டிச் செல்லவும் தொடங்கினான். கடையில் கொஞ்சம் பணம் வாங்கி வர வேண்டி இருந்தாலோ, புதிய பொம்மைகள் சிலவற்றை விநியோகித்து வர வேண்டி இருந்தாலோ, பின்னர் அவளைத் தனிமையில் அனுப்பவும் செய்தான். அது அடிக்கடி ஏற்படவில்லை, எனினும் கபேர்னாவிலிருந்து லிஸ் நான்கு மைல் தூரமே இருந்தது. ஆனால் சாலையோ காட்டின் வழியாகச் சென்றது. ஒரு குழந்தையை அச்சுறுத்தக் கூடியவை காட்டில் அநேகம் இருந்தன, மேலும் உடல் சார்ந்த ஆபத்து, நகரத்திற்கு அருகில் இருப்பதால் ஏற்படுவது அரிதுதான் என்றாலும், கவனத்தில் கொள்ள

வேண்டியதாகத் தான் இன்னமும் இருந்தது. அதன் காரணமாக அருமையான நாட்களில், காலை வேளையில், காட்டில் உள்ள சாலை, நெடுகிலும் சூரிய வெளிச்சத்தாலும், மலர் களாலும், பேரமைதியாலும் நிறைந்திருக்கும் போது, அவளது கற்பனையில் ஏற்படுகின்ற எந்தவிதப் பொய்த் தோற்றத்தாலும் எளிதில் பதியும் அவள் உள்ளம் அச்சுறுத்தப்படக் கூடாது என லங்கிரேன் அவளைத் தனியே செல்ல விடுவதுண்டு.

ஒரு நாள், நகரத்திற்குச் செல்லும் பயணத்தின் இடையில், மதிய உணவிற்காக அவள் தன்னோடு எடுத்துப் போயிருந்த அப்பத்தைச் சாப்பிடுவதற்காக சாலையின் ஓரத்தில் அச்சிறுமி அமர்ந்தாள். அப்பத்தை மென்று தின்றபடி மாறிமாறி ஒவ்வொரு பொம்மையாக எடுத்தாள்; இரண்டு அல்லது மூன்று அவளுக்குப் புதியனவாக இருந்தன: இரவு நேரத்திலே அவற்றை லங்கிரேன் உருவாக்கி இருந்தான். புதிய விளையாட்டுப் பொருள்களில் ஒன்று பந்தயப் படகின் ஒரு சிறிய வடிவம்; சிறிய வெள்ளைநிறக் கைவினைப் பொருளானது, பணக்கார வாடிக்கையாளர் களுக்கான விளையாட்டுப் பொருள்களின் அறைச் சுவர்களை மூட லங்கிரேன் வழக் கமாகப் பயன்படுத்தும் பட்டுத் துணி துண்டுகளால் ஆன செந்நிற கடற்பாய்களுடன் காணப்பட்டது. ஆயினும், இங்கே, பந்தயப் படகை முடித்திருந்த நிலையில், கடற்பாய்த் துணிக்குப் பொருத்தமான துணி கிடைக்கா

ததால், கைக்குக் கிடைத்த செந்நிற பட்டுத் துணி துண்டுகளைப் பயன்படுத்தியிருந்தான். ஆஸ்ஸோல் மகிழ்ச்சியுற்றாள். கொழுந்து விட்டெரிகிற, மகிழ்ச்சியூட்டும் வண்ணமானது ஒளிமிக்கதாக அவளது கைகளிலே பிரகாசித்தது. தனது கையில் நெருப்பை ஏந்திக் கொண்டிருப்பது போல அவள் கற்பனை செய்தாள். சாலையில் குறுக்கிட்ட, ஆணி அடிக்கப்பட்ட தூண்களோடு கூடிய சிறிய பாலத்திற்குக் கீழே ஓர் ஓடையானது அகல விரிந்து ஓடியது; வலமும் இடமுமாக ஓடை காட்டை நோக்கி ஓடியது. ''இதைச் சற்று நேரத்திற்கு நான் நீரிலே விட்டால், இது ஒன்றும் ஈரமாகிப் போய்விடாது. பிறகு அதை என்னால் உலர வைக்க முடியும்,'' ஆஸ்ஸோல் நினைத்துக் கொண்டிருந்தாள். காட்டுப் பாதையில் நீரோட்டத் திசை நோக்கிச் சென்றாள். அவளது மனத்தை மயக்கிய அந்தப் படகை ஓடையில் நீரின் விளிம்பில் கவனமாக வைத்தாள்; தெளிந்த நீரானது உடனடியாக கடற்பாய்களின் செந்நிறத்தைப் பிரதிபலித்தது; துணி வழியாகப் பாய்ந்த ஒளியானது மினுமினுக்கின்ற இளஞ்சிவப்பு நிறம் அடியிலிருந்த வெள்ளைக் கற்களின் மீது படிந்தது. ''எங்கிருந்து வருகிறாய், காப்டன்?'' கற்பனைப் பாத்திரத்தை மிகுந்த வினயத்தோடு ஆஸ்ஸோல் வினவினாள். அவளது வினாவிற்கு அவளே விடையளித்துக் கொண்டாள்: ''நான் வந்து... வந்து... சீனாவிலிருந்து வருகிறேன்.'' —

''நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்?'' — ''அந்த ஒன்றை என்னால் கூற முடியாது.'' — ''ஓ, ஆக நீ கூற மாட்டாய், காப்டன்? நல்லது, பிறகு கூடைக்குத் திரும்பு.'' காப்டன் மனநைவுற்று தான் வெறுமனே கேலி பேசியதாகக் கூறி, அவளிடம் யானையை மகிழ்வோடு காட்டவிருந்த போது, கரையை நோக்கி அடித்த மென்மையான அலை ஒன்று படகின் முன்புறத்தை ஓடைக்குள் வாகத் திருப்பி விட, ஓர் உண்மையான கலத்தைப் போல அது முழு வேகத்தோடு நீரோட்டத்தோடு ஓடியது. அந்தக் கணமே அவளது சுற்றுப்புறத் தன்மையும் மாறியது: அந்த ஓடை இப்போது ஒரு பெரிய நதியைப் போல குழந்தைக்குக் காணப்பட்டது, பந்தயப் படகும் மிகப் பெரியதாகத் தோன்றியது, அதை நோக்கி, நீரில் விழவிருந்த அவள் மௌனமான அச்சத்தில் தனது கைகளை நீட்டினாள். ''காப்டன் அச்சமுற்றுப் போய் விட்டான்'' என்று முடிவு செய்து, கரையில் சற்று தள்ளி எங்காவது ஒதுங்கி இருக்கும் என்ற நம்பிக்கையில், மறைந்து போய்க் கொண்டிருக்கும் விளையாட்டுப் பொருளை நோக்கி அவள் ஓடினாள். ஆஸ்ஸோல் விரைந்து செல்கையில் இலேசான, ஆனால் தடையாக இருந்த கூடையைத் தூக்கிய படி தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தாள்: ''அட கடவுளே! எங்ஙனம் இது நடந்திருக்க முடியும்? என்ன விபத்து...'' எழில் மிளிர நழுவிக் கொண்டிருக்கும் கடற்பாய்களின்

3*

அழகான முக்கோண வடிவத்தை இழந்து விடாதிருக்க முயன்றபடி தடுமாறிக் கீழே விழுந்து மீண்டும் ஓடினாள்.

முன்னர் ஒருபோதும் ஆஸ்ஸோல் காட்டிற்குள்ளாக இவ்வளவு தூரம் சென்றதேயில்லை. விளையாட்டுப் பொருளைப் பிடிக்க வேண்டும் என்ற பொறுமையற்ற ஆர்வத்தினால் முழுமையாக ஈர்க்கப்பட்டு, தனது சுற்றச்சூழல் பற்றி அவள் பொருட்படுத்தவே இல்லை; அவள் குறுநடை ஓட்டமாகச் சென்ற போது அவளது கவனத்தைக் கவரப் போதுமான தடைகள் கரையில் இருந்தன. கீழே விழுந்து கிடந்த மரங்களின் பாசிபடிந்த தண்டுகள், குழிகள், உயரமாக நின்ற பெர்ன்கள், காட்டு ரோஜாக்கள், முல்லையின மற்றும் கொட்டைப் புதர்கள் அவளது ஒவ்வொரு அடியையும் தடை செய்தன; அவற்றைக் கடந்து செல்கையில் அவள் படிப்படியாகக் களைப் புற்றாள். மூச்சுப் பிடித்துக் கொள்வதற் காகவோ, முகத்தில் பற்றிக் கொண்டிருந்த நூலாம்படையைத் துடைத்துக் கொள்வதற் காகவோ அவள் மிக அடிக்கடி நின்றாள். அகன்ற பரப்புக்கு வந்த போது, அடர்த்தியான நாணல் மற்றும் கோரைப் புற்கள் காணப்பட்டன. செந்நிறமாக மின்னுகின்ற கடற்பாய்கள் ஏறத்தாழ ஆஸ்ஸோல் பார்வையினின்றும் மறைந்துவிடும், ஆனால் வளைவை விரைவாகச் சுற்றிச் சென்று அவற்றைத் திரும்பவும் பார்த்து விடுவாள்.

காற்றோடு காற்றாய் கம்பீரமாகவும், நிலையான வேகத்தோடும் அவை ஓடிக் கொண்டிருந்தன. ஒரு முறை அவள் திரும்பிப் பார்த்தாள், பல வண்ணத் தோற்றங் கொண்ட அடர்ந்த காட்டின், இலைகளில் காணப்பட்ட மங்கலான ஒளியானது இருண்டு அடர்த்தியாக மாறிக் கொண்டிருந்தது அவளை அதிர்ச்சியடைய வைத்தது. கண நேரம் அவள் துடுக்குற்றுப் போனாள், ஆனால் விளையாட்டுப் பொருளை நினைவு கூர்ந்தவளாய், பலமுறை ஆழமான பெருமூச்சு விட்டபடி, தன்னால் முடிந்த அளவுக்கு வேகமாக ஓடினாள்.

இந்த வீணான வெறிபிடித்த துரத்தலில் ஏறத்தாழ ஒரு மணி நேரம் கடந்தது. அதன் பிறகு, விரிந்த நீலக் கடலுக்கும், மேகங்களுக்கும், மணற்பாங்கான பொன்னிற மேட்டு நிலத்திற்கும் வழிவிட்டபடி அகன்று பரந்திருந்த மரங்களைப் பார்க்க ஆஸ்ஸோல் வியப்புற்று, ஓரளவுக்குக் களைப்பு நீங்கியவளாக ஓடிக்கொண்டிருந்தாள். இது அந்தச் சிறிய ஆற்றின் கழிமுகம்; அகலமில்லாதபடி ஆழமற்று இருந்தது. நீல வண்ணத்தைக் காட்டும் அடியிலுள்ள பாறைகள் கண்ணுக்குப் புலப்பட்டன. மேலெழுந்து வந்த கடலலைகளால் இங்கே சங்கமித்த ஓடை மறைந்து போயிற்று. வளைந்து தெளிந்த அகன்ற செங்குத்தான முகப்புடைய மேட்டு நில விளிம்பின் ஓரத்தில் ஆஸ்ஸோல் நின்றாள். ஓடை அருகே,

தட்டையான கல் ஒன்றின் மீது அமர்ந்து தனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு, ஓடிப்போன பந்தயப் படகினை வைத்துக் கொண்டு, ஒரு வண்ணத்துப் பூச்சியைப் பிடித்த யானையின் ஆர்வத்தோடு அதைத் தனது கைகளில் திருப்பியபடி இருக்கும் ஒரு மனிதனை ஆஸ்ஸோல் பார்த்தாள். காப்பாற்றப்பட்ட விளையாட்டுப் பொருளைப் பார்த்ததில் ஓரளவுக்கு அமைதியடைந்த ஆஸ்ஸோல் சரிவினின்றும் சறுக்கிக் கொண்டு அந்நியனுக்குப் பக்கத்தில் போய்ச் சேர்ந் தாள். அவன் தலையை நிமிர்த்தட்டும் எனக் காத்துக் கொண்டிருந்த வேளையில் அவனை மிக நெருக்கமாக உற்றுப்பார்த்தாள். எனினும், அந்நியனோ காட்டின் வியப்பை ஆராய்ச்சி செய்வதில் மூழ்கியிருந்தான். அவ னைப் போல ஒருவனை இதற்கு முன்னர் தான் ஒருபோதும் பார்த்ததில்லை என்ற முடிவுக்கு வந்தவளாய் அவனது உச்சி முதல் கால் நுனிவரை பார்வையிடுவதற்கு அவளுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியிருந்தது.

அந்த மனிதன் உண்மையில் எகல் தான், நடைப்பயணம் போய், பாடல்களையும், புராணக் கதைகளையும், தேவதைக் கதை களையும் திரட்டுவதில் பிரபலமானவன். அவனது வைக்கோற்புரி குல்லாய்க்குக் கீழே நரைத்த தலைமுடி திரண்டு விழுந்து கிடந்தது; நீலநிற காற்சட்டைக்குள்ளாகத் திணிக்கப்பட்ட பழுப்பு நிறச் சட்டையும் உயரமான பூட்ஸ்களும் அவனை ஒரு

வேட்டைக்காரனைப் போலக் காட்டியது; வெண்மையான கழுத்துப்பட்டை, டை, வெள்ளி குமிழ் முகப்புகள் பெற்ற இடைவார், கைத்தடி, நிக்கல் பூட்டுக் கொண்ட தோல் பை ஆகியன ஒரு நகரவாசியெனக் காட்டின. அவனது முகம் — அடர்த்தியாக வளர்ந்த தாடி, நன்கு முறுக்கிவிட்ட மீசை இவற்றி லிருந்து பிதுங்கிக் கொண்டிருந்த மூக்கு, உதடுகள் மற்றும் கண்கள் இவற்றை ஒரு முகம் என்று அழைக்க முடியுமானால் — மணல் போலச் சாம்பல் நிறமாகவும், எஃகு போல பளபளப்பாகவும் இருந்த கண்கள் இல்லாதிருந்தால் அது சுறுசுறுப்பற்ற ஒளி ஊடுருவும் ஒன்றாகத் தோன்றும். அவனது பார்வை துணிச்சலும் வலிமையும் மிக்கதாக இருந்தது.

''இப்போது அதைத் திரும்பக் கொடுங்கள். அதனோடு நீங்கள் நீண்ட நேரம் விளையாடி விட்டீர்கள். அதை எப்படிக் கைப்பற்றினீர்கள்?'' என்று அந்தச் சிறுமி மருட்சியுடன் பேசினாள்.

எகல் உற்றுப்பார்த்தபடி, படகைக் கீழே போட்டு விட்டான். ஏனெனில் ஆஸ்ஸோலி னுடைய உணர்ச்சி வயப்பட்ட குரல் திடீரென்று அந்த அமைதியைக் குலைத்து விட்டது. வயதான அந்த மனிதன் முறுவலித்த படி, தனது பெரிய நரம்பு புடைத்த கையால் தனது தாடியை மெதுவாகத் தடவி விட்டுக் கொண்டே, கணநேரம் அவளை உற்று நோக்கினான். அடிக்கடி துவைக்கப்பட்ட சிறிய பருத்தி ஆடையானது

அவளது மெலிந்த, சூரிய ஒளியில் காய்ந்து போன முழங்காலை அரை குறையாக மறைத்து நின்றது. லேஸ் வைக்கப்பட்ட தலைக்குட்டையால் ஒன்று சேர்த்துக் கட்டப்பட்டிருந்த அடர்ந்த கருத்த தலைமுடியானது அவிழ்ந்து அவளது தோளுக்கு மேலே விழுந்து கிடந்தது. ஆஸ்ஸோலின் ஒவ்வொரு கூறுகளுமே, தூக்கணாங்குருவி பறப்பது போல காணரியவாறு அருமையாகச் செதுக்கப்பட்டு இருந்தது. அவளது கருமையான கண்களில் துயரமிக்க, வினவுகின்ற பார்வை காணப்பட்டது. அவை முகத்தைக் காட்டிலும் வயதானதாகக் காணப்பட்டன. ஒழுங்கற்ற நீள் உருண்டை வடிவம் கொண்ட அவளது முகம் வெயிலில் காய்ந்து இலேசாகக் கறுத்திருந்தது. அவளது சிறிய விரிந்த உதடுகள் மென்மையான முறுவலைக் காட்டின.

அந்தச் சிறுமியையும் படகையும் மாறி மாறிப் பார்த்தபடி, ''கிரிம் சகோதரர்கள், ஏஸோப் மற்றும் ஆண்டர்ஸன் பெயர்களால் உறுதிகூறுகிறேன். அங்கே ஏதோ மிகவும் சிறப்பான ஒன்று இருக்கிறது! கேள், உன்னைத்தான், மலரே! இது உன்னுடையது, இல்லையா?''

''ஆமாம். ஓடை நெடுகிலும் இதன் பின்னால் நான் ஓடிவந்தேன்; நான் செத்துவிடுவேன் என்றுகூட நினைத்தேன். அது இங்கே வந்ததா?''

''எனது கால்களுக்கேச் சரியாக வந்து

சேர்ந்தது. கப்பல் கவிழ்ந்தது காரணமாக, கரையை ஒட்டி நிற்கும் கடற்கொள்ளைக்காரன் போலச் செயல்பட்டு, அந்தப் பரிசினை உனக்கு அளிப்பது எனக்கு வாய்ப்பாக அமைந்தது. பந்தயப் படகு, அதனது மாலுமிகளால் கைவிடப்பட்டு, மூன்று அங்குல அலையால் உருட்டி விடப் பட்டு, கடற்கரையில் எனது இடது குதிகாலுக்கும் எனது கைத்தடியின் நுனிக்கும் இடையே ஒதுங்கியது.'' அவன் தனது கைத்தடியைத் தட்டினான். ''உன் பெயரென்ன, குழந்தாய்?''

எகல் அவளிடம் தந்த பொம்மையைக் கூடைக்குள் வைத்தபடி, ''ஆஸ்ஸோல்,'' என்று பதிலளித்தாள்.

''அது மிக அருமை.'' அதனது ஆழத்தில் அன்புக்குரிய நட்பு முறையிலான எக்களிப்புப் பளிச்சிட்ட கண்களை அவளிடமிருந்து எடுக்காமலேயே கிழவன் தனது தெளிவற்ற பேச்சைத் தொடர்ந்தான். ''சரியாகச் சொன்னால், நான் உனது பெயரைக் கேட்டிருக்க வேண்டியதில்லை. அது விசித்திரமான ஒன்று என்பதால் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஓர் அம்பின் சீழ்க்கை யொலியைப் போல அல்லது ஒரு கடற்சிப்பியின் முணுமுணுப்பைப் போல சீறொலி போன்றும் இசை போன்றும் இருக்கிறது; உனது பெயரானது, மேன்மை பொருந்திய அறியாமைக்கு மிகவும் அந்நியதாகவும், செவிக்கினிய ஆனால் பொறுக்க முடியாத அளவிற்குச் சாதாரண பெயர்களில்

ஒன்றாகவும் இருந்து விட்டால் நான் என்ன செய்திருக்க முடியும்? இன்னும் நீ யார், உனது பெற்றோர்கள் யார் அல்லது என்ன மாதிரியான வாழ்க்கை நடத்துறாய் என்பன போன்றவற்றை அறிந்து கொள்ள மிகவும் குறைவாகத் தான் அக்கறை கொண்டிருக்கிறேன். மந்திரம் எதற்காகத் தடுக்கப்படும்? பின்லாந்து மற்றும் ஜப் பானியக் கதை அமைப்புகளை ஒப்பிட்டபடி நான் இந்தக் கல் மீது உட்கார்ந்து கொண் டிருந்தேன்... திடீரென்று ஓடையானது இந்தப் பந்தயப் படகை அடித்துக் கொண்டு வந்தது, பிறகு நீ தோன்றினாய்... ஒரு போதும் நான் எதுவும் எழுதியதில்லை என்றாலும் உள்ளத்தில் நான் ஒரு கவிஞனே, என் அன்பே. உனது கூடையில் என்ன இருக்கிறது?''

கூடையை அலைத்தபடி, ''படகுகள், ஒரு நீராவிப்படகு, கொடிகளுடன் கூடிய மூன்று சிறிய வீடுகள். அவற்றில் வீரர்கள் வசிக்கிறார்கள்,'' என்றாள் ஆஸ்ஸோல்.

''மிகவும் அருமை. அவற்றை விற்று வருவதற்காக நீ அனுப்பப்பட்டிருக்கிறாய். வழியில் விளையாடுவதற்காக நீ நின்று விட்டாய். சற்று தூரம் போவதற்காக நீ பந்தயப் படகை விட்டாய், ஆனால் மாறாக அது ஓடி விட்டது. நான் சரியாகச் சொல்கிறேனா?''

''நீங்கள் கவனித்துக் கொண்டிருந்தீர் களா?'' இதுபற்றி தானே அவனிடம்

சொன்னாளா என்பதை நினைவு கூர முயன்றவளாய் ஆஸ்ஸோல் சந்தேகத்தோடு கேட்டாள். ''யாரேனும் உங்களுக்குச் சொன்னார்களா? அல்லது நீங்களே ஊகித்தீர்களா?''

''அது எனக்குத் தெரியும்.''

''எங்ஙனம்?''

''ஏனெனில் எல்லா மந்திரவாதிகளிலும் நான் தான் பெரியவன்''.

ஆஸ்ஸோல் திகைப்புற்றாள்; எகலின் இந்த வார்த்தைகளால் அவள் அடைந்த உலைவு அச்சத்தை விட அதிகமானதாக இருந்தது. ஆள் அரவமற்ற கடற்கரை, பேரமைதி, பந்தயப் படகால் ஏற்பட்ட களைப்பு, மினுமினுக்கும் கண்களோடு கிழவன் பேசிய விநோதப் பேச்சு, அவனது தாடி மற்றும் தலைமுடியின் வீறார்ந்த தன்மை ஆகியன இப்போது அந்தக் குழந்தைக்கு இயற்கை மீறியதாகவும், எதார்த்தமானதாகவும் தோன்றின. இப்போது எகல் பழிப்புக் காட்டியிருந்தாலோ, கத்தியிருந்தாலோ, அழுது கொண்டும் அச்சத்தால் மயக்கமுற்றும் குழந்தை ஓடிப் போயிருப்பாள். எனினும் அவளது கண்கள் அகல விரிந்தது கண்டு, எகல் திடீரென்று தன் போக்கை மாற்றினான்.

''என்னைக் கண்டு நீ அஞ்சக் காரணமில்லை. மாறாக, உன்னோடு நான் மனம் திறந்து பேச விரும்புகிறேன்,'' என்று கண்டிப்பான குரலில் அவன் பேசினான்.

சிறுமியின் முகத்தில் அவனை இவ்வளவு பாதித்தது என்ன என்பதை இப்போது

அவன் புரிந்து கொண்டான். ''அழகினும், இன்ப நிறைவுடைய விதியினும் நெஞ்சறியாத எதிர்பார்ப்பு,'' என்று அவன் தீர்மானித் தான். ''ஓ, நான் ஏன் ஓர் எழுத்தாளனாகப் பிறக்கவில்லை? கதைக்கு எவ்வளவு அருமை யான கரு.''

''இதோ பார்,'' தனது மூலக் கருத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் எகல் தொடர்ந்தான் (கட்டுக்கதை உருவாக்கு வதில் ஒரு மனச்சார்பு — அவனது அன்றாட வேலையின் முடிவு — அறிமுகமில்லாத நிலத்தில் மிகப்பெரும் கனவுகளின் விதைகளைச் சுண்டி எறியும் அச்சத்தை விட பெரியது), ''இதோ பார், ஆஸ்ஸோல், கவனமாகக் கேள். பெரும்பாலும் எங்கிருந்து நீ வந்து கொண் டிருக்கிறாயோ அந்த கிராமத்தில் சற்று முன்னர் தான் நான் வந்து சேர்ந்தேன்; ஒரு வார்த்தையில், கபேர்னாவில். தேவதைக் கதைகளையும் பாடல்களையும் நான் விரும்பு கிறேன், இதற்கு முன்னர் யாருமே கேட்டிராத ஏதாவது ஒன்றைக் கேட்கலாம் என்ற நம்பிக்கையில் ஒரு நாள் முழுவதையும் அந்தக் கிராமத்தில் நான் செலவிட்டேன். ஆனால் உங்களது பகுதியில் யாருமே தேவதைக் கதைகள் சொல்லவில்லை. இங்கு யாருமே பாடல்கள் பாடவில்லை. அவர்கள் கதைகள் சொன்னாலும், பாடல்கள் பாடினா லும், உனக்குத் தெரியும், விவசாயிகள் மற்றும் போர்வீரர்களின் குறும்புத்தனத்தை வானளாவப் போற்றும் கட்டுக்கதைகளாகவே

இருக்கின்றன. பயங்கரமான ராகத்தில் பாடப்படும் நான்கு வரிகளாலான சிறுபாடல்கள், கழுவப்படாத கால்களைப் போல அருவருப்பாகவும், வயிறு உறுமுவதைப் போல கரடுமுரடாகவும் இருக்கின்றன... பொறு, நான் எங்கோ போய்விட்டேன். திரும்பவும் நான் தொடர்கிறேன்.''

சற்று நேரத்திற்கு அவன் மௌனமாக இருந்தான், பிறகு இவ்வாறு தொடர்ந்தான்:

''எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியாது, ஆனால் ஒரு தேவதைக் கதை கபேர்னாவில் மலரும், அது நீண்ட காலத்திற்கு மக்களது மனங்களில் தங்கி நிற்கும். நீ அப்போது பெரியவளாகி விடுவாய், ஆஸ்ஸோல். ஒரு நாள் காலை எங்கோ தொடுவானில் கதிரொளியில் செந்நிறக் கடற்பாய்கள் பளிச்சிடும். வெள்ளைக் கப்பல் மினுமினுக்கும் செந்நிறக் கடற்பாய்களோடு, அலைகளைக் கிழித்தபடி உன்னை நோக்கி நேராக வரும். இந்த அதிசயக் கப்பல் அமைதியாக மிதக்கும்; இரைச்சலோ, வேட்டு ஒலிகளோ இருக்காது; கடற்கரையில் ஒரு பெருங் கூட்டம் சேரும். ஒவ்வொருவரும் வியப்பும், திகைப்பும் கொள்வார்கள், நீயுங் கூட அங்கேதான் இருப்பாய். அழகிய ராகத்தோடு கூடிய இசைக்கு ஏற்ப கடற்கரையை யொட்டி அக்கப்பல் கம்பீரமாக மிதந்து வரும்; தரைவிரிப்பும், பூக்களும், தங்கமும் கொண்டு அலங்கரிக்கப்பட்ட விரைந்து செல்லும் படகொன்று கப்பலினின்

றும் கீழே இறக்கப்படும். 'எதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள்? யாரை நீங்கள் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?' கடற்கரையிலுள்ள மக்கள் இப்படிக் கூறுவார்கள். பிறகு நீ துணிவும் வனப்பும் மிக்க இளவரசன் ஒருவனைக் காண்பாய்; அவன் அங்கே நின்று, உன்னை நோக்கிக் கைகளை நீட்டிக் கொண்டிருப்பான். 'வணக்கம், ஆஸ்ஸோல்!' என்று அவன் கூறுவான். 'இங்கிருந்து மிகமிகத் தொலைவில் உன்னை நான் ஒரு கனவில் கண்டேன். எனது அரசிற்கு நிரந்தரமாக உன்னை எடுத்துச் செல்வதற்கு நான் வந்திருக்கிறேன். ஆழமான ரோஜா பள்ளத்தாக்கிலே அங்கே நீ என்னுடன் வசிக்கலாம். உனது நெஞ்சம் விரும்புகின்ற ஒவ்வொன்றையும் நீ பெறலாம்; நாம் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாக இருப்போம், ஆகவே கண்ணீர் அல்லது கவலை என்பதன் பொருளை ஒருபோதும் உனது உள்ளம் அறியாது.' அவன் தனது படகிற்கு உன்னை எடுத்து செல்வான், கப்பலுக்குக் கொண்டு செல்வான், உனது வருகையை வரவேற்பதற்காக வானத்தினின்றும் நட்சத்திரங்கள் கீழிறங்க, கதிரவன் எழுந்து நிற்கும் பெருமை மிக்க நாட்டிற்கு நீ நிரந்தரமாகக் கப்பலேறிச் செல்வாய்.''

''அவை எல்லாமே எனக்காகத் தானா?'' அந்தப் பெண் மென்மையாக வினவினாள். அவளது கண்டிப்பான கண்கள் மகிழ்ச்சி மிக்கதாக மாறி நம்பிக்கையோடு பளிச்சிட்

டன. வெளிப்படையாக, ஆபத்தான எந்த மந்திரவாதியும் இது போலப் பேச மாட்டான்; அவள் நெருங்கிச் சென்றாள். ''ஒரு வேளை அது ஏற்கெனவே வந்துவிட்டதோ... அந்தக் கப்பல்?''

''இத்தனை விரைவாக இல்லை,'' எகல் மறுத்துரைத்தான். ''முதலாவதாக, நான் சொன்னது போல, நீ வளர்ந்து பெரியவளாக வேண்டும். பிறகு... பேசிக் கொண்டிருப்பதில் என்ன பயன்? அது **நடக்கும்,** இவ்வளவுதான் அதைப் பற்றியன எல்லாம். பிறகு நீ என்ன செய்வாய்?''

''நானா?'' அவள் கூடையை உற்றுப் பார்த்தாள், ஆனால் ஒரு பொருத்தமான வெகுமதி தரத்தக்க எதையும் வெளிப் படையாக அவளால் காண முடியவில்லை. ''நான் அவனைக் காதலிப்பேன்,'' அவள் விரைந்து சொன்ன பிறகு ஒருவகையில் தயக்கத்தோடு தொடர்ந்தாள், ''அவன் சண்டைபோடாதிருந்தால்.''

''இல்லை, அவன் போட மாட்டான்,'' கண்களைப் புதிராகச் சிமிட்டியபடி மந்திர வாதி சொன்னான். ''அவன் போட மாட்டான். அதற்கு என்னால் உறுதி கூற முடியும். போ, குழந்தாய், நறுமணமூட் டப்பட்ட வோத்காவை இருதரம் உறிஞ் சியதற்கும், தண்டனைக் கைதிகளின் பாடல் கள் பற்றிய எனது சிந்தனைகளுக்கும் இடையில் நான் கூறியவற்றை மறந்து விடாதே. போ! சன்னமயிர்க் கொத்துடைய

உனது தலைக்கு அமைதி உண்டாகட்டும்.''

உருளைக்கிழங்குச் செடிகளுக்கு மண்ணணை யிட்டபடி, லங்கிரேன் தனது சிறிய தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். தலையை உயர்த்தி, ஆஸ்ஸோலைப் பார்த்தான். மகிழ்வுமிக்க, பொறுமையற்ற பார்வை கொண்ட முகத்தோடு அவள் அவனை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தாள்.

''கேளுங்கள்...'' என்றாள் அவள், தான் விரைவாக மூச்சுவிட்டதைக் கட்டுப்படுத்த முயன்று, தந்தையின் முன்றானையை இரு கைகளாலும் பற்றிக் கொண்டாள். ''கேளுங்கள், நான் என்ன உங்களுக்குச் சொல்லப் போகிறேன் என்பதை... அங்கே, கடற்கரையில், வெகு தொலைவில், ஒரு மந்திரவாதி...''

அந்த மந்திரவாதி பற்றியும் அவனது அதிசயமான முன்னறிவிப்புப் பற்றியும் அவனிடம் கூறுவதற்கு அவள் தொடங்கினாள். அவளது உணர்ச்சிவேகம் நிகழ்ச்சிகளை வரிசைக் கிரமமாகக் கூற முடியாதபடி சிரமப்படுத்தியது. பிறகு அவள் மந்திரவாதியைப் பற்றி மேலும் விவரித்தாள், தலைகீழ் வரிசையில், பந்தயப் படகினை துரத்திக் கொண்டு அவள் ஓடியதை.

ஒரு முறையேனும் குறுக்கிடாதபடியும், ஒரு புன்முறுவல் செய்யாமலும் லங்கிரேன் அவளது கதையைக் கேட்டான். அவள் அதைச் சொல்லி முடித்த போது, அவனது

கற்பனை, ஓர் அந்நியன், ஒரு கையில் நறுமணமூட்டப்பட்ட வோத்கா பிளாஸ்க்கைப் பிடித்துக் கொண்டும், மற்றொரு கையில் பொம்மையுடனும் இருந்த ஒரு கிழவனின் படத்தை உடனடியாக கொண்டு வந்தது. அவன் திரும்பிக் கொண்டான், ஆனால் ஒரு குழந்தையின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நேரங்களில் ஒருவர் கண்டிப்போடும், திகைப்போடும் இருந்தாக வேண்டும் என்பதை நினைவு கூர்ந்தவனாய், வினை முறையோடு தலையசைத்து விட்டு மொழிந்தான்:

''அப்படியா... அவன் உண்மையாகவே ஒரு மந்திரவாதி போலத் தான் காணப்படுகிறது. அவனை ஒரு முறை பார்ப்பதற்கு நான் விரும்புகிறேன்... ஆனால் நீ மீண்டும் போகும் பொழுது, சாலையை விட்டுத் திரும்ப வேண்டாம்: காட்டில் பாதையைத் தவற விட்டுவிடுவது என்பது சுலபமானது.''

களைக்கொட்டை வைத்து, அவன் குட்டையாக நின்ற மிலாற்றுப் படல் வேலிக்கு அருகே உட்கார்ந்தான், குழந்தையைத் தனது மடி மீது வைத்துக் கொண்டான். அவள் மிகுதியாகக் களைப்புற்றுப் போயிருந்தாள், மேலும் சில விவரங்களைத் தெரிவிப்பதற்கு முயன்றாள், ஆனால் வெக்கை, பரபரப்பு மற்றும் களைப்பு அவளைத் தூங்க வைத்து விட்டன. அவளது கண்மடல்கள் சாய்ந்தன, அவளது தலை தந்தையின் வலுவான தோள் மீது சாய்ந்தது. அடுத்த கணத்தில்

அவள் கனவுலகத்திற்கு எடுத்துச் செல்லப் படுவாள். திடீரென்று ஏற்பட்ட ஐயத்தால், கண்கள் இன்னமும் மூடியபடியே இருக்க, ஆஸ்ஸோல் நிமிர்ந்து உட்கார்ந்தாள். தனது சிறிய உள்ளங்கையை லங்கிரேனின் மார்புச் சட்டையில் வைத்து அழுத்திக் கொண்டு வியப்புறக் கேட்டாள்:

''அந்த மந்திரக் கப்பல் உண்மையில் எனக்காகவே வருமென்று நீங்கள் நினைக் கிறீர்களா?''

''அது வரும்,'' என்று மாலுமி அமைதி யாகப் பதில் பேசினான். ''அது வரும் என்று நீ சொல்லப்பட்டால், அதன் பொருள் வரும் தான்.''

''அவள் வளர்ந்து பெரியவளாகும் போது எல்லாவற்றையும் மறந்து விடுவாள்,'' என்று தனக்குள்ளாக அவன் சொல்லிக் கொண் டான், ''மேலும், இதற்கிடையில்... **அது போன்ற** ஒரு பொம்மையை உன்னிடமிருந்து எடுக்க வேண்டாம். எதிர்காலத்தில் அநேகக் கப்பற்பாய்களை நீ பார்ப்பாய், அவை செந்நிறமாக இருக்காது, ஆனால் அருவருப்பும் நம்பிக்கை துரோகமும் ஆனவை: தொலைவி லேயே அவை வெள்ளையாகவும் மினுமினுப் பாகவும் காணப்பட்டன, ஆனால் அண்மையில் வைத்துப் பார்க்கும் போது அவை கந் தையாயும் வெட்கங்கெட்டதாயும் இருக்கும். எனது பெண்ணிடம் ஒரு பயணி கேலி செய்தான். ஆக என்ன? அது ஓர் அன்பான கேலி! அது ஒரு நல்ல கேலி! நீ எவ்வளவு

களைப்புற்றுப் போய்விட்டாய்! பாதி நாள் காட்டில் கழிந்து விட்டது, காட்டின் மையப் பகுதியில். செந்நிறக் கடற்பாய் களைப் பொருத்தமட்டில் நான் செய்வது போல, அவற்றை எண்ணிப்பார்: செந்நிறக் கடற்பாய்கள் உனக்குக் கிடைக்கும்.''

ஆஸ்ஸோல் தூங்கினாள். வெறுமனே இருந்த கையால் தனது சுங்கானை லங்கி ரேன் வெளியே எடுத்துப் பற்றவைத் தான், வேலி வழியாகத் தோட்டத்திற்கு வெளியே வளர்ந்திருந்த புதருக்குக் காற்று புகையை அடித்துச் சென்றது. புதருக்கு அருகே உட்கார்ந்து கொண்டு, வேலிப் பக்கம் தனது முதுகைக் காட்டியிருந்த இளம் பிச்சைக்காரன் ஒருவன் பணியாரத்தை மென்று கொண்டிருந்தான். தந்தைக்கும் மகளுக்குமிடையே நடந்த உரையாடலை ஒட்டுக் கேட்டது அவனுக்கு மகிழ்ச்சியான மனநிலையை ஏற்படுத்தியது, மேலும் நல்ல புகையிலையின் மணமானது, கெஞ்சிக் கேட் கும் உணர்வை அவனிடத்தில் எழுப்பியது.

''இந்த ஏழைக்குப் புகைக்கக் கொடுங்கள், ஐயா,'' என்று வேலி வழியாக அவன் பேசினான். ''உங்களுடையதை ஒப்பிட்டுப் பார்க்கையில், என்னுடைய புகையிலை சுத்த மான நஞ்சு.''

''நிச்சயமாக உனக்குக் கொஞ்சம் தருவேன்,'' என்று தாழ்ந்த குரலில் லங்கிரேன் பதிலளித் தான், ''ஆனால் என்னுடைய புகையிலைப் பையானது மற்றொரு சட்டைப்பையில்

இருக்கிறது. என் மகளை உசுப்பி விடுவதற்கு நான் விரும்பவில்லை.''

''உண்மையிலேயே, என்ன தொல்லை! அவள் விழித்தெழட்டும், திரும்பவும் தூங்கி விடட்டும், ஆனால் ஒரு வழிப்போக்கனுக்கு நீங்கள் புகைக்கக் கொடுக்கிறீர்கள்.''

''ஆனால் உன்னிடத்தில் முற்றாகப் புகை யிலை இல்லாமல் இருப்பது போன்றதல்ல. குழந்தை களைத்துப் போய்விட்டாள். நீ விரும்பினால், சற்று நேரங்கழித்து வா,'' என்று லங்கிரேன் எதிர்த்துச் சொன்னான்.

பிச்சைக்காரன் எரிச்சலோடு காரி உமிழ்ந் தான். தனது குச்சிமீது சாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு இகழ்ச்சியாகப் பேசினான்:

''இயற்கையாகவே, அவள் ஓர் இளவரசி தான். எல்லாவகையான தேவதைக் கதைக்கப் பல்களால் அவள் தலை நிரம்பி இருக்கிறது! நீ உண்மையிலேயே ஒரு விசித்திரமான பேர் வழி, சொத்து நிறைந்த மனிதன் நீ!''

''கேள்,'' லங்கிரேன் முணுமுணுத்தான், ''அவளை எழுப்பலாம் என்று நான் நினைக் கிறேன், ஆனால் உன் முகத்தில் அடிப்பது காரணமாக மட்டிலுமே அது இருக்கும். இப்போது புறப்பட்டு போய்க் கொண்டிரு!''

அரை மணி நேரங்கழித்து ஒரு டஜன் மீனவர்களுக்கு மத்தியில் அருந்தகமொன்றில் அந்தப் பிச்சைக்காரன் அமர்ந்திருந்தான். அவர்களுக்குப் பின்னால் அமர்ந்து, இப்போது கணவன்களுடைய சட்டைக்கையை வலிந்து இழுத்துக் கொண்டு, இப்போது அவர்களது

தோளுக்கு மேலாக வோத்கா ஒரு குவளைக் காகக் கையை நீட்டிக் கொண்டு — தங் களுக்காக, இயற்கையாகவே — வளைந்த புருவங் களைக் கொண்ட தளதளப்பான பெண்கள் இருந்தார்கள். அவர்களது கைகளின் தசை யானது தளவரிசைக்குப் போடும் கற்களைப் போலப் பெரிதாக இருந்தன. பிச்சைக்காரன், சங்கடப்பட்டு, தனது கதையை விவரித்துக் கொண்டிருந்தான்:

''...மேலும் அவன் எனக்குப் புகையிலை தரவில்லை. 'இப்போது நீ வயது அடையும் போது, ஒரு விஷேட சிவப்புக் கப்பல் உனக்காக வரும்,' என்று கூறுகிறான். 'அது எப்படி இளவரசனை மணக்கப் போகிறாய் என்பதைப் பொருந்தது,' என்கிறான், 'மந் திரவாதி என்ன சொன்னானோ அதை நினைவில் கொள்.' ஆனால் நான் சொல் கிறேன், 'போ, அவளை எழுப்பு, ஆகவே நீ உனது புகையிலைப் பையை எடுக்க முடியும்!' பாருங்கள், பாதிச் சாலை வரை என்னைத் துரத்தியடித்தான்.''

''என்ன? யார்? எதைப் பத்தி அவன் பேசிக் கொண்டிருக்கான்?'' பெண்களுடைய ஆர்வக் குரல்கள் கோரின.

எதைப் பற்றி அவை எல்லாம் என் பதை அவர்களிடம் கூறுவதற்காக மீனவர்கள் தங்களுடைய தலைகளை இலேசாகத் திருப் பினார்கள், இவ்வாறு செய்த போது முகஞ்சுளித்து முறுவலித்தார்கள்:

''லங்கிரேனும் அவன் மகளும் விலங்குகளைப்

போல கொடியவங்களாக மாறிட்டாங்க. ஒருவேளை அவுங்களது மூளையில் என்னமோ ஆகிவிட்டது. இதைத்தான் இந்த மனிதன் இங்கே சொல்லிக்கிட்டிருக்கான். அவர்களைப் பார்க்க ஒரு சூனியக்காரன் வந்ததாக, அவன் சொல்றான். இப்ப அவுங்க காத்துக் கொண்டிருக்காங்க — பெண்களே, பாருங்க, உங்க வாய்ப்பைத் தவற விட்டுவிடாதீங்க! — ஏதோ அந்நிய நாட்டிலிருந்து ஓர் இளவரசன், செந்நிறக் கடற்பாய்களில் பயணம் செய்து கொண்டு வருவான்!''

மூன்று நாட்களுக்குப் பிறகு, நகரத் திலுள்ள பொம்மைக் கடையிலிருந்து ஆஸ் ஸோல் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண் டிருந்த போது, முதல் முறையாக இடித் துரையை அவள் கேட்டாள்:

''ஹேய், தூக்கில் போடத் தகுதியா னவளே! ஆஸ்ஸோல்! இங்கே உற்றுப் பார்! செந்நிறக் கடற்பாய்கள் வந்து கொண்டிருப்பதைப் பார்!''

குழந்தை நடுக்குற்றாள், கையால் கண் ணுக்குத் திரைமறைப்புச் செய்து கொண்டு கடலை நோக்கினாள். பிறகு எங்கிருந்து இரைச்சல் வந்ததோ அந்தப் பக்கமாகத் திரும்பினாள்; இருபது அடி தொலைவில் குழந்தைகள் கூட்டமாக இருப்பதைப் பார்த் தாள்; அவர்கள் முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு, அவளைப் பார்த்து நாக்குகளை நீட்டினார்கள். சிறுமியோ பெரு மூச்சு விட்டு வீட்டிற்கு விரைந்தாள்.

2

கிரே

ரோம் நகரில் இரண்டாவதாக • இருப்பதைக் காட்டிலும் ஒரு கிராமத்தில் முதலாவதாக இருப்பதே சிறந்தது என்று சீசர் கருதியிருந் தால், ஆர்தர் கிரே, சீசருடைய மதிநுட்ப முடைய ஆசையைப் பொருத்தமட்டில், அவரிடம் பொறாமை பாராட்ட வேண்டி இருந்திருக்காது. அவன் ஒரு காப்டனாகவே பிறந்தான், அவ்வாறு ஆக வேண்டும் என வேட்கை கொண்டான், அப்படியே ஆகவும் செய்தான்.

கிரே பிறந்த மிகப் பெரிய பண்ணை வீடு உள்ளே மங்கலாகவும் வெளியே கம்பீரமாகவும் இருந்தது. பண்ணை வீட்டிற்கு முன்னால் பூத்தோட்டமும் பூங்காவின் ஒரு பகுதியும் இருந்தன. மிக நல்ல வகையான டியூலிப்புகள் — வெள்ளி-நீல நிற, ஊதா நிற, இளஞ்சிவப்பு நிழல் கொண்ட கருப்பு நிற — ரொம்ப விசித்திரமாகத் தூவி விடப் பட்ட குமிழ் மணிச் சரடுகள் போல கோடுகளாகப் புல் தரையில் நெளிந்து நெளிந்து இருந்தன. பூங்காவில் இருந்த பழைய மரங்கள், வளைந்து நெளிந்து

சென்ற ஓடையின் கோரைப்புல் படுகைக்கு மேலாக அரைத் தூக்கத்தில் ஆழ்ந்து சென்றன. காப்பரணின் வேலியானது, ஆதலால் பண்ணை வீடு உண்மையில் ஒரு காவற் கோட்டைதான், இரும்புக் கம்பியினால் பின்னப்பட்ட வார்ப்பிரும்புத் தூண்களால் ஆனது. ஒவ்வொரு தூணுமே வார்ப்பிரும்பு லில்லி மலருடன் முடி சூடப்பட்டிருந்தது; விழாக் காலங்களில் இக்கிண்ணங்கள் எண்ணெய் யால் நிரப்பப்பட்டு, மிக நீண்ட தொலைவுக் குத் தெரியும்படி இரவு நேரத்தில் எரிய விடப்படும்.

கிரேயின் பெற்றோர்கள் அவர்களது சமூக நிலையிலும், செல்வத்திலும், சமூகச் சட்டங்களிலும் வீம்புமிக்க அடிமைகள். இந்தச் சமூகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது அவர்கள் ''நாங்கள்'' என்று கூற முடியும். மூதாதையர்களின் சித்திரக்கூடத்தில் மையங் கொண்டு விட்ட அவர்களது ஆன்மாவின் ஒரு பகுதியானது உண்மையி லேயே வருணிப்பதற்கு இலாயக்கற்றது; அதே வேளை மற்ற பகுதி — இச்சித்திரக் கூடத்தின் ஒரு கற்பனைத் தொடர் — சிறிய கிரேயுடன் தொடங்கியது. குடும்பப் பெரு மைக்கு எந்தவிதத் தீங்கும் நேராதவாறு தனது படத்தை சுவரில் தொங்க விடும்படி அவன் ஏற்கெனவே வகுக்கப்பட்ட திட்டத் திற்கேற்ப தனது வாழ்க்கையை வாழ வேண்டியவனாகவும், சாக வேண்டியவனா கவும் ஆனான். ஆயினும், இத்திட்டத்திலே

ஒரு சிறிய பிழையானது நுழைந்து விட்டது: ஆர்தர் கிரே ஓர் உயிருள்ள ஆர்வமனத்துடன் பிறந்து, குடும்பச் சுவடைப் பின்தொடர வேண்டும் என்பதை எந்தவகையிலும் விரும்பாது போய்விட்டான்.

பையனிடத்தில் உள்ள இந்த உயிர்த் துடிப்புடைய தன்மை, இந்த முழுமையான சமயஞ்சாரார்த தன்மையானது அவனது எட்டாம் வயதிலே மிகவும் குறிப்பிடத் தக்கதாகி விட்டது; விநோதமான உள்ளுணர்வுகளால் உருவாக்கப்பட்ட வீரனும் தேடுபவனும் மற்றும் அற்புதத்தை நிகழ்த்தக் கூடியவனும் என்ற வகை, அதாவது வாழ்க்கையின் எண்ணிக்கையற்ற பாத்திரங்களில் மிகவும் ஆபத்தானதும், நெஞ்சைத் தொடக் கூடியதுமான முன்னுணர்வு பெற்றவன் என்ற பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட மனிதனின் வகை என்பது தெளிவாயிற்று. ஏசுநாதர் சிலுவை யேற்றப் படத்தைத் தொடுமாறு அதற்கு எதிராக நாற்காலியைத் தள்ளி, கிறிஸ்துவின் குருதி படிந்த கைகளில் உள்ள ஆணிகளை நீக்கிவிட்டு, அதாவது வீட்டிற்கு வர்ணம் பூசுபவனிடமிருந்து திருடியிருந்த நீல வர்ணத்தைக் கொண்டு அதற்கு மேலாக அவன் வெறுமனே மூடிவிட்ட நேரத்தில் — இந்நேரத்திலிருந்துதான் கிரேயில் இந்த வகை வெளிப்படையாகத் தெரிந்தது. இவ்வாறு மாற்றியமைத்ததை, இந்த ஓவியமானது சற்றுப் பொறுக்கக் கூடியதாக இருந்தது என்று அவன் கருதினான்.

இந்த விநோதமான வேலையால் கவரப் பட்டு, கிறிஸ்துவினுடைய கால்களையும் மூடுவதற்குத் தொடங்கினான், ஆனால் அவன் தந்தையால் பிடிக்கப்பட்டான். காது களைப் பிடித்துத் திருகி அவனை நாற் காலியிலிருந்து ஆட்டிய கிழவர் கேட்டார்:

''ஓவியத்தை எதற்காகச் சேதப்படுத் தினாய்?''

''நான் அதைச் சேதப்படுத்தவில்லை.''

''இது புகழ்பெற்ற ஓவியருடைய வேலை.''

''பரவாயில்லை. குருதி ஏற்படுகின்ற அளவுக்கு ஒருவருடைய கைகளில் ஆணிகள் அடிக்கப்படுவதை என்னால் அநுமதிக்க முடி யாது. இதை நான் விரும்பவில்லை.''

தனது மீசைக்குள்ளாகத் தனது புன் முறுவலை மறைத்துக் கொண்டு, லயனல் கிரே தன் மகனுடைய மறுமொழியிலிருந்து தன்னைத்தானே அறிந்து கொண்டு, அவனைத் தண்டிக்கவில்லை.

காப்பரணைப் பற்றிப் படிப்பதற்காக கிரே பெருமுயற்சியோடு தொடங்கினான், அவனது கண்டுபிடிப்புகள் அதிசயிக்கத்தக் கதாக இருந்தன. உதாரணமாக, அட்டாலியில் வீரனுக்குரிய எஃகு போர்க் கவசம், இரும் பாலும் தோலாலும் பைண்டு செய்யப்பட்ட நூல்கள், துண்டுகளாகிப் போன துணிகள், புறாக் கூட்டங்கள் இவற்றை அவன் கண்டான். மது வைக்கப்பட்டிருந்த நிலவ றையில் லாஃபிட், மதேரா மற்றும் ஷெர்ரீ பற்றி ஆர்வமூட்டும் தகவலைத் திரட்டிச்

சேகரித்தான். முக்கோணவடிவமான சன்னலிலிருந்து மங்கலான வெளிச்சம் வந்த இங்குதான், பெரிய மற்றும் சிறிய மிடாக்கள் இருந்தன; மிகவும் பெரியதானது, தட்டையான உருண்டை வடிவத்தில் இருந்த மிடா நிலவறையின் குறுகிய சுவர் முழுவதையும் நிறைத்து நின்றது; இம்மிடாவின் நூறு ஆண்டுகால கருப்பு ஓக் நன்கு பளபளப்பாக்கப்பட்ட மரத்தைப் போல மின்னியது. வயிறு பெருத்த பச்சை மற்றும் கருநீலப் போத்தல்கள் மிடாக்களுக்கிடையே பிரம்புக் கூடைகளில் இருந்தன. கற்களின் மீதும் மண் தரையிலும் மெல்லிய காம்புகளைக் கொண்ட சாம்பல்நிறக் காளான்கள் வளர்ந்தன: ஒவ்வோர் இடத்திலும் பூஞ்சக்காளான், பாசி, புழுக்கம், புளிப்பு மற்றும் அழுகிய மணம் இருந்தன. தள்ளி மூலையில் உள்ள மிகப் பெரிய நூலாம்படை தங்கம் போல மின்னியது, மாலை வாக்கில், கதிரவனின் கடைசிக் கதிர் அதைத் தேடிச் சென்ற போது. ஓர் இடத்தில் குரோம்வெலுடைய வாழ்நாட்களில் இருந்த உயர்தரமான அலிகண்ட் இரண்டு மிடாக்கள் தரையில் புதைக்கப்பட்டன; நிலவறைக் காப்பாளன், காலி மூலையைக் கிரேக்குச் சுட்டிக்காட்டி, அகழ்நாய்க் கூட்டத்தை விட அதிகம் வாழ்ந்த பிணத்தினுடைய, புகழ்பெற்ற சமாதியின் கதையைத் திரும்பச் சொல்லும் வாய்ப்பினைத் தவறவிடவில்லை. தனது கதையைத் தொடங்கியதும், கதை சொல்

பவன் பெரிய மிடாவினுடைய மூடுகுமிழைச் சோதனை செய்வதற்கு ஒருபோதும் மறக்க வேயில்லை, அங்கிருந்து மனநிறைவுடன் நடந்து சென்றான். ஏனெனில் பெருத்த மகிழ்ச்சியால் ஏற்பட்ட வழக்காறில்லாத கண்ணீர் திடீரென்று வருந்தந் தோய்ந்த அவனது கண்களில் பளிச்சிட்டது.

ஒரு காலி மரப்பெட்டியின் மீது அமர்ந்து தனது கூரிய மூக்கில் பொடித்துகளைத் திணித்துக் கொண்டு போல்திசோக் கிரேயிடம் சொல்வதுண்டு. ''இதோ பார், நீ அந்தக் காலி இடத்தைப் பார்க்கிறியா? இங்கு புதைக்கப்பட்டுள்ள மது சிறு குவளை மட்டுமே கொஞ்சம் தனக்குத் தருவதாக இருந்தா நாக்கைக்கூட வெட்டிவிடத் தயாராக இருப்பதாக பல குடிகாரர்களைச் சொல்ல வைக்கும். ஒவ்வொரு மிடாவுமே ஒரு நூறு லிட்டர் பொருளைக் கொண்டது. இது ஆன்மாவை படீரென வெடிக்கச் செய்யும், உடம்பானது அசைவற்ற மாப்பிசை போல ஆயிரும். இது செர்ரி பழத்தை விட கருப்பானது, ஒரு போத்தலில் இருந்து அதை வெளியே ஊத்த முடியாது. கனத்த பாலேடு போல இது அடர்த்தியானது. இரும்பைப் போல உறுதியான கருப்பு ஓக் மரத்தினால் செய்யப்பட்ட மிடாக்களில் இருந்தது. மிடாக் களை வரிந்து இறுக்கும் செப்புப் பட்டைகள் இரு வரிசைகளாலானவை. அந்தப் பட்டை களில் உள்ள வாசகம் லத்தீன் மொழியில் உள்ளது. அது சொல்கிறது: 'கிரே சொர்க்

கத்தில் இருக்கும் போது என்னைக் குடிப் பான்.' இது என்ன பொருளைத் தருது என்பது குறித்துப் பல்வேறு கருத்து இருக்கு. உன்னுடைய கொள்ளுத் தாத்தா, சிமியோன் கிரே, கிராமப்புற வீட்டைக் கட்டி அதற்குச் 'சொர்க்கம்' என்று பெயர் வச்சிருந்தார். அந்த முறையில் புதிரான வாசகத்தையும் எதார்த்தத்தையும் தீங்கற்ற இந்தக் கேலி மூலம் ஒத்துப்போக முடியும்னு அவர் கருதினார். நீ என்ன நினைக்கிறே? முதலாவது பட்டையைக் கழட்டின உடனேயே அவர் நெஞ்சு வலியால் செத்துப்போனார். சாப்பாட்டில சுவைகண்ட முதியவர் இந்தளவுக்குக் கிளர்ச்சியுற்றுப் போனார். அதன் பிறகு யாருமே இம் மிடாவைத் தொடல. அரிய மது பெருங் கேட்டைக் கொண்டு வரும்னு அவுங்க சொல்வாங்க. உண்மையிலே, எகிப்திய சூரரி மாச்சிலை கூட இத்தகைய புதிரைக் கேக்கிறதில்லை. உண்மை, அது ஒரு முனி வரிடம் கேட்டது: 'ஒவ்வொன்றையும் நான் பேராவலுடன் விழுங்குறது போல உங்களையும் விழுங்குவேனா? என்னிடம் உண்மையைச் சொல்லுங்க நீங்கள் உயிர் வாழ்வீங்க,' ஆனா சிந்தித்துச் சிந்தித்து...''

''மூடுகுமிழ் திரும்பவும் கசிந்து கொண் டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்,'' தனக்குத்தானே குறுக்கிட்டு போல்திசோக் கூறுவதுண்டு, அவன் மூலையை நோக்கிச் சென்று மூடுகுமிழைத் திருகிவிட்டு, முகமெல் லாம் ஒளிவீச நீர்மோருடன் திரும்புவான்.

''ஆமாம். நன்றாகச் சிந்தித்த பிறகு, மிகவும் முக்கியமானது, தனக்கு வேண்டிய நேரத்தை எடுத்துக்கிட்டு, முனிவர் சூரரிமாச் சிலையிடம் கூறியிருக்கலாம்: 'நாம போய்க் குடிக்கலாம், எனது அருமை நண்பனே, இது போன்ற முட்டாள்தனங்களை நீ மறந்து விடுவாய்!' 'கிரே சொர்க்கத்தில் இருக்கும் போது என்னைக் குடிப்பான்!' ஒருவர் எங்ஙனம் அதை அறிந்து கொள்ள? அவர் செத்த பிறகு குடிப்பான்னு அதன் பொருளா? அது மிகவும் விநோதமானது. இதன் பொருள் அவர் முனிவர் என்பது, இதன் பொருள் அவர் மதுவோ சாராயமோ குடிக்கவில்லை என்பது. 'சொர்க்கம்' என்பதன் பொருள் இன்பம் என்று நாம கருதலாம். ஆனால் இதுபோல கேள்வி வந்தா, மகிழ்ச்சி மிக்க ஒருவன் தனக்குத்தானே நேராக 'இதுதான் சொர்க்கமா?' என்று கேட்க வேண்டி இருக்கும் போது, எந்த இன்பமும் தனது பளபளக்கும் சிறகுகளின் பாதியை இழந்து விடும். அது தான். எளிமையான இதயத்துடனும் இந்த மிடாவிலிருந்து குடித்துச் சிரிப்பதற்கு எனது பையனே, உண்மையிலேயே சிரிப்பதற்கு, ஒருவனுக்குத் தரையில் ஒரு காலும் வானத்தில் மற்றொரு காலும் இருக்கணும். மூன்றாவது அநுமானம் கூட உண்டு: ஒருநாள் கிரே அதிகமாக வெறிக்கக் குடித்து சொர்க்கத்தில் இருப்பது போல உணரும் போது இந்த மிடாவை உறுதியாகக் காலி செய்வான். ஆயினும்,

இது, எனது பையனே, முன்னறிவிப்பை எடுத்துக்கொண்டு வராது, அது அருந்தகக் குழப்பமாகத்தானிருக்கும்.''

பெரிய மிடாவிலுள்ள மூடுகுமிழின் செயல் பாட்டு நிலையைத் திரும்பவும் ஒருமுறை சோதித்துப்பார்த்து விட்டு, போல்திசோக் தனது கதையை முடித்தபோது மிகவும் கவனமாகவும், வருந்தந்தோய்ந்தும் காணப் பட்டார்:

''உன்னுடைய மூதாதையர், ஜான் கிரே, இந்த மிடாக்களை 1793இல் லிஸ்பனிலிருந்து **பீகெல்** என்னும் கப்பலில் கொண்டுவந்தார்; இந்த மதுவுக்காக அவர் இரண்டாயிரம் தங்க நாணயங்களைக் கொடுத்தார். பாண்டிச் சேரியிலிருந்து வந்த துப்பாக்கி செய்பவரான பெஞ்சமின் எலியன் மிடாக்களிலே பொறித் தார், மிடாக்கள் பூமியின் கீழ்நோக்கி ஆறு அடி அழம் சென்றன. திராட்சைக் கொத்து களின் சாம்பலால் அவை மூடப்பட்டிருக்கின் றன. இந்த மதுவை இதுவரை எவரும் சாப்பிட்டதில்லை, சுவைத்ததில்லை, அல்லது சுவைக்கப் போவதுமில்லை.''

ஒரு நாள் தன் காலை ஊன்றி மிதித்த கிரே, ''அதை நான் பருகுவேன்,'' என்றான்.

''என்ன வீரமிக்க இளைஞன் நீ!'' போல் திசோக் கூறினான். ''நீ அதை சொர்க்கத்தில் பருகுவாயா?''

''உண்மையாகத்தான்! இங்கே தான் சொர்க்கமிருக்கிறது! அது எனக்காகத்தான் இருக்கிறது, பார்?'' கிரே மென்மையாகச்

சிரித்து, தனது சிறிய உள்ளங்கையை விரித்தான். அவனது ஊறுபாடு பொறாத ஆனால் நன்கு அமைந்த உள்ளங்கையானது சூரியனால் ஒளிபரப்பப்பட்டு இருந்தது; பிறகு அப்பையன் விரல்களால் உள்ளங்கையைத் திரும்பவும் மூடிக்கொண்டான். ''இங்கு தான் இருக்கிறது! இங்குதான் அது இருக்கிறது, இப்போது அது திரும்பவும் போய்விட்டது!..''

அவன் பேசிய பொழுது தனது உள்ளங் கையை மடக்கவும் விரிக்கவுமாக இருந்தான். கடைசியில், அவனது கேலியில் மகிழ்ச்சியுற்ற வனாய், போல்திசோக்கை முந்தி, கீழ்த் தளத்து நடையனுக்குச் செல்லும் இருண்ட படிக்கட்டில் ஓடினான்.

சமையலறைக்குள் நுழையக் கூடாது என்று கிரே முற்றாகத் தடுக்கப்பட்டிருந் தான், ஆனால் கொழுந்து விட்டெரியும் அடுப்புகளையும், புகைக்கரித் தடத்தையும், கொதிக்கின்ற திரவங்களின் 'உஸ்' என்ற ஒலிகளையும், குமிழ் ஒலிகளையும், கத்திகளின் உரசல்களையும், சுவை எதிர்பார்த்து வாய்நீர் ஊறும் மணத்தையும் கொண்ட அதிசய உலகத்தை ஒரு முறை கண்டுபிடித்து, அந்தப் பெரிய அறையின் சுறுசுறுப்பான பார்வையா ளனாக அப்பையன் மாறினான். தலைமைச் சமையற்காரர்கள், ஏதோ பாதிரிகள் போல அமைதியாக நகர்ந்தார்கள்; புகைக்கரி படிந்த சுவர்களின் பின்னணியில் அவர்களுடைய வெள்ளைத் தொப்பிகள் தொழுகை நடத்து வது போன்ற தோற்றத்தை அவர்களது

பணிக்குத் தரும். பருமனான, சிரிக்கப் பேசும் பாத்திரங் கழுவுபவர்கள் நீர்த்தொட்டிகளில் சீனக்குவளைகள், வெள்ளிக் கரண்டிகள் முதலியவைகளைக் கழுவும் போது ஓசை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்; உள்ளே வந்த பையன்கள், கூடை நிறைய மீன்கள், சரிதழ்ச் சிப்பிகள், கடல் நண்டிறைச்சிகள் மற்றும் பழம் இவற்றின் பளுவால் வளைந்து காணப்பட்டார்கள். நீண்ட மேசையின் மீது, வானவில் போன்ற நிற வான்கோழிகளும், சாம்பல்நிற வாத்துகளும், பிரகாசமான சிறகுகளைக் கொண்ட கோழிகளும் கிடந்தன; சற்று தள்ளி சிறிய வாலினையும், குழந்தை போன்ற மூடிய கண்களையுங் கொண்ட பன்றியின் பிணமும், மேலும் டர்னிப்புகளும், முட்டைக்கோசுகளும், பருப்புகளும், உலர் திராட்சையும், சூரிய ஒளியில் காய்ந்த பீச் பழங்களும் இருந்தன.

கிரே எப்பொழுதுமே சமையலறையில் சற்று அஞ்சிப் பின்வாங்கினான்: ஏதோ விநோத சக்தி ஒன்று இங்கு பொறுப்பில் இருப்பதாக அவன் உணர்ந்தான், மேலும் அந்த சக்திதான் காப்பரண் வாழ்க்கையின் முக்கிய, சுருள் கம்பியாக இருந்தது; கூச்சல்கள் உத்தரவுகளைப் போலவும், மந்திரங்களைப் போலவும் ஒலித்தன; சமையலறை ஊழியர்களின் செயற்பாடுகள் பல்லாண்டு காலப் பயிற்சியின் காரணமான, உள்ளுயிர்ப்பு போலத் தோன்றும் துல்லியமானதும் அளவொத்ததுமான தாளத்தைப் பெற்றன. வெசூவியஸ்

எரிமலைச் சிகரம் போலக் குமிழ் கிளப்பிய மிகப் பெரிய கொப்பரைக்குள்ளாக எட்டிப் பார்க்கக் கூடிய அளவுக்கு கிரே இன்னும் உயரமாக இல்லை, ஆனால் அதன்பால் ஒரு சிறப்பான மரியாதை இருப்பதாக உணர்ந்தான்; இரண்டு வேலைக்காரப் பெண் கள் அதனைக் கையாண்ட போது கவலை யோடு உற்று நோக்கினான்; அந்த வேளை களில் அடுப்புக்கு உச்சியிலே நீராவி வாரி இறைக்கும், அவ்வாறு எழுந்த நீராவியானது சமையலறை முழுக்க பெரிய அலை போல எழும்பும். ஒரு முறை சிதறியடித்த அதிகளவு திரவமானது, சமையலறைப் பணிப் பெண் களில் ஒருத்தியினுடைய கையில் பட்டுப் புண்ணாக்கிவிட்டது. குருதி பாய்ந்ததனால் தோலானது உடனடியாக சிவப்பாக மாறி விட்டது, புண்ணாகிப் போன தோல் மீது எண்ணெய் தடவியபோது பெட்ஸி (அது தான் அவளது பெயர்) அழுதாள். அவளது வட்டமான, அச்சமுற்ற முகத்தின் கீழே கட்டுப்படுத்த முடியாதபடி கண்ணீர் உருண் டோடியது.

கிரே திடுக்கிட்டுப் போனான். மற்ற பெண்கள் பெட்ஸியைச் சுற்றிப் பரபரப்பாக இருந்த போது, தான் அநுபவித்தறியாத மற்ற நபரது துயரத்தின் வலியை அவன் திடீரென உணர்ந்தான்.

''அது அதிகளவு புண்படுத்தி விட்டது?'' அவன் கேட்டான்.

''முயற்சி செய், நீயும் பார்ப்பாய்,'' தனது

முன்றானையால் கையை மூடிக் கொண்டு பெட்ஸி விடையளித்தாள்.

பையன் முகஞ்சுளித்து, ஒரு முக்காலியின் மீது ஏறினான், கொதிக்கின்ற திரவத்தை (இந்த நேரத்தில் அது ஆட்டுச் சூப்பு) நீளமான கைப்பிடியுள்ள கரண்டியால் முக்கி எடுத்து, தனது மணிக்கட்டில் அதை தெளித்தான். கூர்மையான வலியின் விளைவால் ஏற்பட்ட உணர்விழப்பானது அவனைத் தள்ளாட வைத்தது. அவன் பெட்ஸியிடம் சென்ற போது மாவு போல வெள்ளையாக இருந்தான், வெந்து போன தனது கையைக் கோர்ச்சட்டைப் பைக்கு உள்ளாக மறைத்துக் கொண்டான்.

"அதிக அளவுக்கு உன்னை அது புண் படுத்தி விட்டதென்று நான் நினைக்கிறேன்," என்று அவன் முணுமுணுத்தான், தனது சொந்த அநுபவத்தைப் பற்றி ஏதுமே கூறாது, "டாக்டரிடம் போகலாம், பெட்ஸி, வா போகலாம்."

அவளது குட்டைப்பாவாடையை விடாப்பிடி யாகப் பற்றி இழுத்தான், இதற்கிடையே வீட்டு வைத்தியத்தில் நம்பிக்கை கொண்ட வர்கள் புண்ணை ஆற்றுவதற்கு வேண்டிய எல்லாவகையான ஆலோசனைகளையும் அந்தப் பெண்ணுக்குக் கூறியிருந்தனர். மிகு வலியால் அவள் வேதனைப்பட்டதால் கிரேயைப் பின்தொடர்ந்து சென்றாள். ஏதோ மருந் தைத் தடவி டாக்டர் அவளது வலியைப் போக்கினார். பெட்ஸி புறப்பட்டுப் போனதற்

குப் பிறகே கிரே அவரிடம் தனது கையைக் காட்டினான்.

குறிப்பிடத்தக்கதற்ற இந்த நிகழ்ச்சி இருபது வயதான பெட்ஸியையும், பத்தே வயதான கிரேயையும் நெருங்கிய நண்பர்களாக்கிற்று. அவனது பைகளை அவள் இனிப்புகளும் ஆப்பிள்களும் கொண்டு நிரப்புவாள், அவனும் அவளுக்குத் தனது புத்தகங்களில் படித்த தேவதைக் கதைகளையும் பிற கதைகளையும் கூறுவான். ஒரு நாள் பெட்ஸியால் குதிரைக் காரனான ஜிம்மை மணக்க முடியவில்லை, ஏனெனில் அவர்களுக்கென ஒரு சொந்த வீட்டை அமைத்துக் கொள்வதற்கு வேண் டிய பணம் அவர்களிடம் இல்லை என் பதைக் கண்டுபிடித்தான். தன்னுடைய சீன உண்டியலை உடைப்பதற்காக கிரே கணப் படுப்புக் கரண்டியைப் பயன்படுத்தி, அதன் உள்ளிருந்ததைக் குலுக்கி எடுத்தான். அதில் ஏறத்தாழ நூறு பவுண்டுகள் சேர்ந்தது. சீக்கிரமாக எழுந்த அவன், சீதனம் கொடுப் பதற்கற்ற பெண் சமையலறைக்குச் சென்ற நேரத்தில், அவளது அறைக்குள்ளாக மறைந்து ஒதுங்கி நழுவிச் சென்று அலமாரியில் தனது அன்பளிப்பை வைத்தான். அதன் மீது ஒரு குறிப்பும் வைத்தான்: "இது உன் னுடையது, பெட்ஸி. (கையெழுத்து) ராபின் ஹூட்." சமையலறையில் ஏற்பட்ட குழப்ப மானது அந்தளவு பெரிதாகி, கிரே தனது தீரச்செயலை ஒத்துக்கொள்ள வேண்டியதாகி யது. அவன் பணத்தைத் திரும்பப் பெற்றுக்

கொள்ளவில்லை, அது பற்றி வேறு வார்த்தை எதுவும் சொல்லவும் விரும்பவில்லை.

ஏற்கெனவே தயாராக உள்ள அச்சில் ஊற்றத்தக்கது போன்ற வாழ்க்கை முறையைக் கொண்டவர்களில் ஒருத்தியாக அவனது தாயார் இருந்தாள். ஒரு சாதாரண ஆன்மாவின் ஒவ்வொரு ஆசையும் நிறை வேறக்கூடிய வளமை மிக்க கனவுலகிலே அவள் வாழ்ந்தாள்; ஆகவே, தன்னுடைய உடை தயாரிப்பாளர்கள், டாக்டர் மற்றும் ஏவலாள் இவர்களோடு ஆலோசிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் அவளுக் கில்லை. ஆனால் விநோதமான குழந்தைக் கான அவளது ஆர்வமும் ஓரளவு சமயசார் பான பிணைப்பும் அவளது மனச்சார்புக் கான ஒரு வடிகாலாக மட்டுமே இருந் தது.

இந்த மனச் சார்புகள் வளர்ப்பா லும் விதியாலும் தைலமிடப் பட்டு பாது காக்கப்பட்டது, அவை தற்போது உயிரோடு இல்லாமல், ஆனால் தெளிவற்று புளித்த நிலையில், மன உறுதியை செயலற்று வைத்து விட்டன. உயர்குடிப் பிறப்புக் கொண்ட பெரு மாட்டி அன்னம் முட்டையிட்ட பெண் மயிலை ஒத்திருந்தாள். தன் மகனுடைய கீர்த்திமிக்க தனித்தன்மை பற்றி அவள் துடிதுடிப்புடனே அறிந்திருந்தாள்; பையனை மார்போடு வைத்து அவள் அழுத்திய போது கவலையும், அன்பும், வலிந்த உணர்ச்சியடக்கமும் அவளை நெருக் கின. மரபு வழிப்பட்ட உறவுகளையும்

எண்ணங்களையும் வழமையாகப் பிரதிபலிக்கும் நாக்கைப் போல அல்லாது அவளது இதயம் பேசியது. சூரியக் கதிர்கள் போல பொதுக் கட்டிடத்தினுடைய செப்பமுடைய உட்பகுதியை ஊடுருவி, அதனது பொதுவான சிறப்புகளைச் சிதைத்தது; கண் பார்க்கிறது ஆனால் அறையை அடையாளங் காண முடியவில்லை: பயனற்றவைகளுக்கு மத்தியில் ஒளியின் புதிரான நுட்ப நிறச் சாயல்கள், ஒரு மினுமினுப்பான இசைவினை ஏற்படுத்துகின்றன.

இந்த உயர்குடிப் பிறந்த பெருமாட்டி – அவளது முகமும் மேனியும், வாழ்க்கையின் அனற்பிழம்பான குரல்களுக்கு பனிக்கட்டி அமைதியாகப் பிரதிபலிப்பது போலக் காணப் பட்டது, நுட்பமான அவளுடைய அழகானது கவர்ந்திழுப்பதற்குப் பதிலாகத் துரத்தியது, ஏனெனில் அவளது உள்ளத்தின் ஏளன இறுமாப்புக் கொண்ட, பெண்மையின் கவர்ச்சி இல்லாத முயற்சியை ஒருவர் அறிய முடியும் – அதே லில்லியன் கிரே, பையனுடன் தனியாக இருக்கும் போது, சாதாரணத் தாயாக மாறி, அன்புமிக்க, மென்மையான குரலில் காகிதத்திற்கு ஆட்படாத அர்த்தமற்ற சொற்களைப் பேசிக் கொண்டிருப்பாள்; அவற்றின் சக்தி உணர்ச்சியில் அடங்கியது, அவற்றின் பொருளில் இல்லை. தன் மகனுக்கு எதையுமே அவளால் மறுக்க முடியவில்லை. எல்லாவற்றிலும் அவனை அவள் மன்னித்தாள்: சமையலறைக்குச் செல்வது, பாடங்களில்

அவன் காட்டும் அருவருப்பு, அவனது கீழ்ப்படியாமை மற்றும் அநேகச் சபலப் புத்திகள்.

பரண் அமைப்பதற்கு மரங்கள் பயன் படுத்தப்பட வேண்டாம் என அவன் விரும்பி னால், அவை தொடாமலே விடப்பட்டன: யாரேனும் மன்னிக்கப்பட வேண்டும் அல்லது வெகுமதியளிக்கப்பட வேண்டும் என அவன் கேட்டால் அது அவ்வாறே நடக்கும் என்று சம்பந்தப்பட்ட ஆளுக்குத் தெரிந்தது; விரும் பிய எந்தக் குதிரைமீதும் அவனால் பயணம் செய்ய முடியும், விரும்பிய எந்த நாயையும் காப்பரணுக்குக் கொண்டு வரமுடியும், நூலகத் தில் புத்தகங்களைப் படிக்கலாம், வெறுங் காலோடு சுற்றி ஓடிவரலாம், விரும்பியனவற் றை உண்ணலாம்.

இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று அவனுடைய தந்தை முயன்றார், இறுதியில் விட்டுக் கொடுத்தார்—கொள்கைக்காக அல்ல, ஆனால் அவரது மனைவியின் விருப்பங் களுக்காக. தாழ்ந்த சமூகத்தோடு பழகுவது மூலமாக பையனுடைய விருப்பங்கள் சார் தலாக மாறி, ஒழிப்பதற்கு முடியாததாகி விடும் என்ற அச்சத்தில் அவர் எல்லா வேலையாட்களுடைய குழந்தைகளையும் காப் பரணிலிருந்து அனுப்புமாறு செய்தார். பொது வாக, குடும்பத்தின் கணக்கற்ற சொத்துத் தாவாக்களினால் முழுமையாக ஆட்கொள் ளப்பட்டார். அவைகளின் தொடக்கமானது முதலாவது காகிதத் தொழிற்சாலை ஆரம்

பிக்கப்பட்ட காலத்திற்குப் பின் சென்றது, அவற்றின் முடிவானது ஒருவேளை கடைசி பழிதூற்றுபவனின் மரணத்தின் போது இருக்க லாம். விரிவான கடிதத் தொடர்புகளும் இருந்தன; குடும்பத்தின் எஞ்சியவர்களிட மிருந்து தன்னை ஓரளவுக்குத் தள்ளிவைத்துக் கொள்வதற்காக, அரசு விவகாரங்களை, சொந்த எஸ்டேட்டுகளை நடத்துவதும், நினைவுகளைச் சொல்லி எழுதவைப்பதும், நரிவேட்டைகளும், பத்திரிகைகளைப் படிக்கச் செய்வதும், சில நேரங்களில் பையனுக்கு என்ன வயது என்பதைக் கூட மறந்து விடும் அளவுக்கு அவர் தனது மகனை அரிதாகப் பார்த்தார்.

இங்ஙனமாக, தனது சொந்த உலகத்திலே கிரே வாழ்ந்தான். அவன் தானாகவே விளையாடினான் – வழக்கமாக பண்டைக் காலத் தில், போர்த்திற நடவடிக்கைகளுக்காகப் பயன்பட்ட காப்பரணின் பின்பக்கத்து முற்றங் களில். ஆழமான அகழிகளின் எச்சங்களும், பாசி படிந்த கல் நிலவறைகளும் கொண்ட இத்தகைய பரந்த இடங்களில் கோரைப் புற்களும், காஞ்சிரஞ் செடிகளும், முட் செடிகளும், சிறு பூக்கள் கொண்ட முட்புதர் களும் ஆடம்பரமற்ற பிரகாசமான வெண்ணிறப் பூக்களும் அடர்ந்து வளர்ந்திருந்தன. இங்கே கிரே, நுன்னெலிப் பொந்துகளைத் தேடுவது, கோரைப் புற்களை அடிப்பது, வண்ணத்துப் பூச்சிகளைப் பதுங்கிப் பின்சென்று வேட் டையாடுவது, உடைந்த செங்கற்களைக்

கொண்டு கோட்டைகளை எழுப்புவது, பின்னர் அவற்றைக் குச்சிகளாலும் கற்களாலும் உடைத்து நொறுக்குவது என மணிக்கணக்கில் நேரத்தைச் செலவிடுவான்.

அவனுக்குப் பன்னிரண்டு வயது நடந்து கொண்டிருந்த போது, அவனது உள்ளத்தின் எல்லாச் சிக்கல்களும், அவனது மனநிலையின் எல்லாவித தனித்தனி சாயற்கூறுகளும், இரகசியத் தூண்டுதல்களின் நிழ்ல்களும் சக்தி மிக்க ஓர் ஊக்கமாய் ஒன்று சேர்ந்தன, இந்த வழியில் இணக்கமான உணர்ச்சிப் போக்குக் கைவரப் பெற்று, அடக்க முடியாத ஆர்வம் கொண்டவன் ஆனான். தனது தோட்டத்தின் தனித்த பகுதிகளை — நன்கு வெயில் படும் இடம், நிழல், ஒரு மலர், ஒரு பெரிய கருத்த மரத்தண்டு — இவற்றை அவன் வேறு பிற தோட்டங்களில் அதுவரை பார்த்து வந்தான். அவற்றை திடீரென்று — அவற்றை எல்லாம் கம்பீரமான வியப்புறும் தகுதியில் தெளிவாகப் பார்த்தான்.

இது நூலகத்தில் நடந்தது. மங்கலான கண்ணாடியை உச்சியில் கொண்ட கதவானது வழக்கமாகப் பூட்டியே இருக்கும், ஆனால் தாழ்ப்பாள் துளையில் சரியாகப் பொருந்தாது இருந்தது, வலுவாக அழுத்திய போது, கதவு திறந்து கொக்கி எடுத்துக் கொள்ளும். முதல் முறை கிரே நூலகத்திற்குள் நுழைந்த போது மங்கலான வெளிச்சத்தால் வியப்புற்றான். கண்ணாடிப் பலகணியின் வர்ணமிக்க அமைப்பு இதற்கான வெளிச்ச விளைவையும்,

தனித்தன்மையையும் ஏற்படுத்தியது. ஏகாந் தத்தின் அமைதியானது குளத்தில் உள்ள நீரைப் போல இங்கே தோன்றியது. இங்கு மங்குமாக சன்னலை ஒட்டியிருந்த இருண்ட வரிசையிலான புத்தக அலமாரிகள், வந்த வெளிச்சத்தையும் பாதிமறைத்து நின்றன; புத்தக அலமாரிகளுக்கு இடையே இருந்த இடைக்கழியானது உயரமான புத்தகத் தொகுதி களால் நிறைந்திருந்தன. மையப் பக்கங்கள் கழன்று போய் திறந்து கிடந்த ஆல்பம் ஒன்றும் இங்கிருந்தது; சற்றுத் தள்ளி தங்கக் கம்பிகளால் கட்டப்பட்ட சில சுருள்களும் கிடந்தன; துயரமான தோற்றம் கொண்ட புத்தகங்களின் அடுக்குக் குவியல்களும், கை யெழுத்துப் பிரதிகளின் அடர்ந்த கட்டுகளும், திறந்த மாத்திரத்தில் மரப்பட்டைகள் போல உடையும் சிறிய அளவிலான தொகுதிகளின் குவியல்களும் இருந்தன; இங்கே சில வரைபடங் களும், அட்டவணைகளும், புதிய பதிப்புகளின் வரிசைகளும், தேசபடங்களும் கிடந்தன; பல்வேறு விதமான அட்டைகள் — கரடுமுர டான, அருமையான, கறுப்பான, அடைதிரள் வண்ணம் உடைய, நீல, சாம்பல் நிற, அடர்த்தியான, மெலிந்த, சொரசொரப் பான, வழவழப்பானவை இருந்தன. புத்தக அலமாரிகள் புத்தகங்களால் நிறைந்து இருந்தன. தங்களுடைய உட்பகுதிகளுக்குள்ளாகவே வாழ்க் கையை அமைத்துக் கொண்ட சுவர்கள் போல அவை தோன்றின. புத்தக அலமாரி களின் கண்ணாடிகள், வர்ணமற்ற, மினுமினுப்

புக் கொண்ட புள்ளிகள் கொண்ட பிற புத்தக அலமாரிகளைப் பிரதிபலித்தன. நிலநடுக் கோட்டாலும், தீர்க்கக் கோட்டாலும் பித் தளை உருண்டை வடிவச் சிலுவையில் அமைந்த ஒரு மிகப் பெரிய பூகோளமானது வட்டமான மேசையின் மீது இருந்தது.

வெளிச் செல்லும் வழியில் திரும்புகையில், கதவுக்கு மேலாக மாபெரும் ஓவியத்தைக் கிரே பார்த்தான். அதனுடைய உருவங்கள் நூலகத்தின் கண்டிப்பான அமைதியை உடனடி யாக நிறைவு செய்தன. பயங்கர அலை விளிம்பின் மீது உயருகின்ற கப்பலைப் பற்றியதாக அந்த ஓவியம் இருந்தது. அதனது பக்கத்திலே நுரை பொங்கியது. மேல்நோக்கிய போக்கின் கடைசி கணத்தை அது சித்தரித்தது. பார்வையாளனை நோக்கி அந்தக் கப்பல் நேராக வந்து கொண்டிருந்தது. உயர்ந்து நின்ற கப்பலின் முன்புற மரச்சட் டமானது பாய்மரங்களின் அடிப்பகுதியை மறைத்தது. கப்பலின் ஓடக்கட்டையால் கீறப்பட்ட பேரலையின் விளிம்பானது, மிகப் பெரும் பறவையின் இறக்கைகளை ஒத்திருந் தது. காற்றிலே நுரை பொங்கிப் பெருகின. கப்பலின் இடது பக்கத்தின் பின்னாலும் முன்புற மரச்சட்டத்திற்கு மேலாகத் தெளி வில்லாது புலப்பட்ட கப்பற் பாய்கள் கனத்த வேகத்தோடு வீசிய சூறாவளியால் புடைத்துக் காணப்பட்டன. அவை சிரமத் தோடுதான் நுணுகிக் காணக்கூடியதாக இருந்தன. ஆனால் அலை விளிம்பைத்

தாண்டிச் சென்று, தன்னைச் சரிசெய்து கொள்ளும். பிறகு வெறுமையை எதிர்த்து, கப்பலைப் புதிதாக வந்த பெரிய அலைகளுக்கு இழுத்துச் செல்லும். துண்டு துண்டாக மேகங்கள் பெருங்கடலுக்கு மேலே தாழ்வாகச் சுழித்தோடின. வரும் இரவின் இருளை எதிர்த்து மங்கலான வெளிச்சம் வீணாகப் போரிட்டது. ஆயினும், அந்த ஓவியத்தில் மிகவும் கவருகின்ற அமிசம் கப்பலின் முன்புற மேடையில், பார்வையாளனுக்குத் தனது முதுகைக் காட்டியபடி நின்று கொண்டிருந்த ஒரு மனிதனது உருவமேயாகும். அந்தச் சூழலையும், அந்தக் கணத்தின் தன்மையையும் அது முழுமையாகப் பிரதிபலித்தது. அந்த மனிதனுடைய நிற்கும் நிலையானது (அவன் கால்களை அகல விரித்தபடியும் கைகளை நீட்டியபடியும் நின்றான்), அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதை உண்மையில் காட்டுவதாக இல்லை, ஆனால் பார்வையாளனுக்குத் தெரியாத அந்தக் கப்பலின் மேல்தளத்தில் எதையோ குறிப்பிட்டுக் காட்டியபடி அக்கறையோடு காணப்படுகிறான் என்பதை யூகம் செய்ய முடிந்தது. அவனது மேற்சட்டையின் மடித்த ஓரமானது காற்றினால் புரட்டி விடப்பட்டிருந்தது; அவனது வெள்ளைச் சடைப் பின்னலும், கருப்பு வாளும் காற்றில் மேலே அடித்துச் செல்லப்பட்டிருந்தன; அவனது ஆடையின் உயர்வு அவன் காப்டனாக இருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டியது; அவனது நடனமாடு

கின்ற பாவனை — அலையின் வீச்சு; குல்லாய் இல்லாத அவன், வெளிப்படையாகவே, ஆபத்தான கணத்தால் முழுமையாக ஆட்கொள்ளப் பட்டு உரக்கக் கத்திக்கொண்டிருந்தான் — ஆனால் என்ன? கடலில் விழுந்து கொண் டிருக்கின்ற ஒரு மனிதனைப் பார்த்தானா, திசையை மாற்றுவதற்கு ஓர் உத்தரவு பிறப்பித்துக் கொண்டு இருக்கிறானா, அல்லது, காற்றிற்கு மேலாகக் கத்திக் கொண்டு, கப்பற் பொறுப்பாளரை அழைத்துக் கொண் டிருக்கிறானா? சிந்தனைகள் அல்ல, ஆனால் இந்தச் சிந்தனைகளின் நிழல்கள், அந்த ஓவியத்தைப் பார்த்த போது கிரேயின் இதயத்தில் உருக்கொண்டன. இடது புறத்தி னின்றும் யாரோ தன்னை நெருங்கி தனக்கு அருகே இப்போது நிற்பதை அவன் திடீரென்று உணர்ந்தான், அறியப்படாதவன், பார்க்கப் படாதவன்; இந்தக் குழப்பமான மனநிலை ஒரு சுவடும் இல்லாமல் மறைய அவன் தனது தலையைத் திருப்ப வேண்டியிருந்தது. இதை கிரே அறிந்தான். ஆயினும், அவனது கற்பனையை அவன் வெளியே உறிஞ்சித் தள்ளிவிடவில்லை, ஆனால் அதை உற்றுச் செவிமடுத்தான். ஓசையற்ற ஒரு குரல் அநேகக் குறுகலான சொற்றொடர்களை உரக்கச் சொல்லியது, மாலேயின் பேசியது போல அது புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது; அதைத் தொடர்ந்தது பனிப் பாறைச் சரிவுகளின் மோதல் போன்ற சத்தங் களும் எதிரொலிகளும், இரக்கமற்ற காற்றும்

நூலகத்தை நிறைத்தன. இவை எல்லாவற்றையும் கிரே தனக்குள்ளாகவே கேட்டான். அவன் சுற்றிலும் பார்த்தான்: திடீரென்று திரும்பவும் ஏற்பட்ட அமைதியானது அவனது கற்பனையின் கணீரென்ற நூலாம்படையை அறுத்தெறிந்தது; புயலோடு உறவு முறிந்தது.

இந்த ஓவியத்தைப் பார்க்க கிரே பல முறை திரும்பினான். இது ஆன்மாவுக்கும் வாழ்க்கைக்கும் இடையே உறவாடுவதற்குத் தேவையான வார்த்தையாக அவனுக்கு மாறியிருந்தது. அவ்வார்த்தை இல்லாமல் ஒருவன் தன்னைப் புரிந்துகொள்வது சிரமமானதாகும். பெரிய கடலானது படிப் படியாக அந்தச் சிறிய பையனுக்குள் இடம் பிடித்துக் கொண்டிருந்தது. நூலகத்திலுள்ள நூல்களைப் படித்துப் பார்த்து, எவற்றின் தங்கக் கதவின் பின்னால் பெருங்கடலின் நீல மினுமினுப்பைப் பார்க்க முடிந்ததோ அந்தப் புத்தகங்களைத் தேடிப்பார்த்தும் ஆர்வத்தோடு படித்தும் அதனோடு அவன் அறிமுகம் செய்து கொண்டான். அங்கே, அவற்றின் பின்புறத்தில் நுரை தள்ளிக் கொண்டபடி, கப்பல்கள் சென்றன. சில தங்களது கடற்பாய்களையும், பாய்மரங் களையும் இழந்து விட்டு, அலைகளால் சுற்றிச் சூழப்பட்டு, ஆழத்தை நோக்கிச் சென்றன, அங்கே இருளிலே மீன்களுடைய சுடர்விடுகிற கண்கள் பளிச்சிட்டன. மற்றவை, குமுறும் அலைகளால் பிடிபட்டு, பாறைகளில் மோதிச் சிதைந்தன; வடிந்து வந்த அலையா

னது கப்பலின் கட்டுமானத்தையே ஆபத்தான முறையில் உலுக்கியது; ஆளற்ற கப்பலானது அதனது கிழிந்து போன கடற்பாய்களோடு, மற்றொரு புதிய புயல் அதனைச் சுக்கு நூறாக்குகின்றவரை வேதனையோடு காலங் கடத்தியது. இன்னும் சில குறிப்பிட ஏதுமில் லாமல் ஒரு துறைமுகத்திலே சரக்குகளை ஏற்றி மற்றொரு துறையிலே இறக்கின; கப்பலின் குழுவினர், அருந்தகத்தில் மேசையின் முன்னால் சுற்றி அமர்ந்து கொண்டு, கடல் வாழ்க்கையைப் புகழ்ந்து, மகிழ்ச்சியோடு சாராயத்தைப் பருகிக் கொண்டிருந்தார்கள். பயங்கரமான, வளைந்த குறுவாள்களைத் தாங்கிக் கொண்டிருந்த குழுவினர்களைக் கொண்ட கடற்கொள்ளையர் கப்பல்களும் இருந்தன. சாவினையொத்த நீலவண்ண வெளிச்சத்தில் ஒளிமயமான மாயக் கப்பல் களும் இருந்தன; போர்வீரர்களையும் பீரங்கி களையும், இசைக் குழுவினரையும் கொண்ட கப்பற்படை கப்பல்களும் இருந்தன; எரிமலை களையும் தாவரங்களையும், விலங்குகளையும் ஆராயும் விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்ட கப்பல்களும் உண்டு; புதிரும் கலகமும் கொண்ட கப்பல்கள் இருந்தன; கண்டு பிடிப்புகளை ஏற்படுத்தவிருந்த கப்பல்களும், சாதனைகளை மேற்கொள்ளவிருந்த கப்பல் களும் இருந்தன.

இந்த உலகத்திலே, மிகவும் இயற்கையாக, மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் காப்ட னுடைய உருவமானது உயர்ந்து நின்றது.

அவன் தான் கப்பலினுடைய விதி, ஆத்மா மற்றும் மூளை. கப்பல் குழுவினர்களின் வேலை மற்றும் ஓய்வை அவனது குணமே நிர்ணயித்தது. தனது கப்பல் குழுவினர்களை அவனே தேர்ந்தெடுத்தான், அவர்கள் அவனது மனச்சார்புக்குப் பல வழிகளில் பொருந்தி யிருந்தனர். ஒவ்வொரு மனிதனுடைய பழக்கங் களும் குடும்ப வாழ்க்கையும் அவனுக்குத் தெரியும். கப்பற் குழுவினர்கள் கருத்துப்படி, அவன் மந்திர அறிவைப் பெற்றிருந்தான் என்றும் அது நம்பகமான முறையிலே, உதாரணமாக லிஸ்பனிலிருந்து ஷாங்காய்க்கு பரந்த கடலைத் தாண்டிச் செல்ல அவனுக்கு உதவியது என்றும் கருதினார்கள். பன்முகப்பட்ட முயற்சிகளின் வாயிலாக அவன் ஒரு புயலைத் துரத்தி அடித்தான், சுருக்கமான உத்தரவு களால் பீதியை வாயடைத்துப் போகச் செய்தான்; அவனால் விரும்பிய இடத்திற்குக் கப்பல் விடவும் நிறுத்தவும் முடிந்தது; கப்பலைச் செலுத்துவது, சரக்குகளை ஏற்று வது, பழுது திருத்துவது மற்றும் ஓய்வு ஆகியவற்றை அவனே நிர்வகித்தான்; தொடர்ச்சி யான இயக்கத்தினை முழுமையாகக் கொண்ட ஒரு முக்கியமான செயலில், பெரியதாகவும் மிகவும் அறிவுமிக்கதாகவும் உள்ள அதிகாரத் தைக் கற்பனை செய்து பார்ப்பது அதிகக் கஷ்டமானது. இந்த அதிகாரமானது, அதனது தனித்தன்மையும் முழுமையும், ஆர்பியசினு டையதற்குச் சமமானதாக இருந்தது.

காப்டன் பற்றிய இந்தக் கருத்துப்

பாங்கு, இந்தத் தோற்றமும், அவன் வகித்த நிலையின் இந்த உண்மையான எதார்த்தமும் கிரேயின் கற்பனையில் மரியாதைக்குரிய இடத்தைப் பெற்றது. வாழ்க்கையின் எல்லாச் செல்வங்களையும் முழுமையாக ஒரே அமைப்புக்குள்ளே, அதே வேளை ஒவ்வொரு தனிப்பட்ட மகிழ்ச்சியையும் மீறத்தகாதபடி பாதுகாத்துக் கொண்டு, அவ்வளவு வெற்றிகரமாக இணைப்பது என்பது வேறு எந்தத் தொழிலும் இருக்க முடியாது. ஆபத்து, இடர் நேர் கொள்ளல், இயற்கையின் சக்திகள், தொலைதூர நாட்டின் ஒளி, வியப்புக்குரிய அறியாதவை, அவ்வப்பொழுது ஏற்படுகின்ற அன்பு, சந்திப்புகளாலும் பிரிவுகளாலும் மலர்கின்ற; சந்திப்புகள், முகங்கள், நிகழ்ச்சிகள் இவற்றின் கவர்ச்சிகரமான சூழல்; வாழ்க்கையின் முடிவற்ற வேற்றுமை, இப்போதோ உயரே வானத்தில் தென் சிலுவை விண்மீன் குழுவும், இப்போது பெரிய கரடி விண்மீன் குழுவும், எல்லாக் கண்டங்களுமே ஒருவருடைய கூரிய பார்வையுடை கண்களில் இருந்தது, காப்டனுடைய அறையானது எப்போதுமே தாய்நாட்டு விஷயங்களால் நிறைந்திருந்தாலும் — அதனுடைய புத்தகங்கள், படங்கள், கடிதங்கள், ஆண்மைமிக்க மார்பிலே துறுதோல் பதக்கத்திலே பட்டுப் புரியிழையில் கோத்துப் பின்னப்பட்ட காய்ந்த பூக்கள் ஆகியவற்றால் நிறைந்திருந்தது.

தன்னுடைய பதினைந்தாவது வயதின்

இலையுதிர் காலத்திலே ஆர்தர் கிரே வீட்டை விட்டு ஓடினான், கடலின் தங்க வாயில்களின் வழியாகக் கடந்து சென்றான். விரைவில், **அன்செல்ம்** என்னும் இருபாய்மரக் கப்பல் துபெல்டை விட்டு மார்ஸேலுக்குப் புறப்பட்ட போது, அதில் பையனைப் போல உடையணிந்து கொண்ட சிறுமியின் முகத்தோற்றத்தையும் சிறிய கைகளையும் கொண்டிருந்த கப்பல் பையன் ஒருவன் இருந்தான். நாகரிகமிக்க பயணப்பை, அருமையான கையுறைகள் போல, தரமான தோல் காலணிகள், அணி முடிகள் பின்னப்பட்ட உயர்தரப் பருத்திட லினென் ஆகியவற்றிற்குச் சொந்தக்காரனான அந்த கப்பல் பையன் கிரே தான்.

ஓராண்டு காலத்தில், பிரான்சிலிருந்து அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் **அன்செல்ம்** பயணம் மேற்கொண்ட போது, பணியாரத்திற்காகத் தனது கையிருப்பில் ஒரு பகுதியைக் கிரே வீண்செலவு செய்தான், இங்ஙனம் கடந்ததற்குக் கப்பம் கட்டி, எஞ்சியதைத் தற்போதைக்கும் எதிர்காலத்திற்குமாக வைத்திருந்ததைச் சீட்டு விளையாட்டில் இழந்தான். **ஆண்மையுள்ள** மாலுமியாக அவன் விரும்பினான். அவன் சாராயத்தைப் பருகிய போது மூச்சுத் திணறினான், பன்னிரண்டு அடி உயரத்திலிருந்து குதித்து நீச்சலடித்த போது, அவனது இதயம் தடுமாறியது. மிக முக்கியமான ஒன்றைத் தவிர — அவனது விநோதமான, வானளாவப்

பறக்கின்ற ஆர்வத்தைத் தவிர — எல்லாவற்றையும் அவன் படிப்படியாக இழந்தான்; உடல் நலிவடைவது நின்றது, எலும்பு விரிந்தது, தசைகள் வலுப்பெற்றன, அவனது வெளிறிய தோலானது வெயிலில் கன்றியதால் கறுப்பாயிற்று, முன்பே பண்பட்ட நாகரிகமிக்க அக்கறையில்லாது இருந்த கடின வேலை செய்யும் ஒருவனுக்குரிய தனது செயற்பாட்டினை தன்னிடமிருந்து விலக்கியிருந்தான், நெருப்பை உற்றுப்பார்க்கும் ஒருவனைப் போல, அவனது புத்திக் கூர்மைமிக்க கண்களில் தீப்பொறி மின்னியது. மேலும் அவனது பேச்சு, ஒழுங்கற்ற செறுக்கு வாய்ந்த வெட்கப்படும் தன்மைகளை இழந்ததாக, மீன்களின் வெள்ளியைக் கடற்பறவை துடிதுடிக்கக் குத்தி ஊடுருவது போல, சுருக்கமானதாகவும் தெளிவானதாகவும் அமைந்தது.

அன்செல்ம் கப்பலின் காப்டன் ஓர் அன்பான மனிதன், ஆனால் கண்டிப்பான கடலோடி. கெடு நோக்கத்தோடு பையனைத் தன்னோடு தூக்கிச் சென்றான். கிரேயினுடைய நம்பிக்கையிழந்த விருப்பத்திலே, விசித்திரமான சபலத்தை மட்டுமே அவன் கண்டான். இரண்டு மாத காலத்திற்குப் பிறகு கிரே தன்னிடம் வந்து அவனது கண்களைத் தவிர்த்தவனாக இவ்வாறு கூறுவான் என்று குதூகலத்தோடு எதிர்பார்த்திருந்தான்: ‘‘காப்டன் ஹோப், பாய்க்கயிறுகளின் தொகுதிகளில் ஏறி எனது முழங்கைகள் காய்த்துப் போய்

விட்டன; எனது முதுகும் பக்கங்களும் வலிக்கின்றன, விரல்கள் மடிவதில்லை, தலை வெடித்துக் கொண்டிருக்கிறது, கால்கள் நடுங்குகின்றன. எனது கைகள் தாங்குகிற பல பவுண்டு நிறையுள்ள ஈரமான இந்தக் கயிறுகளும் இந்தத் தாம்புக்கயிறுகளும், இழு வைக் கயிறுகளும், பாரஞ்சாம்பியும், உயரமான கம்புகளும், குறுக்குச் சட்டங்களும் எனது எழிலார்ந்த உடலைக் கொன்று வருகின்றன. வீட்டிற்கு என் தாயாரிடம் நான் போக விரும்புகிறேன்.'' இந்தப் பேச்சை சிந்தனையில் கேட்டுக் கொண்டிருந்த பிறகு, கீழ்வரும் பேச்சைக் காப்டன் ஹோப், சிந்தனையிலே ஆழ்ந்தவாறு பேசினான்: ''வாத்தே, நீங்கள் எங்கெல்லாம் போக விரும்புகிறீர்களோ போகலாம். உங்களது அழகிய சிறகுகளில் எதாவது தார் ஒட்டியிருக்குமேயானால், அதனை நீங்கள் வீட்டில் கழுவிக்கொள்ள முடியும் — ரோஜா-மிமோசா ஓடிக்கொலோ னுடன்.'' காப்டன் ஹோப் கண்டுபிடித் திருந்த இந்தக் கொலோன் அவனை அதிக மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. தனது கற்பனை யான கடிந்துரையினை முடிப்பவனாக அவன் திரும்பவும் உரக்கச் சொன்னான்: ''ஆம். ரோஜா-மிமோசாவை நோக்கி நெடுகிலும் ஓடுங்கள்.''

காலம் செல்லச் செல்ல இந்தப் பிரமிக்கத் தக்க உரையாடல் காப்டனுடைய மனத் திலே வருவது குறைந்து வந்தது. ஏனெனில் தனது இலட்சியத்தை நோக்கிக் கிரே

இறுகக் கடித்த பற்களோடும், வெளிறிய முகத்தோடும் முன்னேறிக் கொண்டிருந் தான். மன உறுதியோடு தளர்வற்ற உழைப் பைத் தாங்கிக் கொண்டான். உறுதிவாய்ந்த கப்பலானது அவனது உடலை உடைக்கவும், தகுதியின்மையானது பழக்கங்களால் மாற் றப்படும் போதும் இது மேன்மேலும் அவனுக்கு இலகுவானதாகும் என்று உணர்ந் தான். ஒரு சந்தர்ப்பத்தில் நங்கூரச் சங் கிலியின் கண்ணி அவனை அடித்துத் தளத்தின் மீது தடாலெனத் தள்ளிவிடும், அல்லது கட்டப்படாத கயிறானது பிரிந்து அவன் கைகளைக் கிழித்து, உள்ளங்கையிலி ருந்து சதையை எடுத்துக் கொண்டு போகும், அல்லது இரும்பு வளையத்துடன் கூடிய பாயின் ஈரமான முனை காற்றால் அடிக்கப் பட்டு அவன் முகத்துக்கு நேராக மோதும்; சுருங்கச் சொன்னால், அவனது எல்லா வேலைகளுமே வேதனை தருவதாகவும், மிகுந்த அக்கறையோடு செய்யப்படுவதாகவும் இருந்தன, ஆயினும், முதுகை மெல்ல மெல்ல நிமிர்த்திக் கொண்டு, எவ்வளவு கஷ்டமாக அவன் மூச்சு வாங்கினாலும், ஓர் இகழ்ச்சி யான புன்முறுவல் ஒருபோதும் அவன் முகத்தை விட்டு நீங்கியதில்லை. இந்தப் புதிய சூழ்நிலைகளில் அவன் அவர்களில் ஒருவனாகின்ற வரை அமைதியான முறையிலே பரிகாசங்களையும், அவமதிப்புகளையும், தவிர்க்க முடியாத வசைமொழிகளையும் பொறுத்துக் கொண்டான்; ஆனால் அதன் பிறகு எந்த

ஓர் அவமானத்தையும் கை முட்டியால் சந்திப்பதற்கு அவன் எப்போதுமே தயாராக இருந்தான்.

ஒரு நாள், திறமையான முறையில் அவன் பாய்மரக்கைச் சட்டத்தில் பாயைக் கட்டி கொண்டிருப்பதைப் பார்த்த காப்டன் ஹோப் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்: ''வெற்றி உன் பக்கம் இருக்கட்டும், நீ போக்கிரிப்பயலே.'' தளத்துக்குக் கிரே இறங்கி வந்தவுடன் தனது அறைக்கு அவனை வருமாறு ஹோப் உத்தரவிட்டான், மூலை மடிந்த புத்தகத்தைத் திறந்தபடி, கூறினான்:

''கவனமாகக் கேள்! புகைப் பிடிப்பதை நிறுத்து! நாய்க்குட்டியைக் காப்டன் ஆக்கு வதற்கு நாம் தொடங்கலாம்.''

அவன் படிக்கத் தொடங்கினான், ஒரு வகையில், கடல் பற்றிய பண்டைய வார்த்தை களை உரக்கச் சொல்லி விளங்கக் கூறினான். இது தான் கிரேயினுடைய முதலாவது பாடமாக இருந்தது. ஓராண்டு காலத்திலே மாலுமி சாஸ்திரம், கப்பல் கட்டுதல், கடல்சார்ந்த சட்டம், கப்பலோட்டியின் வழி முறைகள் மற்றும் வணிகவியல் எல்லாவற்றை யும் அறிந்து கொண்டான். காப்டன் ஹோப் அவனோடு கைகுலுக்கினான். அவர்கள் இரு வரையும் ''நாம்'' என்று குறிப்பிட்டான்.

முழுமையாகக் கண்ணீரும் பேரச்சமும் நிரம்பிய தாயாரின் கடிதம் கிரேக்கு வான்கூவரில் கிடைத்தது. அவன் பதில் எழுதினான்: ''எனக்குத் தெரியும். ஆனால்

என்னைப் போலவே உன்னால் பார்க்க முடிந்தால் மட்டும்: என்னுடைய கண்களால் பார். என்னைப் போலவே உன்னால் கேட்க முடிந்தால் மட்டும்: உன்னுடைய காதிலே ஒரு சிப்பியை வைத்துக்கொள் — அது நிரந்தரமான அலை ஒலியை எடுத்துச் செல்கிறது; நான் செய்வது போலவே உன்னால் நேசிக்க முடிந்தால் மட்டும் — ஒவ்வொன்றையும், உன்னுடைய கடிதத்திலே அன்பு, காசோலை இவற்றோடு ஒரு புன்முறுவலையும் என்னால் கண்டிருக்க முடியும்...'' துபெல்டுக்குச் சரக்கு ஏற்றிக் கொண்டு அன்செல்ம் வருகின்ற வரை, அவன் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டான். அங்கிருந்து, கப்பல் கட்டு துறையில் இருந்தபோது, இருபது வய்தான கிரே காப்பரணைக் காண்பதற்காகப் புறப்பட்டுச் சென்றான்.

எப்போதும் இருந்தன போலவே ஒவ்வொன்றும் இருந்தன; இளம் எல்ம் மரங்களின் தழை நிறைந்த உயர் பகுதியானது சற்று பெரிதாக இருந்ததைத் தவிர, ஐந்தாண்டுகளுக்கு முன்னால் இருந்த விவரங்களிலும் பொதுவான மனப்பதிவிலும் மாறாதபடி எல்லாம் இருந்தன. மரங்கள் உருவாக்கி இருந்த நிழலானது கட்டிடச் சுவர்மீது நகர்ந்து விரிவாகியிருந்தது.

ஓடிவந்த வேலையாட்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்கள், இந்த கிரேயை நேற்றுத்தான் வணங்கியது போல அவ்வளவு மரியாதைக் காட்டித் திடுக்கிட்டார்கள். தாயார் எங்கே

இருக்கிறாள் என்று அவனுக்குச் சொன்னார்கள்; உயர்ந்த அறைக்குள்ளாக அவன் நுழைந்தான், கதவை இழுத்து மெதுவாக மூடிவிட்டு ஓசையின்றி நின்றான், கருப்பு உடையணிந்து இப்போது நரைத்த மயிர் கொண்ட பெண்ணை உற்றுப்பார்த்தான். சிலுவை பீடத்திற்கு முன்னால் அவள் நின்று கொண்டிருந்தாள்; இதயத்துடிப்பைப் போல, ஆர்வமிகுந்த அவள் முணுமுணுப்பைக் கேட்க முடிந்தது. ''கடலில் இருக்கின்ற கடலோடிகள், தொலைதூரத்துப் பயணிகள், நோய்வாய்ப்பட்டோர், துயருறுவோர் மற்றும் சிறைப்பிடிக்கப்பட்டோரைப் போற்று,'' என்று விரைவாக மூச்சுவிட்ட கிரே கேட்டான். பிறகு தொடர்ந்தது: ''என் மகனுமே...'' அப்போது அவன் பேசினான்: ''நான்...'' ஆனால் மேற்கொண்டு பேச அவனால் முடியவில்லை. அவன் தாய் திரும்பினாள். அவள் மெலிந்து போயிருந்தாள்; செதுக்கி உருவாக்கப்பட்ட அவளது இறுமாப்புக் கொண்ட முகத்திலே ஒரு புதிய வெளிப்பாடு பளிச்சிட்டது, இளமை திரும்புவது போல. தன் மகனை நோக்கி அவள் விரைந்தாள்; தொண்டை கட்டிய குறுகிய சிரிப்பு வெளிப்பட்டது, கட்டுப்படுத்தி வைக்கப்பட்ட வியப்புக்குறி, அவளது கண்களில் கண்ணீர் – இது அவ்வளவே. ஆனால் அந்தக் கணத்திலே அவள் முன்னைய வாழ்வு முழுவதைக் காட்டிலும் மிகவும் நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தாள்.

''உன்னை உடனடியாக அடையாளங் கண்டு கொண்டேன், என் அன்பே, என் மகனே!''

உண்மையில் கிரே பெரியவனாவதை நிறுத்திக் கொண்டு விட்டான். தன் தந்தையின் மரணம் பற்றி தாய் கூறிய கதையைக் கேட்டான். பிறகு தன்னைப் பற்றி அவளிடம் சொன்னான். எந்தவிதமான நிந்தனையோ மறுப்போ சொல்லாமல் அவன் கூறுவதை அவள் செவிமடுத்தாள். ஆனால் அவளுக்கு — தன் வாழ்க்கைக்கு ஆதாரமாக அவன் தெரிவித்த ஒவ்வொன்றிலுமே — அவளது பையன் விளையாடிக் கொண்டிருக்கும் பொம்மைகளாகத் தோன்றின. அந்த விளையாட்டுப் பொருள்கள் கண்டங்களாகவும், பெருங்கடல்களாகவும், கப்பல்களாகவும் இருந்தன.

காப்பரணில் கிரே ஏழு நாட்களைச் செலவிட்டான்; எட்டாவது நாளில், தன் னோடு நிறையப் பணத்தை எடுத்துக் கொண்டு துபெல்டுக்குத் திரும்பினான், காப் டன் ஹோப்பிடம் சொன்னான்:

''நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். நீங்கள் எனக்கு நல்ல நண்பர்களாக இருந்தி ருக்கிறீர்கள். இப்போது, பிரியாவிடை பெறுகி றேன், எனது மூத்த நண்பரே.'' இரும்புப் பிடியைப் போல ஒரு கைகுலுக்கலுடன் தனது வார்த்தையை முடித்துக் கொண்டான். ''இப்பொழுதிலிருந்து நான் தனிமையில் கடற்பயணம் மேற்கொள்ளப் போகிறேன், என்னுடைய சொந்தக் கப்பலில்.''

ஹோப்பின் முகம் சிவந்தது, அவன் காரித்துப்பினான், வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்டு அப்பால் சென்றான்; ஆனால் கிரே அவனை முந்திச் சென்று, தோளைச் சுற்றித் தனது கையைப் போட்டான். அவர்கள் அனைவருமாக, மொத்தத்தில் இருபத்தி நான்கு பேர் — ஒன்றாக அருந்தகத்திற்குச் சென்று குடித்தார்கள், கத்தினார்கள், பாடினார்கள், உண்டார்கள், மதுக் கடையிலும் சமையலறையிலும் இருந்த எல்லாவற்றையும் காலி செய்தார்கள்.

சற்று நேரங்கழித்து, துபெல்ட் துறைமுகத்தில் புதிய பாய் மரத்தின் கருப்பு கோட்டுக்கு மேலாக மாலை நட்சத்திரம் பளிச்சிட்டது. அது கிரே வாங்கியிருந்த சீக்ரெட், இருநூற்று அறுபது டன், மூன்று பாய்மரங்கள் கொண்ட கப்பல். வாய்ப்பு அவனை லிசுக்கு அழைத்து வருகின்ற வரை மேலும் நான்கு ஆண்டுகளுக்கு ஆர்தர் கிரே சொந்தக்காரனாகவும், காப்டனாகவும் கடலில் பயணம் செய்தான். எனினும், வீட்டிலே அவனை வாழ்த்திய தொண்டை கட்டிய குறுகிய சிரிப்பை அவன் எப்போதுமே நினைவு கூர்ந்தான். ஆகவே, ஆண்டுகளுக்கு இரு முறை காப்பரணுக்கு வருகை தந்து, இப்பெரிய பையன் ஒருவகையில் தனது பொம்மைகளைக் கையாள்வதற்குத் தகுதி படைத்தவன் என்ற நிச்சயமற்ற நம்பிக்கையை வெள்ளி மயிர் கொண்ட பெண்ணிடம் விட்டுச் சென்றான்.

3

விடியல்

கிரேயினுடைய சீக்ரெட் கப்பலின் பின்பகுதி ஏற்படுத்திய நுரை ஓடையானது ஒரு வெள்ளைக் கீற்றுப் போல பெருங்கடலைக் கிழித்துச் சென்றது, லிஸ் நகரத்தின் மாலை நேரத்து விளக்கொளிகளின் வரு கையால் மறைந்து போயிற்று. கலங்கரை விளக்கிற்கு அருகே கப்பல் நங்கூரமிட்டு நின்றது.

அடுத்த பத்து நாட்கள் முரட்டுப் பட்டு, காஃபி மற்றும் தேயிலையைச் சீக்ரெட் தரையிறக்கியது; கப்பல் குழுவினர் பதினொன் றாவது நாளைக் கரையிலே செலவிட்டார்கள், சாராயத்தால் எழுச்சி பெற்றார்கள்: பன் னிரண்டாவது நாள், எந்தக் காரணமுமின்றி, கிரே வாட்டமுற்றுக் காணப்பட்டான், இந்தச் சோர்வுக்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

காலையில் அவன் எழுந்த போது, இந்த நாள் கருப்புத் திரையால் மூடப்பட்டு தொங்கியிருப்பது போல உணர்ந்தான். கிளர்ச்சி யற்ற படி உடையணிந்தான், அரை மனத் தோடு காலை உணவை முடித்தான், செய்திப்

பத்திரிகை படிக்க மறந்தான், பயனற்ற உணர்வு கொண்ட விவரிக்க முடியாத மன நிலையில் மூழ்கியவனாய் நீண்ட நேரத்திற்குப் புகைப் பிடித்தான்; வெறுமையாக எழுந்த வார்த்தைகளுக்கிடையே, அங்கீகரிக்கப்படாத விருப்பங்கள் ஒன்றையொன்று சம முயற்சியால் அழித்த படி சுற்றிவந்தன. பிறகு அவன் வேலை செய்ய எழுந்தான்.

கப்பற் பொறுப்பாளர் துணை வர, கிரே கப்பலைப் பார்வையிட்டான், இழுவைக் கயிறுகளை இறுக்கமாகக் கட்டும் படியும், சுக்கானைத் திருப்ப உதவும் கயிற்றினைத் தளர்த்தி விடும் படியும் உத்தரவிட்டான். இணை நங்கூர இடை வெளியமைவை துப்புரவு செய்யவும், பாய்களைக் கட்டும் கயிற்றை மாற்றவும், திசைக் காட்டும் கருவியைத் துடைக்கவும், கப்பற்கீழறையைத் திறக்கவும் காற்றோட்டமாகவும், தூய்மையாக வும் இருக்குமாறும் கூறினான். எனினும், இது அவனது இருண்ட மனநிலையைப் போக்கவில்லை. அன்றைய நாளின் சோர் வான மனநிலையால் பொழுதை எரிச்சலுடனும், சோகத்துடனும் கழித்தான்; யாரோ அவனை அழைத்தது போலவும் ஆனால் அவன் யார் என்பதையும் எங்கே என்பதையும் அவன் மறந்து போய்விட்டான்.

மாலை வாக்கில் தனது அறைக்குத் திரும்பி, ஒரு புத்தகத்தைப் பற்றி எடுத்து, அந்த ஆசிரியரோடு நீண்ட நேரம் விவாதித் தான், முரண்தொடைகளை ஓரங்களில்

குறித்துக் கொண்டான். சற்று நேரம் இந்த விளையாட்டால் – கல்லறையிலிருந்து ஆட்சி செய்யும் செத்த மனிதனுடன் இப்படி உரையாடுவது – அவன் மகிழ்வுற்றான். பிறகு, தனது சுங்கானைப் பற்ற வைத்துக் கொண்டு, நீலப் புகையினுடைய மாறுகின்ற படலங்களின், ஒளி வண்ணப் பட்டை ஆடல் நிலைகளில் மூழ்கிப் போனான்.

பொங்கி எழுகின்ற அலைகளுக்கிடையே யான பிளவில் செல்லும் எண்ணெய் அதனது கொந்தளிப்பைத் தணிப்பது போல, புகையிலை யும் பெருமளவுக்கு உணர்வுகளின் வெறியைத் தணிக்கிறது; அவை அமைதியும் இசைத்தன் மையும் வாய்ந்ததாக மாறுகின்றன. ஆகவே, மூன்று சுங்கான்களுக்குப் பிறகு, கிரேயினுடைய சோர்வானது தனது போராட்ட இயல்பை இழந்து, சிந்தனை வயப்பட்ட எண்ணச் சிதைவாக மாற்றம் பெற்றது. இந்த மனநிலையானது அடுத்த ஒரு மணி நேரத் திற்கு நீடித்தது; அவனது ஆன்மாவினின்றும் பனி விலகியபோது, கிரே செயலாற்றுவதற்கு முனைந்தான், நடமாட வேட்கை கொண்டு, மேலே தளத்திற்குச் சென்றான். அப்போது இருட்டாக இருந்தது; நெடுகிலும், ஆழ்துயில் கொண்டிருந்த கருப்பு நீரில், நட்சத்திரங் களும், பாய்மரத்து விளக்குகளின் வெளிச்சங் களும் சிறுதுயில் கொண்டன. கன்னத்தைப் போல வெதுவெதுப்பாக இருந்த காற்று, கடலின் மணத்தைக் கொண்டு வந்தது. கிரே தனது தலையை நிமிர்த்தினான்,

ஒரு நட்சத்திரத்தின் தங்க மினுமினுப்பைக் கூர்ந்தவாறு பார்த்தான்; திடீரென்று, தலை சுற்றுகிற தொலைவைக் கடந்து, ஒரு தூரத்துக் கோளினுடைய நெருப்பு ஊசியானது அவனது கருமணிகளுக்குள்ளாக ஊடுருவியது. வளைகுடாவின் ஆழத்திலிருந்து நகரத்தினுடைய மாலை நேரத்து ஒலியானது அவனது காதுகளை எட்டியது; சில நேரங்களில் கடற்கரையினின்றும் ஒரு சொற்றொடரானது நீரின் கூருணர்வுப் பரப்பு வழியாக மெல்ல அடித்து வரப்பட்டது; அது தெளிவாக இருக்கும், மேற் தளத்தின் மீது பேசப்பட்டது போல. பிறகு கப்பற் தளவாடங்களின் உடைகின்ற ஓசையால் அது உறிஞ்சப்பட்டு விடும்; கப்பலின் முன்புற மேடை மீது ஒரு தீக்குச்சி உராய்ந்தது, ஒருவனுடைய விரல் களும், வட்டமான இரு கண்களும், ஒரு மீசையும் தெரிந்தது. கிரே சீழ்க்கையடித் தான்; கொளுத்தப்பட்ட சுங்கான் நகர்ந்தது, அவனை நோக்கி மிதந்து வந்தது; சீக்கிரத்தி லேயே, அந்த இருட்டில், காவல்காரனின் கைகளையும் முகத்தையும் காப்டன் கண்டு பிடித்தான்.

''என்னுடன் வரப்போவதாக லேதிகாவிடம் கூறு. மீன்பிடி இழுப்புக் கலங்களையும் கூடவே எடுத்து வரும்படி அவனிடம் கூறு,'' கிரே கூறினான்.

துடுப்புப் போடும் படகுக்குள்ளாகக் கீழே சென்று, அங்கே பத்து நிமிடங்கள் வரை லேதிகாவுக்காகக் காத்திருந்தான்; சுறுசுறுப்

பான, சுழலும் கண்கள் கொண்ட இந்த இளைஞன் கப்பலிலிருந்து துடுப்புகளைப் படகிலிருந்த கிரேயிடம் தரும்போது, பக்க வாட்டில் தட்டினான்; பிறகு அவனும் கீழே இறங்கினான், அவற்றைத் துடுப்பு வளையத்தோடு பொருத்தினான், ஒரு பை நிறைய சாமான்களைப் படகின் பின்புறத்திலே வைத்தான். சுக்கான் திருப்பும் கைப்பிடி அருகே கிரே அமர்ந்தான்.

''எங்கே போக, காப்டன்?'' வலது பக்கத் துடுப்பை வலித்து படகை வட்டமிடச் செய்தபடி லேதிகா வினவினான்.

காப்டன் மௌனமாக இருந்தான். இந்த அமைதியின் போது ஒருவராலும் குறுக்கிட முடியாது என்பதைப் படகோட்டி அறிவான், ஆகவே, அவனும் அமைதியாக, துடுப்பை விரைந்து போடத் தொடங்கினான்.

கிரே அவர்களுடைய பயணத்தைக் கடலை நோக்கி அமைத்தான், பின்னர் இடது புறக் கரை வழியாகத் திரும்பினான். அவர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி அவன் அக்கறை கொள்ளவில்லை. சுக்கான் திருப்பும் கைப்பிடி களகளத்தது; துடுப்புகள் கிரீச்சிட்டன, நீரை இறைத்தன; மற்றதெல்லாம் கடலும் மௌனமுமே.

ஒரு நாள் பொழுதிலே ஒரு மனிதன் அநேகச் சிந்தனைகளையும், மனப்பதிவுகளையும், பேச்சுகளையும், வார்த்தைகளையும் கருத்திற் கொள்கிறான், மொத்தமாக அவை பல

கனத்த பெரு நூலை நிரப்ப முடியும். ஒரு நாளின் முகமானது ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டை எடுத்துச் சென்றது, ஆனால் இன்றோ இந்த முகத்தைக் கிரே வீணாக உற்றுப்பார்த்தான். மேற்கண்ட பல உணர்வு களில் ஒன்றானது அதன் தெளிவற்ற கூறுகளில் பிரகாசித்தது. அது போன்ற உணர்வுகளோ ஏராளம், ஆனால் அவற்றிற்கு ஒரு பெயர் வழங்கப்படவில்லை. அவை எப்படி அழைக்கப்பட்டன என்பதைப் பற்றிக் கவலையில்லை, அவை எப்போதுமே வார்த் தைகளின் எல்லைகளுக்கு அப்பால், இன்னும் கருத்துப் படிவங்களுக்கு அப்பாலும், ஓர் இன்நறுஞ்சுவையின் மணத்தைப் போல இருந் தன. அது போன்ற ஓர் உணர்ச்சியின் பிடியில் ஆட்பட்டு கிரே இருந்தான்; உண்மை, அவன் சொல்லியிருக்கக் கூடும்: ''நான் காத்துக் கொண்டிருக்கிறேன். நான் காண்கிறேன். நான் விரைவில் அறிந்து கொள்வேன்,'' —ஆனாலும் இந்தச் சொற்கள் சிற்பக் கலை சார்ந்த கற்பனையாற்றலோடு தொடர்பு கொள்ளும் தனித்தனி ஓவியங் களைக் காட்டிலும் எந்தவகையிலும் மேலானதல்ல. எனினும், இந்தக் கருத்து களில் விருவிருப்பு மிக்க கிளர்ச்சியின் சக்தியும் இருந்தது.

இடது புறத்தில் நெருக்கமான கரை இருளின் அலை படிந்த அடர்த்தியானதாகக் காணப்பட்டது. பலகணிகளின் சிவப்புக் கண்ணாடிகளுக்கு மேலாகப் புகைப் போக்கி

களிலிருந்து பறந்து வரும் கீற்றுகள் நடனமிட்டன; இதுதான் கபேர்னா. கூக்குரலையும், உரத்து வாதாடுவதையும், குரைத்தலையும் கிரேயால் கேட்க முடிந்தது. கிராமத்தின் விளக்குகள் பழைய அடுப்பின் மூடியிலுள்ள துவாரங்களின் வெளிச்சத்தை ஒத்திருந்தன, அதற்குள்ளாக எரிகின்ற நிலக்கரியைச் சிறு புள்ளிகள் போலத் தானே காண முடியும். தூங்குகின்ற மனிதனின் இருத்தல் போன்ற இயல்புடன் வலப்புறத்திலே பெருங்கடல் காணப்பட்டது. கபேர்னாவைக் கடந்து விட்ட நிலையில், கரையை நோக்கி கிரே சுக்கானைத் திருப்பினான். இங்கே நீர் மென்மையாக கரையை அடித்துக் கொண்டிருந்தது; கைவிளக்கை ஏற்றிக் கொண்டு, அகன்ற செங்குத்தான முகப்புடைய மேட்டு நிலத்திலே குழிகளைக் கண்டான், அதற்கு மேலாக பாறைப்பக்கப் படிவிளிம்பு தொங்கிக் கொண்டிருந்தது; அந்த இடத்தை அவன் விரும்பினான்.

''நாம் இங்கே மீன் பிடிக்கலாம்,'' துடுப்புப் போடுபவனது தோளினைத் தட்டியபடி கிரே சொன்னான்.

மாலுமி தெளிவற்ற ஓசையெழுப்பினான்.

''இது போன்ற ஒரு காப்டனோடு நான் பயணம் செய்தது இது தான் முதல் முறை,'' அவன் முணுமுணுத்தான். ''இவன் புத்தி கூர்மை மிக்க காப்டன், ஆனால் **சாதாரணமான வகையல்ல.** ஒரு சிக்கலான காப்டன். அதே நேரத்தில் நான் இவனை விரும்புகிறேன்.''

அவன் துடுப்பை வண்டலிலே செருகினான், படகை அதனோடு கட்டி வைத்தான். அவர்களது முழங்கால் முட்டுகளுக்கும், முழங் கைகளுக்கும் கீழே உருண்ட கற்களில் தத்தித் தடவி ஏறினார்கள். மேட்டு நிலத்திற்கு மேலே ஒரு புதர்காடு இருந்தது. காய்ந்து போன ஓர் அடிமரத்தைக் கோடரி உடைக்கின்ற ஓசை கேட்டது; மரத்தை வெட்டி வீழ்த்திவிட்டு, மேட்டு நிலத்தில் லேதிகா நெகிடி வளர்த்தான். நிழல்கள் நகர்ந்தன, தீநாக்குகள் நீரிலே பிரதிபலித் தன; மங்கிய ஒளியில் புற்களும், கிளைகளும் தெரிந்தன, புகையோடு கலந்த காற்று நெருப்புக்கு மேலாக மினுமினுத்தது.

நெகிடிக்கு அருகே கிரே அமர்ந்தான்.

ஒரு போத்தலை வழிய நீட்டியபடி, ''இதோ, மதுவை அறவே விலக்கிய எல்லாருக் குமாகக் குடிப்பாய், எனது நண்பா லேதிகா. அதே வேளை நீ கொண்டு வந்த வோத் காவானது இஞ்சி போட்டு வாசனையேற் றப்பட்டிருக்கிறது, கொயினா அல்ல.''

தனது மூச்சைப் பிடித்துக்கொண்டு மாலுமி பதில் பேசினான்: ''என்னை மன்னியுங்கள், காப்டன். நீங்கள் பொருட் படுத்தவில்லை என்றால், இதைச் சாப்பிட்டு விடுகிறேன்...'' வதக்கிய கோழிக்குஞ்சின் பாதியைக் கடித்தான், வாயிலிருந்து ஒரு சிறகை எடுத்துவிட்டுத் தொடர்ந்தான்: ''உங்களுக்குக் கொயினா வோத்கா பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால் இருட்டாக

இருந்தது, நான் விரைந்து வந்து விட்டேன். பாருங்கள், இஞ்சி ஒரு மனிதனுக்குக் கசப்புணர்வை ஏற்படுத்துகிறது. நான் சண்டை போட வேண்டி இருக்கும் போது, எப் பொழுதுமே இஞ்சி வோத்காதான் குடிப் பேன்.''

காப்டன் சாப்பிட்டுவிட்டுக் குடிக்கையில், மாலுமி அவனை உற்றுப்பார்த்துக் கொண் டிருந்தான், இறுதியாக இதற்கு மேலும் தன்னால் பொறுத்துக் கொள்ள முடியாமல் பேசினான்:

''காப்டன், அவர்கள் சொல்வதெல்லாம் உண்மையா? நீங்கள் ஓர் உயர்ந்த குடும்பத் தைச் சேர்ந்தவர் என்பது?''

''அது அவ்வளவு முக்கியமல்ல, லேதிகா. உனக்கு விருப்பமிருந்தால் தூண்டிலை எடுத்து மீனைப் பிடி.''

''நீங்கள் என்ன செய்ய?''

''நானா? எனக்குத் தெரியவில்லை. ஒரு கால். ஆனால்... பிறகு.''

கப்பல் குழுவினர்களுக்குப் பெருமகிழ்ச்சி தந்து, தாள லயத்தோடு உரையாடத் திறமை வாய்ந்தவன் லேதிகா. இப்போதும் இவ்வாறும் பாடும் குரலில் பேசியபடி அவன் தூண்டில் கயிற்றை சுருக்கிக்கொண்டிருந்தான்.

''நூற்கயிறு எடுத்தேன், குச்சி ஒன்றை ஒடித்தேன், சாட்டை போல வடித்தேன், கொக்கிதனை மாட்டினேன், தூண்டிலாய் ஆக்கினேன்!'' புழுக்கள் இருந்த ஒரு தகரப் பெட்டிக்குள் பார்த்தான். ''புழுக்களே,

தகரக் குவளையிலே முன்னரோ நீங்கள் புழுதியிலே! இன்பமாய் ஓடித்திரிந்தீர்கள், இப்போ வாடிச் சுரித்தீர்கள், கொக்கியிலே மாட்டிவிட்டேன், கொடுமைதனைக் காட்டி விட்டேன்! மீன்கள் வாழ்த்தட்டும்!'' இறுதி யாக, அவன் நடந்து போனான், பாடியபடியே: ''நிலவும் காய்கிறது, வோத்காவும் மணக்கிறது! மீன்களே, எச்சரிக்கை! கிட்ட நின்று பார்த்தால், நீரில் மிதக்குதே மயக்கமாய் சுறாக்களே! இங்கேதான் லேதிகா மீனைப் பிடிக்கிறான் பாத்தியா!''

நீரையும், அதில் பிரதிபலிக்கும் தீ நாக்கு களையும் உற்றுப்பார்த்தபடி நெகிடி அருகிலே கிரே படுத்திருந்தான். அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான், ஆனால் முயற்சி இல்லாதபடி; இந்த நிலையில் ஒருவனுடைய மனமானது, ஒருவன் சுற்றுப்புறத்தை மறந்த நிலையில் அவற்றைத் தெளிவில்லாமல் தான் புரிந்து கொள்கிறது; நெருக்கித் தள்ளுகின்ற குழுவில் ஓடும் ஒரு பொலி குதிரையைப் போல, அது நசுக்கிக் கொண்டு, தள்ளிக் கொண்டு, நிறுத்திக் கொண்டு விரைந்து செல்கிறது; வெறுமையும், குழப்ப மும், தாமதமுமே மாறிமாறி அதைச் சேர்கின்றன. பொருள்களின் ஆன்மாவுக் குள்ளாக அது அலைகிறது; ஒளிமிக்கக் கிளர்ச்சியிலிருந்து அது இரகசியமான உள் ளுணர்வுகளை நோக்கி விரைகிறது; பூமி யிலிருந்து வானத்திற்குச் செல்கிறது, கற் பனைப் பாத்திரங்களோடு வாழ்க்கைப் பாடத்

தைப் பற்றி உரையாடிக் கொண்டு, ஒருவனது நினைவுகளை அழகுடையதாக வெளிக் கொணர் கிறது. இந்த மேகமூட்டம் போன்ற இயக் கத்தில் எல்லாமே உயிருள்ளதாகவும், மனத் தால் உணரக் கூடியதாகவும் இருக்கின்றன, எல்லாமே ஒரு பிரமை போல இறுகலற்ற நிலையில் இணைக்கப்பட்டிருகின்றன. ஒருவனு டைய ஓய்வெடுத்துக் கொள்ளும் உணர் வானது அடிக்கடி முறுவலிக்கிறது, எடுத்துக் காட்டாக, வாழ்க்கை பற்றிய ஒருவனது சிந்தனைகள் மிகவும் எதிர்பாரா நேரத்தில் வந்த பார்வையாளனால் திடீரென்று கைதட்டி அழைக்கப்பட்டன: ஒருவேளை சுள்ளி இரண் டாண்டுகளுக்கு முன்னால் உடைந்திருக்கலாம். நெகிடிக்குப் பக்கத்தில் இம்மாதிரிதான் கிரே சிந்தித்துக் கொண்டிருந்தான், ஆனால் அவன் 'வேறு எங்கோ' இருந்தான் — அங்கல்ல.

அவன் தலையைத் தாங்கிக் கொண்டிருந்த முழங்கையானது ஈரஞ்செறிந்ததாயும் உணர்ச்சி யற்றதாயும் போயிற்று, நட்சத்திரங்கள் மங்கலாக மின்னின; விடியலுக்கு முன் னிருந்த அமைதியானது மேலும் சோர்வூட்டு வதாக இருந்தது. காப்டன் சிறுதுயில் கொண்டிருந்தான், ஆனால் அவன் அதை உணரவில்லை. குடிக்க வேண்டும் என்கிற ஆசையை அவன் உணர்ந்தான், சாக்கை நோக்கித் தனது கையை நீட்டினான், தூக்கத்தில் அதை அவிழ்க்க முயன்றபடி. பிறகு அவன் கனவு காண்பதை நிறுத்தினான்; அடுத்த இரண்டு மணி நேரம் தனது கைமீது

தலையை வைத்துக் கொண்டிருந்த விநாடி களைப் போலச் சென்றது. இதற்கிடையில், நெகிடிக்குப் பக்கத்தில் லேதிகா இரு முறை தோன்றினான், அவன் புகைத்துக் கொண் டான், தான் பிடித்திருந்த மீன்களின் வாய்களுக்குள் ஆர்வத்தோடு பார்த்தான், அங்கே என்னதான் இருக்கக் கூடும் என்று வியந்தபடி. ஆனால், முற்றிலும் இயற் கையாக, அங்கே எதுவுமே இல்லை.

விழித்தெழுந்த போது, தான் அங்கே எப்படி வர நேர்ந்தது என்பதைக் கிரே கணநேரம் மறந்து விட்டான். மகிழ்வோடு பிரகாசித்த காலைப்பொழுதை வியப்போடு உற்றுப்பார்த்தான், உயரமான மேட்டுப் பகுதியானது ஒளிமிக்கக் கிளைகளால் அலங் கரிக்கப்பட்டிருந்தது. தொடுவானத்திற்கு மேலே குட்டையான கொட்டை மரங்களின் இலை கள் தொங்கின, அவனது கால்களுக்கு மேலாகவும் தொங்கின. மேட்டு நிலத்தின் அடியில் — அவனுக்குப் பின்னாலே என்று கிரே உணர்ந்தான் — அலை மெல்ல அடித்தது. இலையிலிருந்து விழுந்த ஒரு பனித் துளியானது தூங்கி வடிந்த அவனது முகத்தில் ஒரு குளுமையான சிதறலாகத் தெறித்தது. அவன் எழுந்தான். வெளிச்சம் எங்கு நோக்கினும் வெற்றி முகம் காட்டி நின்றது. நெகிடியின் குளிர்ந்து கொண்டிருந்த கங்குகள், புகையின் தளிர்க் கைகளால் இறுகப்பிடிக்கப்பட்டன. புகையின் நறுமணம், பசுமையான காடுகளின் காற்றைச் சுவாசிக்கிற மகிழ்வுக்கு ஒரு

காட்டுத்தனமான இனிமையைத் தந்தது.

லேதிகா பார்வையில் எங்குமே காணப் படவில்லை; சுற்றிலுமிருப்பதை முற்றாக மறந்துவிட்டான்; ஓர் உண்மையான சூதாட் டக்காரனுக்குரிய சுறுசுறுப்போடு அவன் மீன் பிடித்த போது, அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. காட்டை விட்டு புதர்கள் படிந்த சரிவை நோக்கிக் கிரே சென்றான். புற்கள் புகைவிட்டபடி எரிந்தன; ஈரமான பூக்கள் குளிர்ந்த நீரைக் கட்டாயமாக அழுத்தித் துடைக்கும் குழந்தைகளை ஒத்திருந் தன. பசுமை உலகமானது பத்தாயிரக் கணக்கான நுண்ணிய வாய்களால் மூச்சுவிட் டன, தன்னுடைய களிமகிழ்வு கொள்கின்ற கொத்துகளால் கிரேயினுடைய பாதையை மறித்து நின்றன. கடைசியாக புற்களும் மலர்களும் மிகுதி வளர்ந்த இடத்திற்கு காப்டன் வந்து சேர்ந்தான். இங்கே தூங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு பெண்ணைப் பார்த்தான்.

எச்சரிக்கையோடு ஒரு கிளையை நகர்த்தி விட்டு நின்றான், ஓர் ஆபத்தமான கண்டு பிடிப்பைக் கண்டதாக உணர்ந்தான். ஐந்து எட்டுகளுக்கு அப்பால் இல்லாதபடி களைத்துப் போன ஆஸ்ஸோல் அமர்ந்திருந்தாள். ஒரு காலை மடக்கியும், மற்றொரு காலை நீட்டியும் அமர்ந்திருந்தாள்; குறுக்காக மடிக் கப்பட்டிருந்த கைகளில் தனது தலையை வசதியாக வைத்திருந்தாள். அவளது தலைமுடி தாறுமாறாகக் கிடந்தது; கழுத்துப்பட்டையில்

ஒரு பொத்தான் மாட்டப்படாமல் இருந்து, வெள்ளை நிறமான தொண்டைக் குழியைக் காட்டிக் கொண்டிருந்தது; சுருண்ட குட்டைப் பாவாடையானது அவளது முழங்கால் முட்டு களைக் காட்டியபடி விலகிக் கிடந்தது; கன்னத்தின் மீது, கருத்த கேசத்தால் பாதி மூடியிருந்த அழகாக வளைந்த நெற்றியின் நிழலில் அவளது கண்ணிமைகள் தூங்கின. முழங்காலிட்டு அமர்ந்து அந்தப் பெண்ணின் முகத்தைக் கிரே உற்றுப் பார்த்தான். ஆர்னால்ட் போக்லினுடைய ஓவியத்தில் வரும் ஃபானை தான் ஒத்திருப் பதாக அவன் ஒருபோதும் கற்பனை செய்ய வில்லை.

ஒருவேளை, வேறு சூழ்நிலைகளாக இருந் தால், அந்தப் பெண்ணைத் தனது கண்களால் மட்டுமே அவன் பார்த்திருக்கலாம், ஆனால் இப்போதோ அவளை அவன் **வேறுவிதமாகப்** பார்த்தான். ஒவ்வொன்றுமே கிளர்ச்சியை ஏற்படுத்தியது, ஒவ்வொன்றுமே அவனுக்குள் ளாக முறுவலித்தது. இயற்கையாகவே, அவளை அவன் அறிந்திருக்கவில்லை, அல்லது அவளது பெயரை, அல்லது, மேலும், கடற்கரையில் ஏன் அவள் படுத்துத் தூங்கினாள்; ஆனால் இதனால் அவன் பெரிதும் மகிழ்ந்து போ னான். எந்தவிதமான விளக்கக் குறிப்பு களோ, தலைப்போ இல்லாமல் இருந்த படங்களை அவன் விரும்பினான். அத்தகைய படங்கள் ஏற்படுத்தும் உணர்வானது இன்னும் சக்தி வாய்ந்ததாக இருந்தது; அதனது

உள்ளடக்கமானது, வார்த்தைகளால் விளக்கப் படாதது, எல்லையற்றதாகிறது, எல்லாவித மான அனுமானங்களையும், சிந்தனைகளையும் உறுதிப்படுத்துவதாகிறது.

கிளைகள் பரப்பிய நிழலானது, அடிமரங் களை நெருங்கியது ஆனால் கிரே இன்னமும் வசதியற்ற நிலையிலேயே உட்கார்ந்திருந் தான். அந்தப் பெண்ணைப் பற்றிய எல் லாமே தூக்கத்திலிருந்தது: அவளது இருண்ட கேசம் தூங்கியது, ஆடை தூங்கியது, குட்டைப்பாவாடையின் மடிப்பு வரைகள் கூடத் தூங்கின; அவளது உடலை நெருங்கிக் கிடந்த புல்லும் அவள் மீது பரிவு காட்டி அரை துயில் கொண்டிருந்தது போலக் காணப்பட்டது. இந்தக் கருத்து முழுமை யடைந்த போது, கிரே அதனுடைய வெதுவெதுப்பான வளைத்துச் சூழ்ந்த அலை களில் நுழைந்து அதில் பயணம் செய்யலா னான். லேதிகா வெகு நேரமாக உரக்கக் கத்திக் கொண்டிருக்கிறாள்: ''காப்டன்! எங்கே இருக்கிறீர்கள்?'' ஆனால் அவள் கூறுவதைக் காப்டன் கேட்கவில்லை.

இறுதியாக அவன் எழுந்த போது, கோபமூட்டப்பட்ட பெண்ணின் உறுதியும் உத்வேகமும் பற்றிய வழமையில்லாத முன் னுணர்வானது அவனையும் அறியாமல் எழுந் தது. சிந்தனையில் ஆழ்ந்தபடி, அரிய செல்வமான பழைய மோதிரத்தைத் தனது விரலினின்றும் அவன் கழற்றினான், ஒருவே ளை, இந்த வழியில், எழுத்திலக்கணம்

போல வாழ்க்கைக்கு அவசியமான ஏதோ ஒன்றை கூறிக்கொள்கிறான் என்று காரணத் தோடு சிந்தித்துக் கொண்டிருந்தான். அவளது தலைக்குப் பின்புறம் வெண்மையாகக் காட்டிய சுண்டு விரல் மீது மோதிரத்தை மெதுவாக நழுவ விட்டான். அத்தொல்லையினால் சுண்டு விரல் சுரித்து வளைந்து கொண்டது. இந்தத் துயிலமைதி கொண்ட முகத்தைத் திரும்பவும் ஒரு முறை பார்த்துக்கொண்டு கிரே திரும்பி, கூர்மையாக உயர்ந்து விட்ட மாலுமியின் புருவங்களைப் பார்த்தான். தருவிக்கப்பட்ட தனது திமிங்கிலத்தின் இரைப் பையை உற்றுப்பார்த்த போது ஜோனா கட்டாயம் வியப்போடு நினைத்துப் பார்த்தது போன்ற காப்டனது நடவடிக்கைகளை வா யைத் திறந்த வண்ணம் லேதிகா பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆ, இது நீயா, லேதிகா! அவளைப் பார். அவள் அழகாக இல்லை?''

''ஒரு விந்தையான ஓவியம்!'' மாலுமி முணுமுணுத்தபடி உரக்கக் கத்தினான், ஏனெ னில் புத்தகத்தை நினைவூட்டுகிற வெளிப்பாடு களை அவன் விரும்பினான். ''சூழ்நிலைகளை வெளிப்படுத்துவதில் கவர்ச்சியூட்டக் கூடிய ஏதோ ஒன்று இருக்கிறது. நான் நான்கு மோரேய்கள் பிடித்தேன், மற்றொன்று சவ்வுப் பை போல வட்டமானது.''

''ஸ்ஸ், லேதிகா. நாம் இங்கிருந்து போக வேண்டும்.''

அவர்கள் புதர்களுக்கு உள்ளாகச் சென்றார்

கள். அவர்கள் இப்பொழுது படகிற்குத் திரும்பச் சென்றிருக்க வேண்டும், ஆனால் கிரே காலந்தாழ்த்தினான், தொலைவிலுள்ள தாழ்வான கரையை உற்றுப்பார்த்தபடி இருந்தான், அங்கே கபேர்னாவின் புகைப் போக்கிகளினின்று வரும் காலை நேரப் புகையானது, பசுமையான நிலத்திற்கு மேலும், மணலுக்கு மேலும் மிதந்து சென்றது. அந்தப் புகையிலே அவன் மீண்டும் ஒரு முறை அந்தப் பெண்ணைப் கண்டான்.

பிறகு அவன் உறுதிகொண்டவனாய்த் திரும்பிச் சரிவை நோக்கிச் சென்றான்; என்ன நடந்தது என்பது பற்றி மாலுமி அவனை வினவவில்லை, ஆனால் பின்னுக்கு நடந்து சென்றான்; மீண்டும் ஒரு முறை கட்டாய அமைதி நிலவியதை அவன் உணர்ந்தான். பிறகு அவர்கள் முதலாவது வீடுகளை அடைந்த போது கிரே திடீரென்று கேட்டான்:

''அநுபவப்பட்ட உன்னுடைய கண்ணால் அருந்தகம் எங்கேயிருக்கிறது என்பதைக் கூற முடியுமா, லேதிகா?''

''அது கட்டாயம் அந்தக் கருப்புக் கூரையாக இருக்க வேண்டும். ஆனால் பிறகு, இல்லாமலும் இருக்கலாம்,'' என்றான் லேதிகா.

''இக்கூரையைப் பற்றி அப்படி என்ன விஷேடம்?''

''எனக்கு உண்மையாகவே தெரியாது, காப்டன். எனது இதயத்தின் குரலைத்

தவிர வேறு ஏதுமில்லை.''

அவர்கள் அந்த வீட்டை நெருங்கினார்கள்; அது உண்மையில் மென்னர்ஸின் அருந்தகம் தான். திறந்த பலகணி வழியாக அவர்களால் மேசையின் மீது ஒரு போத்தலைப் பார்க்க முடிந்தது; அத்துடன் யாரோ ஒருவனுடைய அழுக்குக் கரமானது எஃகுப் போன்ற நரைத்த மீசையை உருவிக் கொண்டிருந்தது.

அது காலையின் முன்நேரமாக இருந்த போதிலுங் கூட, அருந்தகத்தின் பொது அறையில் மூன்று பேர் இருந்தார்கள். நிலக்கரி விற்பவன், ஏற்கெனவே குறிப்பிடப் பட்ட குடிபோதையிலிருந்த நரைத்த மீசைக்குச் சொந்தக்காரன், பலகணிக்கு அருகே உட் கார்ந்து கொண்டிருந்தான்; இரண்டு மீனவர் கள், மது வழங்குமிடத்திற்கும் உள் கதவுக்கும் இடையில் கிடந்த ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்து கொண்டு பொறித்த முட்டை களையும் பீரையும் சாப்பிட்டுக் கொண்டிருந் தார்கள். மென்னர்ஸ், உயரமான இளைஞன், சோர்வான, புள்ளிகளை உடைய முகத்தோடு, வியாபாரிகளுக்கே பொதுவான குறிப்பிடத் தக்க அம்சமாகிய துணிவுமிக்க, தந்திரமிக்கத் தோற்றத்தைக் கண்களில் காட்டியவாறு, கவுண்டருக்குப் பின்னால் தட்டுகளைத் துடைத் துக் கொண்டிருந்தான். சூரிய ஒளி சன்னல் சட்டத்தை அழுக்கடைந்த தரையில் படியச் செய்தது.

புகைபடர்வது போல சூரிய ஒளிப் பட்டைக்குள்ளாக கிரே காலடி எடுத்து

வைத்தவுடனே, மென்னர்ஸ் உடனடியாக மரியாதையோடு தலை வணங்கியபடி, அவனது மறைவிடத்திலிருந்தும் வெளியே வந்தான். கிரேயிடம் ஓர் **உண்மையான** காப்டனின் தன்மை காணப்படுவதை அவன் உடனடியாக அறிந்து கொண்டான் — அங்கே அபூர்வமாகக் காணக் கூடிய ஒரு வாடிக்கையாளர். கிரே ரம் கொண்டு வரும்படி சொன்னான். அன்றாட வாழ்க்கைச் சந்தடியில் மஞ்சள் நிறமாகிப் போன ஒரு துணியால் மேசையை மூடி மென்னர்ஸ் ஒரு போத்தல் கொண்டு வந்தான், ஆனால் ஒட்டிக் கொள்ளாமல் போயிருந்த முகப்புவரிச் சீட்டின் மூலையை முதலில் நாவினால் துழாவினான். பிறகு கவுண்டரின் பின்புறமாகச் சென்று நின்று கொண்டு, உன்னிப்பாக கிரேயையும் காய்ந்து போன உணவுப் பகுதியைத் தனது நகத்தால் சீவி எடுத்துக் கொண்ட தட்டையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்ணாடிக் குவளையைத் தனது கைகளுக் கிடையே லேதிகா உயர்த்திக் கொண்டு, அத னிடம் மென்மையாகக் கிசுகிசுத்தவாறு சன்ன லுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்த போது, கிரே ஹின் மென்னர்ஸை வரும்படி அழைத்தான். ஹின் பெருமையாக நாற்காலி விளிம்பில் அமர்ந்திருந்தான், தான் அழைக்கப் பட்டதற்காக மனநிறைவு கொண்டு, குறிப்பாக வெறுமனே கிரேயின் கைவிரல் அசைவால் மட் டுமே அவ்வாறு செய்யப்பட்டதற்காக மன நிறைவு கொண்டான்.

‘‘உள்ளூரில் குடியிருக்கக் கூடிய எல்லாரையும் உங்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன்,’’ அமைதியான குரலில் கிரே பேசினான். ‘‘ஒரு தலைக்குட்டையோடும், இளஞ்சிவப்பு நிறப் பூக்கள் கொண்ட உடையும், இருண்ட நிறமான தலைமுடியும், சராசரி உயரமும், பதினேழிலிருந்து இருபது வயதிற்குள் இருக்கக் கூடிய பெண்ணின் பெயரை அறிந்து கொள்ள விரும்புகிறேன். நான் அவளைச் சந்தித்தது இங்கிருந்து அதிகத் தொலைவில் அன்று. அவள் பெயர் என்ன?’’

வலிமையின் உறுதியான எளிமையோடு பேசினான். அதனால் அவனது தொனியைத் தவிர்க்க இயலவில்லை. ஹின் மென்னர்ஸ் உள்ளுக்குள்ளாகப் புழுங்கினான், இலேசாக ஏளன நகைப்பும் செய்தான், ஆனால் வெளித்தோற்றத்தில் பேசப்பட்ட இயல்புக்குக் கீழ்ப்படிந்தான். ஆயினும் பதில் பேசுவதற்கு முன்னர் அவன் தயங்கினான் — அது என்னவாக இருக்கும் என்ற பயனற்ற ஊகத்தில் தான் அவ்வாறு செய்தான்.

‘‘ஹிம்!’’ என்றான், கூரையை நோக்கித் தனது கண்களை உயர்த்தியபடி. ‘‘அது பாய்மரக் கப்பல் ஆஸ்ஸோலாகத்தான் இருக்கும். அவள் ஒரு மந்தபுத்திக்காரி.’’

‘‘உண்மையாகவா?’’ ஒரு மடக்கை அதிகமாகக் குடித்தவாறு அலட்சியமாக கிரே கேட்டான். ‘‘ஏன் அவள் அவ்வாறு இருக்கிறாள்?’’

''நீங்கள் உண்மையிலேயே தெரிந்து கொள்ள விரும்பினால், நான் உங்களுக்குச் சொல்கிறேன்.''

ஏழு ஆண்டுகளுக்கு முன்னால், நாட்டுப் புறப் பாடல்களைச் சேகரிக்கும் ஒரு மனிதன் அவளிடம் கடற்கரையில் பேசியவற்றை ஹின் கிரேயிடம் கூறினான். இயற்கையாகவே, இந்தக் கதை, அருந்தகத்தில் பிச்சைக்காரன் முதலாவதாக உறுதிப்படுத்தியதிலிருந்து இத்தனை ஆண்டுகளிலும், முரட்டுத்தனமானதாகவும், அருவருப்பான வதந்தியாகவும் மாறி இருந்தது, ஆனால் அதனது சாரம் மாறாமல் அப்படியே இருந்தது.

''அப்போதிலிருந்து அவள் இப்படித்தான் அழைக்கப்படுகிறாள். அவள் பாய்மரக் கப்பல் ஆஸ்ஸோல் என்றுதான் வழங்கப்படுகிறாள்,'' என்றான் மென்னர்ஸ்.

கிரே எதுவும் எண்ணாது லேதிகாவை நோக்கினான் — அவனோ இன்னமும் அமைதியாகவும், பெருந்தன்மையோடும் நடந்து கொண்டிருந்தான். பிறகு அருந்தகத்துக்கு வெளியே உள்ள புழுதி படிந்த சாலையை நோக்கி அவன் கண்கள் திரும்பின, இரட்டை அடி பெற்றது போல — இதயத்திலும் தலையிலும், அவன் உணர்ந்தான். **மருத்துவ** நோக்கில் மென்னர்ஸ் சற்று முன்னர் குறிப்பிட்ட அதே பாய்மரக் கப்பல் ஆஸ்ஸோல், சாலையில் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். மறக்க முடியாததும் கிளர்ச்சியூட்டுவதுமான சாதாரண வார்த்தைகளின் புதிரை ஒத்

திருந்த அவளது எடுப்பான தோற்றம், இப்போது அவளது கருத்தூன்றிய பார்வையிலே அவனுக்குத் தென்பட்டது. மாலுமியும் மென் னர்ஸும் சன்னல் பக்கமாக முதுகுகளைக் காட்டியவாறு இருந்தார்கள், எதிர்பாராத முறையில் அவர்களால் திரும்ப முடியாதபடி இருந்தது, தனது கூரித்தபார்வையை ஹின்னி னுடைய செம்மஞ்சள் நிறக் கண்களை நோக்கித் திருப்புவதற்குரிய துணிவைக் கிரே பெற்றான். ஆஸ்ஸோலினுடைய கண்களைப் பார்த்து விட்ட பிறகு, மென்னர்ஸ் கதையின் எல்லாவிதத் தப்பெண்ணங்களும் மறைந்து போயின. இதற்கிடையில், சந்தேகப்படாத வகையில் ஹின் தொடர்ந்தான்:

''அவளுடைய தந்தை ஓர் உண்மையான வேசி மகன் என்று கூட என்னால் மேலும் கூற முடியும். பூனை அல்லது வேறு எதையோ போல எனது தந்தையை அவன் மூழ்கடித்து விட்டான் கடவுள் என்னை மன்னிப்பாராக. அவன்...''

அவனுக்குப் பின்னால் எதிர்பாராது வந்த பயங்கரமான ஊளையால் அவன் இடைமறிக்கப்பட்டான். தீப்பொறி பறக்கும் கண்களைச் சுழற்றிக்கொண்டு, குடிவெறி நிலை யை விடுவித்துக் கொண்டு நிலக்கரி விற்பவன் ஒரு பாடலை ஊளையிட்டவாறு திடீரென்று பாடத்தொடங்கினான், அத்தகைய வலிமையு டன் ஒவ்வொருவரையும் குதிக்கச் செய்தது.

கூடை முடைபவனே, கூடை முடைபவனே,
உந்தன் கூடைகளுக்கே எங்கள் தோலுரிப்பாய்!

''நீ திரும்பவும் குடித்து விட்டு உறுமு கிறாய், சும்மாகிட, திமிங்கில வேட்டைப் படகே! வெளியே போ!'' என்று மென்னர்ஸ் உரக்கக் கத்தினான்.

ஆனால் நீ கீழே விழாது பார்த்துக்கொள்
எங்களது சிறுமிடாவிலே விழாமலே! —

நிலக்கரி விற்பவன் ஊளையிட்டான், பிறகு ஒன்றுமே நடக்காதது போல, சாய்ந்த கண்ணாடிக் குவளைக்குள்ளே தனது அடர்ந்த மீசையை நுழைத்தான்.

ஹின் மென்னர்ஸ் அருவருப்பாகத் தோளைக் குலுக்கினான்.

''இந்தப் பூமியிலே இவன் ஒரு கசடு. ஒவ்வொரு நேரமும் இது நடக்கிறது!'' கருமியினுடைய உக்கிரமான கௌரவத்தோடு அவன் பேசினான்.

''என்னிடம் கூறுவதற்கு வேறு ஏதேனும் உங்களுக்கு இருக்கிறதா?'' கிரே வினவினான்.

''நானா? சற்று முன்னர் தானே அவளுடைய தந்தை ஒரு வேசி மகன் என்றேன். அவனால் தான், ஐயா, நான் அநாதையாகிப் போனேன். சிறு பையனாக இருந்த போதே எனது நெற்றி வியர்வையைச் சிந்தி எனது ரொட்டியைச் சம்பாதிக்க வேண்டியவனாக இருந்தேன்...''

''நீ பொய் சொல்லிக் கொண்டிருக்கிறாய்!'' என்று நிலக்கரி விற்பவன் எதிர்பாரா நிலையில் கூறினான். ''நீ மிகவும் அவதூறாக

8–1040

வும், இயற்கைக்கு மாறாகவும் பொய் பேசிக் கொண்டிருக்கிறாய், அது என்னைக் கூட எழுச்சி தணிவுறச் செய்தது.''

ஹின் வாயைத் திறப்பதற்கு வாய்ப்பைப் பெறும் முன்பே, கிரேயைப் பார்த்து நிலக்கரி விற்பவன் பேசினான்:

''அவன் பொய் பேசுகிறான். அவனது அப்பாவும் ஒரு பொய் சொல்லி, அவனது தாயாரும் அப்படித்தான். அது குடும்பம் முழுக்க இருந்தது. **அவள்** உங்களைப் போலவும் என்னைப் போலவும் நல்லறிவு பெற்றவள் என்று நிச்சயமாக நம்பலாம். நான் அவளிடம் பேசியிருக்கிறேன். அவள் என்னுடைய வண்டியில் எண்பத்தி நான்கு முறை அல்லது சற்றுக் குறைவாகப் பயணம் செய்திருக்கிறாள். நான் என்னுடைய நிலக்கரி முழுவதையும் விற்றுவிட்டு வரும் போது, நகரத்திலிருந்து ஒரு பெண் வீட்டிற்கு நடந்து வந்து கொண்டிருந்தால், நான் அவளை எப்போதுமே என் வண்டியில் ஏற்றிக் கொள்வதுண்டு. அவளும் உட்கார்ந்து கொள்ளட்டும். அவள் புத்தி நிதானத்தோடு இருந்தாள் என்று நான் கூறுகிறேன். இப்போது அதைப் பார்க்கலாம். இயல்பாகவே, ஹின் மென்னர்ஸ், அவள் உன்னிடம் பேச மாட்டாள். ஆனால் என்னிடம், ஐயா, என்னுடைய சுதந்திரமான நிலக்கரி வர்த்தகத்தில், வம்பர்களையும் வதந்திகளையும் இழிவாகக் கருதினேன். வளர்ந்த பெண்ணைப் போல அவள் பேசுகிறாள், ஆனால் அவள் பேசுகின்ற முறை

யானது விநோதமாக இருக்கிறது. நீங்கள் நெருக்கமாகக் கேட்டால் — நீங்களும் நானும் பேசிக் கொள்வது போலவே இருக்கும், ஆனால் இன்னும், அது இல்லை. எடுத்துக் காட்டாக, அவளது வியாபாரத்தைப் பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருப்போம். 'நான் உங்களுக்குக் கொஞ்சம் சொல்கிறேன்.' ஒரு மணிக் கூண்டிலே ஒரு ஈ அமர்ந்தது போல எனது தோளைப் பற்றிக் கொண்டு, அவள் சொல்வாள். 'என்னுடைய வேலை சோம் பேறித்தனமானது அல்ல, நான் ஏதேனும் சிறப்பாகச் சிந்திக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து விரும்பிக் கொண்டிருக்கிறேன். தானாகவே மிதந்து செல்லக் கூடிய ஒரு படகைத் தயாரிப்பதற்காக வழியைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதில் உண்மையாகவே துடுப்புப்போடும் ஆட்கள் இருப்பார்கள்; பிறகு, கடற்கரையில் அதை நிறுத்தி வைப்பார்கள், கட்டி வைத்து விட்டு, தின்பதற்காகக் கடற்கரையில், உயிரோடு இருப்பவர்கள் செய்வது போலவே சரியாக அமர்வார்கள்.' நான் சிரிக்கத் தொடங்கி னேன், ஏனென்றால் அது வேடிக்கையாக இருக்கிறது என்று நினைத்தேன். ஆகவே நான் சொன்னேன், 'நல்லது, ஆஸ்ஸோல், இதற் கெல்லாம் காரணம் நீ வேலை செய்யும் முறைதான், அதனால் தான் நீ இது போலச் சிந்திக்கிறாய், ஆனால் சுற்றிலும் பார்; மற்ற பிற மக்கள் வேலைசெய்யும்போது, அவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்

என்று நீ நினைப்பாய்.' — 'இல்லை. எனக்கு என்ன தெரியும் என்று எனக்குத் தெரியும். ஒரு மீனவன் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது, தான் ஒரு பெரிய மீனைப் பிடிக்கப் போவதாக, எவரும் இதுவரை பிடித்திராத அளவுக்குப் பெரியதாக, நினைத்துக் கொண் டிருப்பான்!' — 'என்னைப் பற்றி என்ன?' — 'நீங்கள்?' அவள் சிரித்தாள். 'உங்களுடைய கூடையை நிலக்கரியால் நிரப்புகின்ற போது அது மலர்க் கொத்துகளாக வெடிக்கும் என்று நீங்கள் நினைப்பீர்கள் என்று நான் பந்தயங் கட்டுகிறேன்.' இந்த வார்த்தைகளைத்தான் அவள் பயன்படுத்தினாள்! அந்தக் கணமே, நான் ஒத்துக்கொள்கிறேன், எது என்னை அவ்வாறு செய்ய வைத்தது என்று எனக்குத் தெரியது, நான் காலிக் கூடையை உற்றுப் பார்த்தேன். கூடையின் சுள்ளிகளினின்றும் மொட்டுகள் வந்து கொண்டிருப்பதைப் பார்ப் பது போல நான் உண்மையாகவே நினைத் தேன்; மொட்டுகள் வெடித்து இலைகள் கூடை முழுக்கப் பரவி மறைந்து போய்விட் டன. ஒரு துளியளவு கண்ணீர் விடவும் செய்தேன்! ஆனால் ஹின் மென்னர்ஸ் தன் வாய் நிறையப் பொய் பேசுகிறான் — அவன் எனக்குத் தெரியும்.''

உரையாடலானது தெளிவாகவே கேவலமான திருப்பத்தை அடைந்ததைக் கண்ட போது, மென்னர்ஸ் நிலக்கரி விற்பவனைப் புண் படுத்துவது போலப் பார்த்து விட்டு, கவுண் டருக்குப் பின்னால் மறைந்து கொண்டான்,

அங்கிருந்தபடியே கசப்பாகக் கேட்டான்: ''வேறு ஏதேனும் வேண்டுமென்று கட்டளை யிடப் போகிறீர்களா?''

தன்னுடைய பணப்பையை வெளியே இழுத்தபடி கிரே பேசினான்: ''இல்லை. நாங்கள் எழுந்து புறப்படுகிறோம். லேதிகா, நீ இங்கேயே தங்கியிரு. இன்று மாலை திரும்பி வா, ஒரு வார்த்தை கூடப் பேசாதே. உன் னால் முடிந்த அளவுக்கு எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டு, எனக்கு அறிவி. புரிந் ததா?''

''எனதருமைக் காப்டன் அவர்களே, இதைச் செவிட்டூமை தான் புரிந்து கொள் ளாமல் இருக்க முடியும்,'' ரம் பருகியதால் ஏற்பட்ட விநயமின்மையில் லேதிகா பேசினான்.

''அருமை. நீ எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசும் போது என்னைப் பற்றி எதுவும் பேசக் கூடாது என்பதையும் அல்லது எனது பெயரைக் கூடச் சொல்லக் கூடாது என்பதையும் மறந்து விடாதே. போய் வருகிறேன்!''

கிரே புறப்பட்டான். அப்போதிலிருந்து வியப்புக்குரியதைக் கண்டுபிடித்து விட்டோம் என்ற உணர்வு வாய்க்கப் பெற்றது, பெர்த் தோல்டினுடைய வெடி மருந்து உரலில் தீப் பொறி போல—ஆன்மீகப் பாறைச் சரிவுகளிலி ருந்து வெளியேறி எரியும் நெருப்புப் போ லிருந்தது. உடனே செயலாற்ற வேண்டும் என்ற விருப்பத்தாலும் அவன் ஆட்கொள்ளப் பட்டான். துடுப்புப் போடும் படகிற்கு அவன்

வந்த போது மட்டுமே, அவனுக்கு தன்னுணர்வு திரும்பியது, அவனால் தெளிவாகச் சிந்திக்க முடிந்தது. சிரித்துக் கொண்டே, அவன் தனது கையை நீட்டினான், உள்ளங்கையை எரிக்கின்ற சூரியனை நோக்கிக் காட்டினான், மது இருந்த நிலவறையில் சிறு பையனாக அவன் இருந்த போது செய்ததைப் போல இருந்தது; பிறகு அவன் துடுப்புப் போடத் தொடங்கினான், துறைமுகத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தான்.

4

முந்திய நாளில்

முந்திய நாளில், நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிப்பவரான எகல், கடற்கரையில் செந் நிறக் கடற்பாய்களுடன் கூடிய கப்பல் பற்றிய தேவதைக் கதையைச் சிறுமியிடம் கூறிய ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, பொம்மைக் கடைக்கு வாராந்திர வருகைக்குப் பிறகு திரும்பிய ஆஸ் ஸோல் கவலையுற்றவளாகவும், துன்பம் நிறைந்தவளாகவும் காணப்பட்டாள். விற் பனைக்காக எடுத்துச் சென்றிருந்த பொம்மை களை அவள் திரும்ப எடுத்து வந்திருந்தாள். மிகவும் அதிகமாகவே நிலைகுலைந்திருந்த தனால் முதலில் அவளால் பேசக் கூட முடியவில்லை. ஆனால் லங்கிரேனின் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்த பிறகு, உண் மையில் என்ன நடைபெற்றது என்பதை விட இன்னும் மோசமான செய்தியை அவன் எதிர்பார்த்தான் என்பதை அறிந்த பிறகு, பலகணி அருகே நின்ற அவள், பலகணிப் பலகை மீது தனது விரலை ஓடவிட்டு கட லைப் பராக்காகப் பார்த்த போது, பேசத் தொடங்கினாள்.

இந்த முறை பொம்மைக் கடை உரிமை யாளர் தனது கணக்கேட்டைப் புரட்டி அவருக்கு இவர்கள் எவ்வளவு கடன்பட்டிருக் கிறார்கள் என்பதைக் காட்டிப் பேசத் தொ டங்கிவிட்டார். மூன்று இலக்க எண்ணைப் பார்த்த போது அவள் மயக்கமுற்றாள்.

''டிசம்பரிலிருந்து நீங்கள் எவ்வளவு பெற் றிருக்கிறீர்கள் என்பது இப்படித்தான். இப்போது எவ்வளவு விற்பனையாகி இருக் கிறது என்பதை நாம் பார்க்கலாம்,'' என் றார் கடைக்காரர். மற்றொரு இலக்கத்தின் மீது தனது விரலை வைத்துக் காட்டினார், ஆனால் இதுவோ இரண்டு இலக்க எண்ணாக இருந்தது.

''இது பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக வும், வெட்கமாகவும் இருக்கிறது. அவர் கடுகடுப்பாகவும், கோபமாகவும் இருந்ததை அவரது முகத்தில் என்னால் காண முடிந்தது. ஓடிப் போயிருந்தால் நான் மகிழ்ச்சியடைந் திருப்பேன், ஆனால், இயல்பாக, நான் அவ்வளவு வெட்கப்பட்டதால் எனக்கு அவ் வாறு செய்ய வலிமையில்லை. அவர் தொ டர்ந்து பேசினார்: 'என் அருமைப் பெண் ணே, இதற்கு மேல் இதில் எனக்கு எந்த இலாபமும் இல்லை. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கே இப்போது தேவை அதிக மிருக்கிறது. எல்லாக் கடைகளுமே அவற் றால் நிறைந்து கிடக்கின்றன. இவை போன்ற பொருளை யாரும் வாங்குவதில்லை.' அவர் சொன்னதெல்லாம் இதுதான். அவர் தொ

டர்ந்து பேசினார். ஆனால் அவர் சொன்ன வற்றை நான் குழம்பிப் போய் மறந்து விட்டேன். அநேகமாக அவர் எனக்காக வருத்தப்பட்டார், ஏனெனில் ‘குழந்தைகளுக் கான கடை’ மற்றும் ‘அலாவுதீன் விளக்கு’ ஆகியவற்றில் பார்க்குமாறு எனக்கு ஆலோச னை கூறினார்.''

மிகவும் முக்கியமானவற்றைக் கூறி தனது தலையைத் திருப்பிய சிறுமி கிழ்வனை மருட்சி யோடு பார்த்தாள். லங்கிரேன் புறங்கவிந்து வளைந்து அமர்ந்தான். அவனது முழங்கைகள் பதிந்திருந்த முழங்கால்களுக்கிடையே விரல்கள் பின்னிக் கிடந்தன. அவளது கண்கள் தன் மீது பதிந்திருப்பதை உணர்ந்தவனாய், தலை யை உயர்த்தி அவன் பெருமூச்சு விட்டான். தனது சோகத்தை விடுத்தவளாக அவனிடம் அவள் ஓடினாள், அவனருகே அமர்ந்தாள், அவனது தோலாலான ஜாக்கெட்டின் கைக்குள் ளாகச் சிறிய கையை நுழைத்தாள், கீழிருந்த படியே தந்தையின் முகத்தைச் சிரித்தவாறு பார்த்துக் கொண்டிருந்தாள், பாசாங்கு செய்த மகிழ்ச்சியோடு தொடர்ந்து சொன் னாள்:

''பரவாயில்லை, இது முக்கியமல்ல, இப் போது கேளுங்கள். எப்படியோ நான் புறப் பட்டு விட்டேன். நல்லது, மிகப் பெரிய, அச்சத்தைத் தரும் கடைக்கு வந்தேன்; அங் கே கூட்டம் பயங்கரமாக இருந்தது. கூட்டம் என்னை நெருக்கித் தள்ளியது. ஆனால் நான் எனது பாதையைப் பார்த்துக் கொண்டு,

கண்ணாடி அணிந்த கருப்புத் தலைமுடி கொண்ட மனிதனைத் தாண்டிச் சென்றேன். அவனிடம் நான் என்ன சொன்னேன் என்பதில் ஒரு வார்த்தை கூட நினைவில்லை; இறுதியாக, அவன் இளித்து, எனது கூடையைக் கிளறிப் பார்த்தான். பொம்மைகளில் சிலவற்றை உற்று நோக்கினான், பிறகு ஒரு தலைக்குட்டையில் அவற்றைத் திரும்பச் சுற்றி மீண்டும் தந்து விட்டான்.''

லங்கிரேன் அவள் கூறுவதைச் சினத்தோடு கேட்டான். ஆடம்பரமாக உடையணிந்த கூட்டத்தில், உயர்ரகப் பொருள்கள் குவிந்து உள்ள முகப்பில் மிகவும் அதிர்ச்சியுற்றதாகத் தன் மகள் காணப்படுவது போல அவனுக்குத் தோன்றியது. கண்ணாடியணிந்த துப்புரவான மனிதன், லங்கிரேனின் சாதாரணமான விளையாட்டுப் பொருள்களை விற்பனைக்கு எடுத்துக்கொள்வதாக முடிவு செய்தால், அவன் ஓட்டாண்டியாகி விடக் கூடும் என ஆதரவு நல்குகின்ற பாணியில் விளக்கிக் கொண்டிருந்தான். அவளுக்கு முன்னால் உள்ள வணிக முகப்பில் அவன் சாதாரணமான முறையில் மிகச் சிறப்பான மடக்கு வீடுகள், இரயில் பாலங்கள், மிகச் சிறிய, சரியாகச் செய்யப்பட்ட வாகனங்கள், மின் அமைப்புகள், விமானங்கள் மற்றும் மோட்டார்கள் ஆகியவற்றை அமைத்திருந்தான். இவை எல்லாவற்றிலுமே வர்ணத்தின் வாசனையடித்தது. அவனது கூற்றுப்படி, இப்பொழுதெல்லாம் குழந்தைகள் தங்களின் மூத்

தோரது தொழில்களைப் பிரதிபலிப்பது போன்ற விளையாட்டுகளை மட்டுமே ஆடு கிறார்கள்.

பிறகு ஆஸ்ஸோல் 'அலாவுதீன் விளக்கிற் கும்' மற்றும் இரு கடைகளுக்கும் சென் றாள், ஆனால் எல்லாமே வீணாகி விட்டன.

தனது கதையைச் சொல்லி முடித்த போது, அவர்களது இரவு உணவை அவள் முன் னே வைத்தாள்; சாப்பிட்டு முடித்து, ஒரு குவளை கடுங் காஃபியைப் பருகிவிட்டு, லங்கி ரேன் சொன்னான்:

''நாம் அதிர்ஷ்டமற்றவர்களாகிப் போய் விட்டோம். வேறு ஏதேனும் பார்ப்பதைத் தொடங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒருவேளை நான் திரும்பவும் ஒரு கப்பலில் — **ஃபிட்ஸ்ராய்** அல்லது **பாலெர்மோவில்** — வேலை செய்யச் செல்லாம். உண்மைதான், அவர்கள் சரிதான்,'' அவன் சிந்தனை வயப்பட்டபடி தனது பொம்மைகளைப் பற்றி நினைத்தான். ''இப்பொழுதெல்லாம் குழந்தைகள் விளையாடு கிறார்களில்லை, அவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் படித்துக் கொண்டே இருக்கிறார்கள், ஒருபோதும் வாழ்க்கையைத் தொடங்கமாட் டார்கள். இது இப்படித்தான், ஆனால் இது வெட்கக்கேடானது, அது உண்மையிலேயே வெட்கக்கேடானது. ஒரு கடற் பயணத்தை நானில்லாமல் உன்னால் சமாளித்துக் கொள்ள முடியுமா? உன்னைத் தனிமையில் விட்டுப் போவதைப் பற்றி என்னால் கற்பனை செய் யவே முடியவில்லை.''

''நானும் உங்களுடனே வேலை செய்ய முடியும், உதாரணமாக, ஒரு மதுக்கடைப் பணிப் பெண்ணாக.''

''இல்லை!'' இந்த வார்த்தையைத் தனது உள்ளங்கையால் மேசை மீது தட்டி ஒலியெழுப்பி லங்கிரேன் கேட்காது செய் தான். ''நான் உயிரோடு இருக்கின்ற வரை நீ வேலை செய்யக் கூடாது. ஆயினும், வேறு ஏதேனும் பற்றிச் சிந்திக்க அவகாசம் இருக்கிறது.''

துயரார்ந்த மௌனத்தில் அவன் ஆழ்ந் தான். அவனுக்கு அருகே ஒரு முக்காலியின் விளிம்பில் ஆஸ்ஸோல் அமர்ந்தாள்; ஓரக்கண் ணால், அவனது தலையைத் திருப்பாமலேயே, அவனைச் சமாதானப்படுத்த அவள் முயற்சி செய்வதை அவனால் காண முடிந்ததால், ஏறத்தாழ முறுவலித்தான். இல்லை, அவன் முறுவலிப்பானேயாகில், அது அவளைப் பய முறுத்தித் திக்குமுக்காட வைத்துவிடும். தனக்குத்தானே முணுமுணுத்தபடி, நடுங்கிய அவனது நரை முடியைத் தடவி விட்டு, மீசையை முத்தமிட்டு, தந்தையினுடைய மயிர் சிலிர்த்த காதுகளைத் தனது சிறிய, நுனி சிறுத்த விரல்களால் மூடிய போது சொன்னாள்.

''இதோ, நான் உன்னை விரும்புகிறேன் என்று சொல்வதை உன்னால் இப்போது கேட்க முடியாது.''

புகையை உறிஞ்சுவதற்குப் பயப்படும் மனி தனைப் போல, அவள் இவனை அழகு படுத்

திக் கொண்டிருக்கையில் லங்கிரேன் அப்படி யே அமர்ந்திருந்தான், ஆனால் அவள் என்ன சொன்னாள் என்பதைக் கேட்டு உச்சத்தொனி யில் சிரித்தான்.

"நீ அன்பே," என்று வெறுமனே அவன் சொன்னான், அவளது கன்னத்தில் தட்டிக் கொடுத்த பிறகு, துடுப்புப் போடும் படகைக் காண்பதற்காகக் கடற்கரைக்குச் சென்றான்.

சற்று நேரத்திற்கு ஆஸ்ஸோல், சாந்தமான துக்கத்தைத் தானே விடுவித்துக் கொள்வது, அல்லது வீட்டு வேலைகளைச் செய்வது என்ற இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவளாக அறையின் மத்தியில் நின்றாள்; பிறகு, பாத்திரங்களைக் கழுவிவிட்டு, அவர்களுடைய பலசரக்குச் சாமான்களில் எஞ்சியவற்றின் இருப்பைப் பார்த்தாள். அவள் நிறுக்கவுமில்லை, அளக்க வுமில்லை, ஆனால் வாரத்தைக் கடத்து வதற்குப் போதுமான மாவு அவர்களிடம் இல்லை என்பதையும் சர்க்கரை வைக்கும் தகரக் கலத்தின் அடிப்பகுதியை இப்போது காண முடிந்தது என்பதையும், காஃபி கொட்டையும் தேயிலைப் பொட்டலங்களும் ஏறத்தாழ காலியாகி விட்டன என்பதையும், வெண்ணையே இல்லை என்பதையும் பார்த் தாள். சாக்கு நிறைய உருளைக் கிழங்கு மட்டுமே அவளது கண்களுக்கு ஆறுதல் தந்தது, ஆயினும் அதே சமயத்தில் ஓரள வுக்கு அது துயரம் தந்தது, ஏனெனில் அது ஒரே விதிவிலக்கானதாக இருந்தது. பிறகு

அவள் தரையைப் பெருக்கினாள், ஏதோ பழைய துணியைக் கொண்டு மாற்றித் தைக் கப்பட்ட குட்டைப்பாவாடையின் ஓரக் குஞ்சத்தைத் தைப்பதற்காக அமர்ந்தாள், ஆனால் சுருக்கி மடக்கி வைக்கப்பட்ட பொருள் களின் துணுக்குகள் கண்ணாடிக்குப் பின்புறம் கிடந்தன என்பதைத் திடீரென்று நினைவு கூர்ந்தவளாக, அதனருகே சென்று ஒரு சிறிய கட்டினை எடுத்தாள், பிறகு தனது பிம்பத்தை நோக்கலானாள்.

வால்நட் மரச்சட்டத்திற்குப் பின் பிரதிபலித்த அறையின் தெளிவான வெறுமையில் ஒரு சிறிய, மெலிந்த பெண், விலை மலிவான, வெண்ணிற, இளஞ்சிவப்புப் பூப் போட்ட மஸ்லின் துணி அணிந்திருந்தாள். அவளது தோள்களைச் சாம்பல் நிறப் பட்டுத் தலைக் குட்டை மூடியிருந்தது. இன்னமும் குழந் தைத்தனம் கொண்ட இலேசாக வெயில்பட்ட முகம் உயிரோட்டமாகவும், உணர்ச்சியாகவும் இருந்தது. அவளது வயதை மீறிய கண்டிப்பு மிக்க அழகிய கண்கள், உணர்ச்சி பூர்வமான ஆத்மாக்களுக்குரிய மருண்ட தோற்றத்தோடு காட்சியளித்தன. அவளுடைய ஒழுங்கற்ற முகம் அதனது கூறுகளின் நட்புத் தூய்மை யால் கவர்ந்திழுப்பதாக இருந்தது; ஒவ்வொரு வளைவையும், ஒவ்வொரு மேட்டினையும் பல வேறு பெண் முகங்களிலும் காண முடியும். ஆனால் எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துப் பார்க்கும் போது, செயற் பாணியானது முற்றிலும் தனித் தன்மை வாய்ந்ததாக

இருந்தது — தனித் தன்மையான இனிமை; நாம் இங்கே நிறுத்திக் கொள்வோம். எஞ்சிய வற்றை வார்த்தைகளில் விவரிக்க முடியாது, ஒரு வார்த்தையைத் தவிர: 'மாயமந்திரம்.'

பிரதிபலித்த பெண் ஆஸ்ஸோலைப் போலத் திடீர் எழுச்சியோடு முறுவலித்தாள். அந்த முறுவலிப்பானது ஒருவகையில் சோகமாகக் காணப்பட்டது; இதையறிந்து கொண்ட அவள் கவலைக்குள்ளானாள், ஓர் அந்நியளை நோக்கு வது போல. கண்ணாடிக் குவளையில் கன்னத் தை வைத்து அழுத்திக் கண்களை மூடினாள், கண்ணாடியில் தனது பிம்பத்திற்கு மேலாக மெதுவாகத் தட்டினாள். தெளிவற்ற, மென் மையான சிந்தனைத் திரள் அவளுக்குள் பளிச் சிட்டது; அவள் நிமிர்ந்து நின்றாள், சிரித் தாள், தைப்பதற்காக அமர்ந்தாள்.

அவள் தைத்துக் கொண்டிருக்கும் போது, அவளை நாம் இன்னும் நெருக்கமாகக் காணலாம் — அவளுக்குள்ளே காணலாம். அவள் இரண்டு பெண்களால் உருவானவள், மகிழ்ச்சி யான, அதிசயிக்கத்தக்கக் குழப்பத்தில் ஒன்று சேர்ந்தது போல, இரண்டு ஆஸ்ஸோல்கள். ஒருத்தி மாலுமியின், கைவினைஞனின், பொம் மைத் தயாரிப்பாளனின் ஒரு மகள், மற்றவ ளோ ஓர் உயிருள்ள கவிதை — அதற்கேயுரிய இணக்கமும் கற்பனையும், சொற்களின் ஒழுங்கு வரிசையின் புதிரும் வெளிச்சமும் நிழலும் பின்னிப் பிணைந்த கவிதை. தனது சொந்த அநுபவத்தின் எல்லைக்குள்ளாக அவள் வாழ்க் கையை அறிவாள், ஆனால் பொதுத் தன்மை

களுக்கும் மேலும், மாறுபட்ட பிரதிபலித்த பொருளை அவள் கண்டாள். இங்ஙனமாக, பொருள்களைப் பார்த்துக் கொண்டு, ஒரு நேரான புலனுணர்வால் அவற்றை நாம் உற்றறிவதில்லை, ஆனால் மனப்பதிவு வாயிலாகத் தான் — அது நிச்சயமாக மனித சம்பந்தமானது — மற்றும் எல்லாமே மனித சம்பந்தமானதுதான் — விதவிதமானது. இந்த எடுத்துக் காட்டின் வாயிலாக நாம் சித்திரித்ததற்கு (நாம் வெற்றியடைந்தால்) ஒருவகையில் இது ஒப்புமை கொண்டது: காணக் கூடியதற்கு அப்பால், மேலும் அவள் பார்த்தாள். இத்தகைய ஆரவாரமற்ற வெற்றிகள் இன்றி வெறுமனே புரிந்து கொள்ளக் கூடிய எல்லாமே அவளுக்கு அந்நியமாக இருந்தன. படிப்பதற்கு அவள் ஆசைப்பட்டாள், ஆனால் ஒவ்வொரு நூலிலும், பெரும்பாலும், அவள் வாழ்ந்தது போல, வரிகளுக்கு இடையேதான் வாசித்தாள். இனந் தெரியாத உத்வேகத்தால், கணக்கற்ற கட்புலனாகாத நுட்பமான கண்டுபிடிப்புகளை, ஒவ்வொரு அடியிலும் அவள் ஏற்படுத்தினாள், வெளிச் சொல்ல முடியாதவாறு, ஆனால் தூய்மையையும் வெதுவெதுப்பையும் போல அவ்வளவு முக்கியமானவை. எப்போதாவது — இது சில நாட்களுக்குத் தொடர்ந்தது — அவள் நிலைமாறவும் செய்தாள்; வாழ்க்கையின் உடல் சார்ந்த எதிர்ப்பு மறைந்தது, தந்திகளின் குறுக்காக ஒரு வில் வீச்சில் அமைதி மறைவது போல; அவள் பார்த்தவை, அவளுக்கு முக்கியமானவை

அவளைச் சுற்றிச் சூழ்ந்தவை எல்லாமே அன்றாட தோற்றத்தைக் கொண்ட மர்மங் களின் ஒரு லேஸ் ஆயின. பல நேரங்களில், கருத்தூன்றியபடியும், அச்சங் கொண்டபடியும் அவள் இரவில் கடற்கரைக்குச் செல்வாள், அங்கே, காலை விடியலுக்காகக் காத்துக் கொண்டிருந்து விட்டு, செந்நிறக் கடற்பாய் களுடன் கூடிய கப்பலைத் தேடி, மிகவும் குறிப்போடு அவள் உற்றுப்பார்ப்பாள். அந்த நொடிகள் அவளுக்குத் தூய்மையான மகிழ்ச்சி யைத் தரும்; ஒரு தேவதைக் கதையை நமக்கு நாமே **அப்படியே** தருவது மிகவும் சிர மமானது; அதனுடைய வலிமையினின்றும், கவர்ச்சியினின்றும் தப்பிப்பது அவளுக்குக் குறைவான சிரமமின்றி இருக்கும்.

இன்னும் பிற நேரங்களில், இவை எல்லா வற்றையும் திரும்ப எண்ணிப்பார்த்த போது, தனக்குத்தானே அவள் உண்மையில் வியப்படை வாள்; அவள் நம்பிவிட்டாள் என்பதை நம்புவது கூட சிரமமானதாக இருக்கும், ஒரு புன்முறுவலால் கடலை மன்னித்து, எதார்த் தத்திற்குத் துயரத்தோடு திரும்பி வருவாள்; ஆடையின் ஓரக் குஞ்சத்தை அவள் இப்போது ஒன்றுசேர்த்த போது, தனது பழைய வாழ்க் கையை அவள் நினைவு கூர்ந்தாள். அதில் எழுச்சியற்றும், சாதாரணமாயும் ஏராளம் இருந்திருக்கின்றன. இரண்டுமே ஏகாந்தத்தில், சில நேரங்களில் அவளை பளுவாக அழுத்தின. ஆனால் அந்நேரங்களில் உள்ளார்ந்த வெட்க மானது அவளுக்குள்ளாக உருவாகியது,

துன்புறுத்தும் சுரிப்பானது ஒருவரை மகிழ்ச்சியைக் கொண்டு வருவதினின்றோ, பெறுவதினின்றோ தடுத்து விடும். மற்றவர்கள் அவளைக் கேலி பேசுவார்கள், — ''அவளுக்குத் தலையில் கொஞ்சம் கிறுக்குத்தனமிருக்கிறது,'' ''அவள் மூளைத்திறம்பி விட்டாள்,'' — இந்த வலி கூட அவளுக்குப் பழகிப் போய்விட்டது. இந்தப் பெண் அவமரியாதைகளாலும் துயருற்றாள், ஓர் அடி பெற்றது போல அதன் பிறகு அவளது நெஞ்சானது வலி எடுக்கும். கபேர்னாவில் அவள் பிரபலமான பெண் அல்ல, மற்றவர்களைக் காட்டிலும் அவளுக்கு திறமை இருக்கிறது என்று பலர் சந்தேகப் பட்டாலும் — ஆனால் ஒரு மாறுபட்ட மொழியில். கபேர்னாவின் ஆண்கள் பருமனான, பெரிய கெண்டைத் தசையுடைய கணுக்கால்களிலும், வலிமைமிக்கக் கரங்களிலும் எண்ணெய் படிந்த தோல் கொண்ட பெண்களை மிக்க அன்பு பாராட்டுவார்கள்; கூட்டம் மிகு சந்தையில் இருப்பது போல அவர்களை நெருக்கித்தள்ளி முதுகில் அடிப்பார்கள். இத்தகைய உணர்ச்சிப் பாணியானது ஒரு கர்ஜனையின் நாகரிகமற்ற எளிமையை ஒத்திருக்கும். அஸ்ஸுந்தா அல்லது அஸ்பசியாவின் அனைத்து வசீகரங்களையும் ஓர் ஆவி கைக் கொண்டிருந்தாலும், அதனுடைய இருத்தலானது படபடப்புமிக்க மக்களுக்குப் பொருந்தக் கூடியது போலவே அறுதி செய்யப்பட்ட இந்தச் சமூகச் சூழலுக்கு ஆஸ்ஸோல் மிகவும் பொருந்தி நிற்பாள்; காதலை ஒத்திருக்கும்

எதுவும் இங்கே நடக்கக் கூடாது. இப்படியாக, ஒரு போர்வீரனுடைய ஊது கொம்பின் உறுதியான எக்காளம் முழங்கும் போது, ஒரு வயலினுடைய இனிமையான துயரம் தனது நேர்நிலையான சமதளப் பரப்பினில் செல்லும் உறுதிவாய்ந்த ரெஜிமென்டை பின்னுக்கு இழுப்பது என்பது சக்தியற்றதே. இந்த வரிகளில் சொல்லப்பட்ட எல்லாவற்றிற்கும் முதுகைக் காட்டியவாறு அந்தப் பெண் நின்றாள்.

ஒரு வாழ்க்கைப் பாடலை அவள் வாய்க்குள்ளாகப் பாடுகின்ற போது, அவளது சிறிய கைகள் விரைவாகவும், முன் திறமையோடும் வேலை செய்து கொண்டிருந்தன; நூலைக் கடித்த அவள் நிமிர்ந்து நோக்கினாள், ஆனால் இது துணி மடிப்பை ஒழுங்காகத் திருப்புவதினின்றோ, தையல் எந்திரத்தைப் போலத் துல்லியமாகத் தைப்பதினின்றோ அவளைத் தடுக்கவில்லை. லங்கிரேன் திரும்பி வராவிட்டாலும், தனது தந்தையைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. அண்மைக் காலங்களில் இரவு நேரத்தில், தனது படகில் மீன் பிடிப்பதற்காகவோ, வெறுமனே கொஞ்சம் காற்று வாங்குவதற்காகவோ அவன் அடிக்கடி செல்வதுண்டு.

அச்சம் அவளைச் சித்திரவதைச் செய்யவில்லை: எந்தத் தீங்கும் அவனுக்கு நேர்ந்துவிடாது என்பதை அவள் அறிவாள். இந்த வகையில் ஆஸ்ஸோல் இன்னமும் சிறுமியாகவே இருந்தாள், தனது சொந்த வழிமுறையில் வழிபாடு செய்து கொண்டாள், விருப்பத்தோடு மழலைச்

சொல் பேசுவாள், — "காலை வணக்கம், இறைவனே!" என்று காலையிலும், "போய் வருக, இறைவனே!" என்று மாலையிலும் கூறுவாள்.

அவளது கருத்துப்படி கடவுளுடன் அத்தகைய சுருக்கமான அறிமுகம், எந்தத் தொல்லையினையும் போக்குவதற்கு அவருக்குப் போதுமானது. அவரது இடத்தில் தானே இருப்பதாகக் கற்பனை செய்தாள்: பல லட்சக் கணக்கான மக்களது பிரச்சினைகளிலே கடவுள் எப்பொழுதுமே ஈடுபட்டிருந்தார், ஆகவே, முழுக்கவும் மக்களால் நிறைந்த வீட்டைக் கண்டுபிடித்து, விரைந்தோடிச் செயலாற்றும் விருந்தளிப்போனுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் போது, முடிந்தளவுக்கு உணவும் உறைவிடமும் கொண்டிருக்கக் கூடிய ஒரு விருந்தளிப்போனுக்குரிய பண்பட்ட பொறுமையுடன் வாழ்வின் சாதாரண நிழல்களை ஒருவன் கவனிக்க வேண்டும் என அவள் நம்பினாள்.

அவளது தையலை முடித்துக் கொண்ட பிறகு, மூலையில் உள்ள மேசையில் ஆஸ்லோல் துணியை மடித்து வைத்து விட்டு, ஆடை களைந்து விட்டு, படுக்கைக்குச் சென்றாள். விளக்கு அணைக்கப்பட்டு விட்டது. அவளுக்குத் தூக்கம் வரவில்லை என்பதை விரைவிலேயே அவள் கண்டு கொண்டாள்; பகற் பொழுதின் மத்தியில் இருந்தது போல அவளது மனம் தெளிவாக இருந்தது. மேலும், இருட்டுக் கூடச் செயற்கையானதாகக் காணப்

பட்டது; உடல், மனத்தைப் போலவே, சுதந்திரமாகவும், களைப்பற்றும் இருப்பதை யும் உணர்ந்தாள். ஒரு பாக்கெட் கடிகாரத் தைப் போல இதயம் அவ்வளவு வேகமாக அடித்தது; அது தலையணைக்கும் காதுக்கும் இடையே அடிப்பது போலத் தோன்றியது. ஆஸ்ஸோல் கவலையுற்றாள்; அவள் துவண் டாள், புரண்டாள், அப்போதோ விரிப்பை விரித்துப் போட்டாள், இப்போதோ அதில் உருண்டாள், தனது தலைக்கு மேலாக இழுத்துக் கொண்டாள். கடைசியாக அறி முகமான காட்சியை அவளால் கொண்டு வர முடிந்தது, அது அவளைத் தூங்கிப் போக உதவி செய்தது: தெளிவான நீரில் கூழாங் கற்களைத் தானே சுழற்றி எறிவது போலவும், மங்கலான வட்டங்கள் பெரிது, பெரிதாக வளர்வதைக் கவனிப்பது போலவும் அவள் கற்பனை செய்தாள். இந்தத் தானத்தைக் காத்துக் கொண்டிருந்தது போல தூக்கம் காணப்பட்டது; அது வந்தது, படுக்கையின் தலைமாட்டில் நின்ற மேரியோடு முணுமுணுத் தது. அவளது முறுவலிப்புக்குக் கீழ்ப்படிந்த படி, ''ஷ்-ஷ்-ஷ்'', என்று சுற்றியிருந்த எல் லாவற்றையும் நோக்கிக் கூறியது. ஆஸ்ஸோல் உடனடியாகத் தூங்கிப் போய்விட்டாள். விருப்பமான கனவினை அவள் கனவு கண் டாள்: பூக்கள் நிறைந்த மரங்கள், ஆர்வக் கனிவு, மாயமந்திரம், பாடல்கள் மற்றும் விநோதக் காட்சிகள், அவற்றில், விழித் தெழுந்ததும், கால்களினின்றும் இதயத்தை

நோக்கி உயர்ந்து மகிழ்ச்சியை ஏற்படுத்து கின்ற நீல வண்ண நீரின் பளபளப்பை மட்டுமே அவளால் நினைவு கூர முடிந்தது. இவை எல்லாவற்றையும் கனவு கண்ட பிறகு, அந்த நம்புதற்கரிய உலகத்திலே அவள் சற்று நேரம் தங்கியிருந்தாள். அதன் பிறகு அவள் முழுமையாக விழித்தெழுந்து உட்கார்ந்தாள்.

மொத்தத்தில் அவளுக்குத் தூக்கக் கலக்கம் இல்லை, அவள் தூங்காதது போலவே இருந்தது. புதுமை, மகிழ்ச்சி உணர்வும், எதோ செயலாற்ற வேண்டும் என்ற விருப்பமும் அவளுக்குள்ளாக எழுந்தன. ஒரு புதிய அறை யைச் சோதிப்பவளைப் போலக் கண்களால் அறையைச் சுழல விட்டாள். பொழுது புலர்ந்தது — தெளிவான வெளிச்சம் முழுமை யாக வரவில்லை, ஆனால் முயன்று பார்த் தால், ஒருவனால் தன்னைச் சுற்றியிருப்பன வற்றைப் புரிந்து கொள்ள முடியும். பல கணியின் அடிப்பகுதி கருப்பாக இருந்தது; மேற்பகுதி வெளிச்சமாக இருந்தது. வெளியே, பலகணிச் சட்டத்தின் விளிம்பு அருகே ஒரு காலை நட்சத்திரம் மினுமினுத்தது. திரும் பவும் தான் தூங்கிப் போய்விடக் கூடாது என்பதை அறிந்தவளாக, ஆஸ்ஸோல் உடை யணிந்தாள், பலகணி வரை சென்றாள், கொக்கியை உயர்த்தி அதைத் திறந்தாள். வணக்கத்திற்குரிய தூய்மையான அமைதி வெளியே ஆட்சி செய்தது; அது இப்போது தான் கீழிறங்கியது போலக் காணப்பட்டது. நீல வண்ண வெளிச்சத்தில் புதர்கள் தளதளப்

புற்றன; தொலைவில் நின்ற மரங்கள் தூங்கின; காற்று கனமாக இருந்தது, மண்ணின் மணம் கமழ்ந்தது.

சட்டத்தின் உச்சியில் கையைச் சாய்த்துக் கொண்டு, அச்சிறுமி வெளியே பார்த்துச் சிரித்தாள். திடீரென்று, தொலைதூர அழைப்பின் ஓர் அணிமை உறவானது உள்ளும் புறமும் அவளை அலைக்கழித்தது. வெளிப்படையான எதார்த்தத்திலிருந்து சந்தேகத்திற்கிடமில்லாமல் இன்னும் மிகத் தெளிவாக இருப்பது வரை அவள் திரும்பவும் விழித்தெழுந்தது போலத் தோன்றியது. அக்கணம் முதல் அவள் உள்ளுணர்வின் மகிழ்ச்சி அடைந்த செழிப்பால் திளைத்தாள். இப்படியாக, அவற்றை அறிந்து கொண்டு, மற்றவர்களால் பேசப்படும் வார்த்தைகளையும் நாம் செவி மடுக்கிறோம். ஆனால் சொல்லப்பட்ட ஒன்று திரும்பவும் சொல்லப்படுமேயானால், அதைத் திரும்பவும் வித்தியாசமாக, ஒரு புதிய பொருளில் நாம் புரிந்து கொள்ள நேரும். அவளும் இப்பொழுது இதையே அநுபவித்தாள்.

ஒரு பழைய, ஆனால் அவள் அணிந்திருக்கும் போது எப்போதும் புதுமை குன்றாத ஒரு பட்டுத் தலைக்குட்டையை எடுத்துக் கொண்டு, அதை அவள் கன்னத்திற்குக் கீழாக வைத்து ஒரு கையால் தடவிக் கதவைத் திறந்தாள். வெறுங்காலோடு சாலையில் நடக்கலானாள். எல்லாமே வெறிச்சோடி அமைதியாக இருந்தாலும், ஓர் ஆர்கெஸ்ட்ரா

இசைபோல அவள் முழங்கி, உண்மையில் கேட்கப்பட்டாள் என்று அவள் கற்பனை செய்து கொண்டாள். வெதுவெதுப்பான தூசி வெறுங்கால்களில் கணமாகப் படிந்தது; சுவா சிப்பதற்குக் காற்று தூய்மையாகவும் மகிழ்ச்சி யாகவும் இருந்தது. வானம் வெளிறிக் கொண்டுவந்ததற்கு மாறாகக் கூரை முகடு களும், மேகங்களும் கருப்பு நிறத்தால் செதுக்கப் பட்டவை போலிருந்தன; வேலிகள், காட்டு ரோஜாச் செடிகள், தோட்டங்கள், பழத் தோட்டங்கள் மற்றும் மங்கலாகத் தெரிந்த சாலை — எல்லாமே சிறு துயில் கொண்டிருந் தன. பகற் பொழுதைக் காட்டிலும், ஒவ் வொன்றிலுமே ஒரு மாறுபட்ட ஒழுங்கு இருப்பதை கவனிக்கக் கூடியதாக இருந்தது — அதுவே, இன்னமும் முன்னமேயே மறைந்து போன பொருத்தத்தில் இருக்கிறது. கடந்து செல்லும் பெண்ணைத் திருட்டுத்தனமாகச் சோதனை செய்தபடி கண்ணைத் திறந்து கொண்டு ஒவ்வொன்றும் தூங்கின.

கிராமத்தை விட்டு விரைந்து செல்ல வேண்டும் என வேகமாக நடை போட்டு, வெகு தொலைவிற்கு வந்து விட்டாள். கபேர் னாவுக்கு அப்பால் புல்வெளிகள் இருந்தன; புல்வெளிகளுக்கு அப்பால் கொட்டைப் புதர் களும், பாப்ளார் மரங்களும், செஸ்ட்நட் மரங்களும் கடற்கரை நெடுகிலும் இருந்த குன்றுகளின் சரிவுகளில் புள்ளி வைத்தது போல அங்குமிங்குமாக வளர்ந்திருந்தன. சாலை முடிந்து போய் மேலும் அடர்த்தியா

கச் செடிகொடிகள் நிறைந்த பாதையானதா கத் தொடர்ந்து செல்லும் இடத்தில், பட்டுப் போன்ற சிறிய கறுப்பு நாய் வெண்ணிற மார்போடும், பேசும் ஆர்வமுற்ற கண் களோடும் ஆஸ்ஸோலின் கால்களை மெது வாக வட்டமடித்தது. ஆஸ்ஸோலை அடை யாளங் கண்டு கொண்ட அந்நாய், அவளுக்கு அருகே நெடுகிலும் நடந்தது, அவ்வப்போது ஊளையிட்டுக் கொண்டும், உடம்பை ஆட்டிக் கொண்டும் சென்றது, ‘நானும்’ ‘நீயும்’ என்பது போலத் தெளிவான எதையோ அப் பெண்ணோடு அமைதியாக ஒப்புக்கொண்டு சென்றது. தகவலளிக்கின்ற அதன் கண்களைப் பார்த்த போது, பேசாமல் இருப்பதற் கான இரகசியக் காரணம் ஏதுமில்லாதிருந்தால் நாய் பெசியிருக்கும் என ஆஸ்ஸோல் நம்பி னாள். தனது கூட்டாளியின் முறுவலைக் கவனித்த நாய் மூக்கினை மகிழ்ச்சியோடு சுருக்கியது, வாலை அலைத்தது, முன்னோக் கித் துள்ளு நடை போட்டது, ஆனால் திடீரென்று மாறுபாடான வகையில் அமர்ந் தது, தனது நிலைபேறுடைய எதிரியாகிய ஈயினால் கடிக்கப்பட்ட காதினைப் பிறாண் டிவிட்டுக் கொண்டு, பின்னோக்கி ஓடிச் சென்றது.

தன் மீது பனித் துளிகளை இறைத்த உயர மான புல்வெளிகளில் ஆஸ்ஸோல் நுழைந் தாள்; கையை நீட்டி, உள்ளங்கை கீழ் நோக்கியவாறு, அதனது கூர்முனையின் மேலாக வைத்தபடி நடந்தாள்; புல் படுவதி

னால் முறுவலித்தபடி சென்றாள். மலர்களின் மிகவும் சிறப்பான முகங்களையும், தண்டுகளின் அமைப்பினையும் உற்றுப் பார்த்த போது, அவளால் மறை குறிப்பைக் காட்ட முடிந்தது — மனிதனைப் போன்ற தோரணைகள், முயற்சிகள், இயக்கங்கள், அமிசங்கள் மற்றும் பார்வைகள்; வயலெலிகளின் ஊர்வலம், நில அணில்களுடைய கூட்ட நடனம் அல்லது தூங்கிக் கொண்டிருக்கும் கூளியைத் தனது செருமலால் உசுப்பி முள்ளெலி செய்த துடுக்கான கேலிகள், ஆகியவற்றைக் கண்டு இப்போது அவள் வியப்படைய மாட்டாள். உண்மையில், முள்ளெலியினுடைய சாம்பல் நிறப் பந்து பாதையின் குறுக்காக அவள் முன் உருண்டோடியது. பாதசாரியைப் பார்த்து வண்டியோட்டி சினப்படுவது போல ''ஃப்பூ-ஃப்பூ'' என அது சீறியது. தான் பார்த்தவைகளோடும், புரிந்து கொண்டவற்றினோடும் ஆஸ்ஸோல் பேசிக்கொண்டிருந்தாள். ''அய்யோ, அப்பாவியே,'' என்று கருஞ்சிவப்பு நிறமான, புழுத் தின்ற மலரிடம் சொன்னாள். ''சற்று நேரத்திற்கு வீட்டிலேயே நீ தங்கியிருப்பது நல்லது,'' — பாதையின் மத்தியில் நின்ற வழிச் செல்வோருடைய துணிகளினால் நீட்டிக் கொண்டிருந்த இலைகள் கிழிந்து விட்ட ஒரு புதரைப் பார்த்துச் சொல்லப்பட்டது இது. ஒரு பெரிய வண்டு நீல வண்ண மலரைப் பற்றிக் கொண்டிருந்தது, மலர் கீழே சரிய நழுவியது, ஆனால் படபடத்துத் தேடி திரும்பவும் பற்றிக் கொண்டது.

''தடிப்பான பயணியை உலுக்கித் தள்ளு,'' ஆஸ்ஸோல் மலர்க்கு அறிவுரை கூறினாள். உண்மை, வண்டு தனது பிடியை இழந்து விட்டு ஓசையோடு அப்பால் பறந்து சென்றது. இவ்வாறாக, மோதுண்ட இதயத்தோடு, நடுங்கிக் கொண்டும், முகஞ்சிவந்தபடியும், குன்றின் சரிவினை அவள் அடைந்து, புல் வெளியின் திறந்த பரப்பினின்றும் புதர்காட்டிற்குள் மறைந்து போனாள். இங்கே அவள் ஆழமான அடித்தொண்டையில் பேசிய — அது அவளுக்குத் தெரிந்தது — தனது உண்மையான நண்பர்களால் சுற்றி மறைக்கப்பட்டாள்.

அழகிய மஞ்சள் நிற மலர்க் கொடிகளுக்கும், கொட்டைப் புதர்களுக்கும் மத்தியில் இருந்தவை விரிந்த பழைய மரங்களாகும். அவைகளது சாய்வான கிளைகள் புதர்களின் உச்சி இலைகளைத் துடைத்து விட்டன. பெரிய செஸ்ட்நட் இலைகளுக்கு மத்தியில் வெள்ளை நிறத்தாலான கூம்புவடிவப் பூக்கள் மலர்ந்திருந்தன, அவற்றின் நறுமணமானது பனி, செடிப்பால் வாசனையோடு இரண்டறக் கலந்திருந்தன. வேர்களின் புடைத்த பிதுக்கங்களானது பாதையைக் குறுக்கே மறைத்து நின்றன. ஆஸ்ஸோல் இங்கே வசதியாக இருப்பது போல உணர்ந்தாள்; மரங்களை மனிதர்களாகக் கருதி வாழ்த்துச் சொன்னாள், அதாவது, அவற்றின் அகன்ற இலைகளை அமுத்தினாள். அவள் நடந்து சென்றாள், தனக்குத்தானே முணுமுணுத்தபடி

யோ, உரக்கச் சொல்லியபடியோ பேசினாள்: ''நீ இங்கே இருக்கிறாய், இங்கே மற்றொன்று இருக்கிறாய். எனது நண்பர்களே, அங்கே உங்களில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்! நண்பர்களே, நான் விரைந்து போய்க் கொண்டிருக்கிறேன், என்னைப் போக விடுங் கள்! நான் உங்கள் எல்லாரையும் அடை யாளங் கண்டு கொள்கிறேன், நான் உங்களை நினைவு வைத்திருக்கிறேன், மரியாதை செலுத்து கிறேன்.'' அவளது ''நண்பர்கள்'' முடிந்த அளவுக்கு — தங்களது இலைகளால் — அவளை மெல்லத் தட்டினார்கள். நேசபாவம் தொனிக் கக் கத்தி தங்கள் பதிலைத் தெரிவித்தார்கள். கால்களில் சேறு படிந்தது, அவள் கடலுக்கு மேலாக உள்ள மேட்டு நிலத்தை நோக்கி சென்று, அதனது விளிம்பிலே நின்றாள், விரைவாக நடந்து வந்ததனால் மூச்சுத் திணறினாள். ஓர் ஆழமான, வெற்றி கொள் ளப்பட முடியாத நம்பிக்கை அவளுக்குள்ளாக மகிழ்ச்சியோடு குமிழியிட்டது. தொடுவானத் திற்கு அப்பாலும் அவளது பார்வை அதை அனுப்பியது, அங்கிருந்து கரை நோக்கி வீசிய வலுவற்ற அலைகளில் திரும்பியபோது தனது தூயப் பயணத்தில் அது பெருமைப்பட்டது.

இதற்கிடையில், தொடுவானம் நெடுகிலும் தங்க இழையால் தைக்கப்பட்ட கடலானது இன்னமும் தூங்கியது; மேட்டு நிலத்தின் கீழ் மட்டுமே நீர் ஏற்ற இறக்கத்தோடு அடித்துக் கொண்டது. தூங்கிக் கொண்டிருந்த பெருங் கடல் கரைக்கு அண்மையில் எஃகு போல

சாம்பல் நிறமாகவும், அதற்கு அப்பால் நீல நிறமாகவும், தொலைவிலே கருப்பு நிறமாகவும் மாறியது. தங்க நூலிழைக்கு அப்பால் வானமானது சிவந்து பளிச்சிட்ட போது, ஒளியின் மிகப் பெரிய விசிறியாகத் துலங்கி யது; வெண்ணிற மேகங்கள் இப்போது இளஞ்சிவப்பாக மாறிப் போயின. அழகிய, சொர்க்கம் போன்ற துகள்கள் அவற்றிற்குள் ளாக மின்னின. தூரத்தில் தெரிந்த கருமை யின் ஊடே படபடக்கும் பனி-வெண்மை பரவி இருந்தது; நுரை மினுமினுத்தது; தங்க நூலிழை மத்தியில் திடீர்ப் பளிச்சிட்ட சிவப்பான மின்னல், செந்நிற சிற்றலைகளைப் பெருங்கடலின் குறுக்காக ஆஸ்ஸோலின் கால்களை நோக்கி அனுப்பிக் கொண்டிருந் தது.

அவள் கீழே அமர்ந்தாள், முழங்கால்களை இறுகத் தழுவிக் கொண்டாள். கடலை நோக்கி வளைந்து தொடுவானத்தைக் கூர்ந்து பார்த்தாள், பெரிதாக விரிந்து, எதுவுமே வயது வந்தது இல்லாத கண்களால் — ஒரு சிறு குழந்தையின் கண்களால் பார்த்தாள். இத்தனை காலமாக, மிகுந்த ஆர்வத்தோடு அவள் எதிர்பார்த்திருந்த ஒவ்வொன்றும் அங்கே, உலகத்தின் விளிம்பில், நடை பெற்றுக் கொண்டிருந்தது. அந்தத் தொ லைதூரத்து அகாதமான நாட்டில் கடலுக் குள்ளாக ஒரு குன்று இருப்பதை அவள் கற்பனை செய்தாள்; அதனது சரிவுகளி னின்றும் மேல் நோக்கி கடற்பாசிகள் மிதந்து

வந்தன; ஒரு தண்டில் இருந்த வட்ட வடிவமான இலைகளுக்கு மத்தியில், விநோத மான பூக்கள் பிரகாசித்தன. மேலேயிருந்த இலைகள் பெருங்கடலின் பரப்பின் மீது மின்னின; ஆஸ்ஸோலுக்குத் தெரிந்தது என்ன என்பதை அறியாத ஒருவன் மினுமினுத்தலை யும், ஒளி விடுவதையும் மட்டுமே காண முடி யும்.

கடற்பாசிகளினின்றும் ஒரு கப்பல் உயர்ந் தது; அது மேற்பரப்புக்கு எழுந்து சூரிய உதயத்தின் நடுவே சரியாக நின்றது. தொலை தூரத்தினின்றும் பார்க்கின்ற பொழுது இது மேகங்கள் போலத் தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது. மகிழ்ச்சியை ஒளிபரப் பியபடி, அது ஒயின், ரோஜா, குருதி, உதடுகள், சிவப்பு வெல்வெட் மற்றும் ஒண் சிவப்பு நெருப்பு ஆகியன போல செந்நிறமாக ஒளிவிட்டது. கப்பலானது நேரடியாக ஆஸ் ஸோலை முன்னோக்கி வந்து கொண்டிருந் தது. கப்பலின் ஓடக்கட்டையானது சக்தி யோடு நெக்கித் தள்ளியதில் நுரையின் இரு சிறகுகள் பரவிச் சென்றன; எழுந்து, அந்தப் பெண் தனது கைகளை மார்பின் மீது வைத்து அழுத்தினாள், ஆனால் ஒளியின் தந்திர விளையாட்டுச் சிற்றலைகளாக மாறி விட்டன; சூரியன் எழுந்தது, இன்னமும் சோர்வடைந்த, தூக்கம் பிடித்த தரையின் மீது நீண்டு கிடந்த ஒவ்வொன்றிலிருந்தும் மூடிக்கிடந்தவற்றை காலை நேரத்தின் நிறை வான வெளிச்சம் கிழித்தெறிந்தது.

அப்பெண் பெரு மூச்சு விட்டு, சுற்றிலும் பார்த்தாள். இசை முடிந்து போயிருந்தது, ஆனால் ஆஸ்ஸோல் இன்னமும் ஒலிக்கின்ற இசையின் பிடியில் ஆட்பட்டிருந்தாள். இந்த உணர்வானது படிப்படியாகத் தளர்ச்சி யடைந்தது, பிறகு ஒரு நினைவாக மாறியது, இறுதியாக வெறுமனே களைப்பானது. அவள் புல்லின் மீது படுத்துக் கொட்டாவி விட்டாள், மகிழ்வோடு கண்களை மூடிக்கொண்டு தூங்கிப் போனாள் — எந்தவிதக் கவலைகளோ, கனவு களோ இல்லாத, ஆழ்ந்த, அயர்ந்த தூக்கம்.

அவளது வெறுமையான உள்ளங்கால் நெடுக ஊர்ந்து சென்ற ஓர் ஈயால் அவள் விழித்தெழுந்தாள். ஆஸ்ஸோல் பொறுமை யில்லாதபடி தனது காலை உதைந்து எழுந் தாள்; உட்கார்ந்து கொண்டு, கலைந்து போன தலைமுடியைச் சரி செய்தாள், இவ் வாறு, கிரேயினுடைய மோதிரம் இருப்பது தெரியவந்தது, ஆனால் அது ஏதோ புல் லின் இதழ் தனது விரல்களுக்கிடையே பற்றிக் கொண்டது என்று எண்ணியவாறு அவற்றை விரித்தாள். எனினும், தொந் தரவானது மறைந்து போகவில்லை, கையைப் பொறுமையில்லாதபடி கண்ணுக்கு மேலாக உயர்த்தி, உடனே பீறிட்டு எழும் நீரூற்றின் மும்முரத்தோடு குதித்தெழுந்தாள்.

வேறு யாருடையதைப் போன்றோ கிரே யின் ஒளிவிடும் மோதிரம் அவளது விரலில் ஒளிர்ந்தது, ஏனெனில் இந்தக் கணத்திற்

5

போருக்கு முன்னேற்பாடுகள்

சீக்ரெட்டின் கப்பற் தளத்திற்கு கிரே திரும்பிய பிறகு, சில நிமிடங்களுக்கு அங்கேயே அசை யாமல் நின்றான், முற்றிலும் குழப்பமான நிலையைக் காட்டி தலையைப் பின்னிருந்து முன்னாகக் கையால் திரும்பத்திரும்ப வருடி னான். பராக்கு — உணர்ச்சிகளின் ஒரு மூடி மறைக்கப்பட்ட போக்கு — தூக்கத்தில் நடப் பவனுடைய அருத்தமற்ற புன்முறுவலாக அவன் முகத்தில் பிரதிபலித்தது. அவனது சகா, பன்டேன், அந்தக் கணத்தில் கப்பல் மேல்தளத்தின் வழியாக, வறுத்த மீன் பாத் திரம் ஒன்றைத் தூக்கியபடி வந்து கொண்டிருந் தான்; கிரேயைப் பார்த்ததும், காப்டனுடைய விநோதமான மனநிலையைக் கவனித்து விட் டான்.

''நீங்கள் காயம் படவில்லையே, இல் லையா, நீங்கள்?'' எச்சரிக்கையோடு அவன் வினவினான். ''நீங்கள் எங்கு போயிருந்தீர்கள்? நீங்கள் என்ன பார்த்தீர்கள்? உண்மையில், இது என்னுடைய வேலையில்லை என்றாலுங் கூட. போனஸோடு கூடிய இலாபந்தரும் சரக்கை நமக்குத் தர ஒரு முகவர் முன்வந்

திருக்கிறார். ஆனால் உங்கள் விஷயம் என்ன, ஐயா?''

''நன்றி உனக்கு,'' ஒரு பெருமூச்சு விட்டு கிரே கூறினான், கழற்றிவிடுபவன் போல. ''அது தான் இப்போதைக்கு எனக்குத் தேவைப்பட்டது, உனது சாதாரணமான புத்திசாலித்தனமான குரலின் ஓசை, குளிர்ந்த நீரோட்டம் போல இருக்கிறது. கப்பல் குழுவினரிடம் இன்று நாம் நங்கூரத்தை உயர்த்திக் கொண்டிருப்பதாகக் கூறு, பன்டேன், இங்கிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள லில்லியானாவின் நுழைவாயிலுக்கு நாம் நகர்ந்து போகிறோம். நதிப்படுகையானது நீரடி மணல் திட்டுகளால் நிறைந்திருக்கிறது. கடற்பரப்பு விவர விளக்கப்படம் எடுத்து வா. நமக்கு ஒரு மீகாமன் தேவைப்படவில்லை. இப்பொழுது வேண்டியதெல்லாம்... ஓ, ஆமாம். கடந்த ஆண்டின் வெண்பனியைப் போல, இலாபந்தரக் கூடிய சரக்குத் தான் எனக்கு வேண்டும். நான் என்ன சொன்னேன் என்பதை அந்த முகவரிடம் நீ சொல்லலாம். நான் இப்போது நகரத்திற்குப் போகிறேன். மாலை வரை அங்கே தான் நான் இருப்பேன்.''

''ஆனால் என்ன நடந்தது?''

''ஒன்றுமில்லை, பன்டேன். எல்லா வினாக்களையும் தவிர்த்தல் வேண்டும் என்ற எனது விருப்பத்தை மனத்தில் கொள்ளும்படி உன்னை நான் விரும்புகிறேன். நேரம் வரும் போது, எல்லாவற்றைப் பற்றியும் உனக்கு நான்

கூறுவேன். நாம் பழுது திருத்துவதற்காக நிறுத்தப் போகிறோம், நீர் வெளியேற்றப்பட்ட உள்ளூர் துறை இடம் பிடிக்கப்பட்டுவிட்டது என்று மாலுமிகளிடம் கூறு.''

''சரி, ஐயா,'' பன்டேன், கிரேயினுடைய முதுகுப் பக்கமாகத் திரும்பி விளங்காதபடி பதில் பேசினான்.

காப்டனுடைய உத்தரவுகள் முற்றிலும் அறிவுபூர்வமானதாக இருந்துங்கூட, பெந்தை விழிகளோடு மீன் தட்டை எடுத்துக் கொண்டு, தனது சொந்த அறை நோக்கி அந்தச் சகா விரைந்து முணுமுணுத்தான்: ''நீ குழம்பிப் போய்விட்டாய், பண்டேன். கள்ளக்கடத்தல் செய்வது பற்றி அவன் நினைத்துக் கொண்டிருக்கிறானா? நாம் இப்போது கடற்கொள்ளையரின் கருப்புக் கொடியைப் பறக்க விடப்போகிறோமா?'' நம்பமுடியாத பெரும் யூகங்களால் பன்டேன் குழம்பிப் போய் விட்டான். பதட்டத்தோடு அவன் மீனை விழுங்கிய நேரத்தில், கிரே அவனது அறைக்குச் சென்றான், கொஞ்சம் பணம் எடுத்துக் கொண்டான், வளைகுடாவைத் தாண்டி, லிஸ் நகரத்தின் வர்த்தகப் பகுதியில் தோன்றினான்.

இப்பொழுது ஆயினும், அவன் திடமனத்தோடு அமைதியாகச் செயலாற்றினான், இந்த அதிசயமான பாதையில் அவன் செய்யப் போகின்றவை குறித்த கடைசி விவரம் வரை அறிந்திருந்தான். ஒவ்வொரு செயலும் — சிந்தனை, இயக்கம் — படைப்புப் பணியின் உற்

சாகத்தால் அவனை வெதுவெதுப்படையச் செய்தது. அவனது திட்டம் விரைவாகவும், விரிவாகவும் தயாரானது. வாழ்க்கையைப் பற்றிய அவனது கருத்துகள், உளியால் அடித்த கடைசிச் செதுக்கலுக்குப் பிறகு சல வைக் கல்பெறுகின்ற ஒளிவண்ண மாற்றத்தைப் பெற்றது.

கிரே மூன்று கடைகளைப் பார்வையிட் டான், தனது தேர்வு துல்லியமாக இருக்க வேண்டும் என்பதில் சிறப்பான அக்கறை காட்டினான், ஏனெனில் தான் விரும்பக் கூடிய சரியான வர்ணத்தை அவன் கற் பனையில் மிகவும் தெளிவாகக் கண்டான். முதல் இரண்டு கடைகளில் பகட்டான வண்ணத்தில் உள்ள நாகரிகப் பாங்கற்ற பட்டுகள் காட்டப்பட்டன; மூன்றாவது கடையில் மனத்திற்குப் பிடித்த வகையி லான மாதிரிகள் காட்டப்பட்டன. தனது பழைய இருப்புக்களிலிருந்து துணிவகைகளை விரித்துப் போட்டபடி, கடைக்காரன் மகிழ்ச்சி யோடு ஆரவாரம் செய்தான், ஆனால் ஓர் உறுப்பியல் ஆராய்ச்சியாளனைப் போல கிரே கண்டிப்பாக இருந்தான். பொட் டலங்களையும் மடிப்புகளையும் அவன் பொறு மையோடு விரித்துப் பார்த்து, பக்கத்தில் வைத்து, அவற்றை ஒன்று சேர்த்தான். அவன் விரித்துப் போட்டு வெளிச்சத்தில் கொண்டு வைத்த அநேக செந்நிறப் பட்டைகள் நிறைந்த கவுண்டர் தீப்பிடித்து எரியப் போவது போலக் காணப்பட்டது. ஒண்சிவப்பு வண்ண

அலையானது கிரேயின் காலணி நுனி மீது விழுந்தது; இளஞ்சிவப்பு நிறப் பிரதிபலிப்பு அவனது கைகளிலும் முகத்திலும் படிந்தது. அந்த மாதிரிகளை அவன் உற்றுப் பார்த்த போது, மாறுபட்ட வண்ணங்களை கவனித் தான்: தெளிவான இளஞ்சிவப்பு நிறம், பழுப்பு நிறம், பழஞ் சிவப்பு, அழுத்தமான செர்ரி நிறம், ஆரஞ்சு மற்றும் மங்கலான சிவப்பு; இங்கும் அங்குமாக எல்லா வகையான நிறச் சாயல்களும் காணப்பட்டன, அவை கற்பனையான பண்புத்தொடர்பில் வித்தி யாசப்பட்டது இச்சொற்களைப் போல: 'கவர்ச்சி மிக்கது' — 'அற்புதமானது' — 'கம்பீர மானது' — 'சிறப்பானது'; பார்வையினுடைய மொழிக்கு எட்டாத முறையில் மடிப்புகளில் மறைகுறிப்புகள் தென்பட்டன, ஆனால் உண்மையான செந்நிற வண்ணச் சாயலானது சற்று நேரத்திற்கு நமது காப்டன் பார்க் காதபடி மறைந்து விட்டது. கடைக்காரன் கொண்டுவந்த துணிகள் நன்றாக இருந்தன, ஆனால் அவற்றால் தெளிவான முறையில் ''சரி'' என்று வெளிப்படுத்த முடியவில்லை. கடைசியில் வாங்குபவனின் கவனத்தை ஒரு வர்ணம் கவர்ந்தது; சன்னலுக்கு அருகே கைவைத்த நாற்காலியில் அவன் அமர்ந்திருந் தான், கசகசவென்றொலித்த பொட்டலத் திலிருந்து நீண்ட பட்டையை இழுத்து, முழங் காலின் மீது அதைப் போட்டான். சுங்கா னைப் பற்களில் வைத்துக் கடித்தபடி உட் கார்ந்து கொண்டு, சிந்தனை செய்யும்

அமைதியில் ஆழ்ந்தான்.

காலை நேரத்துச் செந்நிறக் கதிர் போல முற்றிலும் தூய்மையான இந்த வர்ணமானது, உயர்ந்த மகிழ்ச்சியும், அரசுரிமைப் பண்பும் முழுமையாகக் கொண்டது. கிரே தேடிக் கொண்டிருந்தானே, அதே பெருமை மிக்க வர்ணமானதுதான். தீயின் கலவை நிறச் சாயல்களோ, கசகசாச் செடியின் இதழ் நிறமோ, இளஞ்சிவப்பான அல்லது கருஞ் சிவப்பான வகைகளோ, நீலவண்ணமோ, நிழலோ இல்லாது — சந்தேகத்தை ஏற்படுத்த எதுவுமில்லாது இருந்தது. ஒரு புன்முறுவலைப் போல ஆன்மீகப் பிரதிபலிப்பின் கவர்ச்சியுடன் அது ஒளிவிட்டது. கிரே மிகவும் சிந்தனை வயப் பட்டுப் போனான், வேட்டை நாய் காட்டும் சுறுசுறுப்போடு அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த கடைக்காரனை மறக்கும் அள வுக்கு. காத்திருந்ததனால் களைப்புற்று, ஒரு துண்டுத் துணியைக் கிழித்ததனால் ஏற்பட்ட ஓசையால் வியாபாரி கவனம் ஈர்க்கப்பட் டான்.

''இந்த மாதிரிகள் போதும்,'' என்று எழுந்து கிரே கூறினான், ''நான் இந்தப் பட்டை எடுத்துக்கொள்கிறேன்.''

''கட்டு மொத்தத்தையுமா?'' மரியாதையான சந்தேகத்தோடு கடைக்காரன் வினவினான். ஆனால் அவனது நெற்றியைப் பேசாமல் உற்றுப்பார்த்தான் கிரே, அது கடைக்கார னை கட்டுப்பாடற்ற நிலைக்கு ஆளாக்கியது. ''பிறகு, எத்தனை மீட்டர்கள்?''

கிரே தலையாட்டி, பொறு என்று அந்த மனிதனிடம் கூறுவது போல, ஒரு பென்சிலால் துண்டுக் காகிதத்தில் தனக்குத் தேவைப்பட்ட அளவைக் குறிக்கலானான்.

''இரண்டாயிரம் மீட்டர்கள்.'' சந்தேகத் தோடு அலமாரிகளை அவன் பார்வையிட் டான். ''இரண்டாயிரம் மீட்டர்களுக்கு மேல் வேண்டாம்.''

''இரண்டு?'' என்று பெட்டியைத் திறந்த வுடன் குதித்தெழும் பொம்மை போல கடைக்காரன் குதித்தெழுந்தான். ''ஆயிரமா? மீட்டர்களா? தயவு செய்து அமருங்கள், காப்டன். எங்களிடம் கடைசி வந்த மாதிரி களை நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா, காப்டன்? உங்கள் விருப்பம் போல. உங் களுக்கு தீப்பெட்டியும் கொஞ்சம் உயர்ந்த புகையிலையும் தரட்டுமா? இரண்டாயிரம்... இரண்டாயிரத்தில்...'' ஒரு சாதாரண 'ஆமாமி' லிருந்து எவ்வளவு ஒரு சத்தியம் வேறுபடுமோ, அவ்வளவு அவன் குறிப்பிட்ட விலை உண்மையான விலையிலிருந்து வேறு பட்டது, ஆனால் கிரே திருப்தியடைந்தான், ஏனெனில் எதன் மேலும் பேரம் பேசுவதற்கு அவன் விரும்பவில்லை. ''ஓர் அருமையான, உயர்தரமான பட்டு, தரத்தில் விஞ்சிநிற்பது, இங்கு தவிர வேறு எங்கும் உங்களால் இதனைக் கண்டுபிடிக்க முடியாது,'' கடைக் காரன் சொல்லிக்கொண்டே போனான்.

கடைசியாக அவன் புகழ்ந்துரைகளைக் கூறி முடித்த போது, கிரே பட்டை ஒப்படைப்

பதற்கு ஏற்பாடு செய்தான், பணத்தைச் செலுத்தினான், புறப்பட்டுப் போனான். சீனப் பேரரசனுக்குத்தக்க ஆடம்பரத்தோடு கிரே யை வாசல் வரை வந்து கடைக்காரன் வழியனுப்பி வைத்தான். இதற்கிடையே, அத் தெருவின் எதிரே, ஒரு தெருப்பாடகன், செல்லோவை மீட்டி அதன் குறுக்காக வில்லை மென்மையாக செலுத்தி அதைத் துயரமாகவும், அற்புதமாகவும் பேசவைத்துக் கொண்டிருந்தான்; அவனது தோழன், ஃப்ளூட் வாசிப்பவன், தொண்டையிலிருந்து எழும் அற்புத ஒலியால் வாசித்துக் கொண்டிருந் தான். சூரிய ஒளியில் தூங்கி வழியும் அந்த எளிமையான பாட்டு கிரேயின் காதுகளை எட்டியது. உடனடியாக என்ன செய்திருக்க வேண்டும் என்பதை அவன் அறிந்தான். உண்மையில், இத்தனை நாட்களும் நிலைத் திருந்த ஆன்மீகப் பார்வையின் உச்சத் தினின்றும் எதார்த்தத்தால் தரும் ஒவ்வொரு ஜாடைகளையும் அவன் தெளிவாக உணர்ந்து கொண்டான். கடந்து சென்ற வண்டிகளால் தெளிவாகக் கேட்க முடியாத இசை அவனது காதில் விழுந்த போது அவனது உள்ளத்தில் ஒரு முக்கிய எண்ணம் உண்டாயிற்று. அவன் கருதிய எல்லாமே ஏன், எப்படி வெற்றி கரமாக அமைகின்றன என்பதை அவன் ஊகிக்க முடியும். சந்தைக் கடந்து, இசை எங்கிருந்து வந்து கொண்டிருந்ததோ அந்த வீட்டின் படலையைத் தாண்டி கிரே உள்ளே நுழைந்தான். இந்த நேரத்திற்குள்

ளாக, இசைக்கலைஞர்கள் இடம் பெயர் வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்; ஃப்ளூட் வாசிக்கும் உயரமான மனிதன் நாண யங்கள் சுழற்றி வீசப்பட்ட சன்னல்களை நோக்கி மனநிறைவுடன் தலை வணங்கி தனது குல்லாயை நன்றியோடு அலைத்தான். செல் லோ கருவியானது அதனது சொந்தக்கார னின் கைக்குள்ளாகத் திரும்பவும் அடைபட்டுக் கிடந்தது; நெற்றியிலிருந்து வியர்வையை ஒத்தி அகற்றிக் கொண்டிருந்த அவன், ஃப்ளூட் வாசிப்பவனுக்காகக் காத்துக் கொண்டிருந் தான்.

''ஏன், நீயா, ஸிம்மர்!'' மாலை நேரங் களில் 'மிடாவின் மீது பணம்' என்னும் அருந் தகத்தில் கடலோடிகளைத் தனது அற்புதமான இசையால் மகிழ்வித்த வயலின் கலைஞன் என்பதை அடையாளங் கண்டு கிரே பேசி னான். ''ஏன் உன்னுடைய வயலினைக் கை விட்டு விட்டாய்?''

''அன்புள்ள காப்டனே,'' ஸிம்மர் சுயதி ருப்தியுடன் மறுத்துப் பேசினான், ''ஓசையும், கிலுகிலுப்பும் ஏற்படுத்தும் எதையும் நான் வாசிப்பேன். என்னுடைய இளமைப் பிராயத் தில் நான் இசைக் கோமாளியாக இருந்தேன். இப்போது கலைக்கான ஓர் ஆர்வத்தை நான் வளர்த்துக் கொண்டுள்ளேன். உண் மையான திறமையை நான் சிதறடித்து விட் டுவிட்டேன் என்பதைக் கனத்த இதயத்தோடு நான் உணர்கிறேன். அதனால்தான், காலந் தாழ்த்தி ஏற்பட்ட பேராசை காரணமாக,

ஒரே சமயத்தில் நான் இரண்டை நேசிக்கிறேன்: செல்லோ மற்றும் வயலின். பகற் பொழுதில் செல்லோவையும், மாலை நேரத்தில் வயலினையும் வாசிக்கிறேன். ஆகவேதான் நான் அழுது கொண்டிருப்பது போலக் காணப் படுகிறேன், இழந்து போன திறமைக்காக தேம்பிக் கொண்டிருக்கிறேன். உங்களால் எனக்குக் கொஞ்சம் ஒயின் வழங்க முடியுமா? செல்லோதான் எனது கர்மேன், ஆனால் வயலின்...''

''ஆஸ்ஸோலா,'' கிரே கூறினான்.

ஸிம்மர் தவறாகப் புரிந்து கொண்டான்.

''ஆமாம்,'' அவன் தலையாட்டினான், ''ஒரு **சோலோ** ஜாலராவிலோ, பித்தளைக் குழாய்களிலோ வாசிக்கப்படுவது வேறு வகையானது. எனினும், எதைப் பற்றி நான் கவலைப்பட? கலைக் கோமாளிகள் இளிக்கட்டும், சுரிக்கட்டும் — வயலினுக்குள்ளாகவும் செல்லோவுக்குள்ளாகவும் தேவதைகள் குடியிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.''

''என்னுடைய டூர்-லுர்-லூவில் என்ன குடியிருக்கிறது?'' நடந்து கொண்டே ஃப்ளூட் வாசிப்பவன் கேட்டான். செம்மறியாட்டின் நீலநிறக் கண்களையும், சுருண்ட இளம் பொன் நிறமான தாடியுங் கொண்ட அவன் நன்கு உயரமாக வளர்ந்தவன். ''அதை இப்போதே எனக்குச் சொல்.''

''காலையிலிருந்து எவ்வளவு நீ குடித்திருக்கிறாய் என்பதைப் பொருத்து எல்லாமே இருக்கிறது. சில வேளைகளில் அது ஒரு

பறவையாக இருக்கும், மேலும் சில நேரங்களில் அது சாராயத்தின் ஆவியாக இருக்கும். காப்டன், எனது பங்காளி தூஸை நான் அறிமுகப்படுத்தலாமா? குடிக்கின்ற போது நீங்கள் பணத்தை எப்படி வாரி இறைக்கிறீர்கள் என்பது பற்றி அவனிடம் நான் கூறியிருக்கிறேன், பார்க்காத போதும் அவன் உங்கள் மீது காதல் வயப்பட்டு விட்டான்.''

''ஆமாம், மிகப் பரந்த போக்கினையும், பெருந்தன்மையையும் நான் நேசிக்கிறேன். ஆனால் நான் ஒரு கபடன். ஆகவே என்னுடைய இழிந்த போலிப்புகழ்ச்சியை நம்ப வேண்டாம்,'' என்றான் தூஸ்.

''நல்லது,'' என்ற கிரே முறுவலித்தான். ''எனக்கு நேரமில்லை, விஷயம் மிகவும் அவசரமானது. சற்று நிறையவே பணம் சம்பாதிக்கும் வாய்ப்பினை உங்களுக்கு என்னால் தர முடியும். ஓர் இசைக்குழுவைச் சேர்த்துக் கொள்ளுங்கள், இசையின் ஆன்மாவைப் பற்றி எல்லாவற்றையும் மறந்து போன, மேடைமீது தங்களுடைய சிக்கலான ஓசைகளால் சவச்சீலையை மெதுவாகப் பரப்பிய, செத்தவர்களின் கம்பீரமான முகங்கள் கொண்ட சிங்காரிகளின் குழு அல்ல — வேண்டாம். சமையற்காரர்கள் மற்றும் பரிமாறுபவர்களின் சாதாரணமான உள்ளங்களை அழவைக்கக் கூடிய உங்களது நண்பர்களை ஒன்று சேருங்கள், உங்களது அலைந்து திரியும் இனக்குழுவை ஒன்று சேருங்கள். கடலும் காதலும் வறட்டு வித்தகர்களுக்கு இல்லை.

உங்களோடு சேர்ந்து குடிக்க நானும் விரும்புகிறேன், ஒன்றுக்கும் மேற்பட்ட போத் தல்களைச் சாப்பிடத் தயாராக இருக்கிறேன், ஆனால் நான் போயாக வேண்டும். நான் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் இருக் கின்றன. இதை எடுத்துக் கொள்ளுங்கள், 'ஆ' எழுத்திற்காகக் குடியுங்கள். எனது யோசனையை நீங்கள் ஏற்றுக் கொண்டால், இன்று மாலை சீக்ரெட்டுக்கு ' வாருங்கள். முதலாவது அணைக்கு அருகிலே அது நங் கூரமிட்டு நிற்கிறது.''

''சரி!'' என்று ஸிம்மர் உரக்கக் கத்தினான், ஏனெனில் ஓர் அரசனைப் போல் கிரே பணம் கொடுப்பான் என்பதை அறிந்து கொண்டான். ''தூஸ், தலை வணங்கு, 'சரி' என்று கூறு. மகிழ்ச்சியால் உனது குல்லாயைச் சுழற்றி ஆட்டு! திருமணம் செய்து கொள் வதற்குக் காப்டன் கிரே முடிவு செய்துவிட் டார்!''

''ஆமாம்,'' என்று சாதாரணமாகக் கிரே பதிலளித்தான். ''சீக்ரெட் தளத்தில் விவரங் களை நான் உங்களுக்குக் கூறுவேன். உங்களுக் காக...''

''இங்கே 'ஆ'வுக்காக!'' தூஸ் ஸிம்மரை முழங்கையால் இடித்து விட்டுக் கிரேயைப் பார்த்துக் கண்சிமிட்டினான். ''ஆனால்... நெடுங்கணக்கில் அநேக எழுத்துகள் இருக்கின் றனவே! நீங்கள் 'ஃ'க்காக எங்களுக்கு ஏதே னும் தராமலா போவீர்கள்?''

கிரே அவர்களுக்கு இன்னும் கொஞ்சம்

பணம் கொடுத்தான். இசைவாணர்கள் பிரிந்து சென்றனர். பிறகு அவன் தரகு முகவரிடம் சென்று, ஓர் அவசரமான பணிக்காக இரகசியக் கோரிக்கை வைத்தான். பெருத்த தொகையை ஈட்டித் தரும் அதனை, ஆறு நாள் காலக் கெடுவில் முடித்துக் கொடுக்க வேண்டும். கிரே தன்னுடைய கப்பலுக்குத் திரும்பிய நேரத்தில், முகவர் ஒரு நீராவிப் படகில் ஏற்கெனவே போய்க் கொண்டிருந் தான். மாலை வாக்கில் பட்டு விநியோகிக் கப்பட்டது; லேதிகா இன்னமும் திரும்பி வராமல் இருந்தான், இசைவாணர்களும் வந்து சேரவில்லை; பன்டேனிடம் பேசுவதற் காகக் கிரே புறப்பட்டுச் சென்றான்.

சில ஆண்டுக் காலமாகக் கிரே ஒரே கப்பல் குழுவினரோடு தான் கடற்பயணம் மேற்கொண்டிருந்தான் என்பதைக் குறிப்பிட் டாக வேண்டும். முதலாவதாகத் தன்னுடைய வித்தியாசமான போக்குக் கொண்ட கடற் பயணங்களாலும் நிறுத்தங்களாலும் — சில வே ளைகளில் மாதக்கணக்கான, — மிகவும் வணிகம் குறைவான, மக்கள் அதிகமில்லாத இடங் களில் — தனது மாலுமிகளைக் காப்டன் புதிர் போட்டான். ஆனால் நேரம் செல்லச் செல்ல கிரேயினுடைய ''கிரேத்தன்மையினால்'' அவர்கள் ஆட்கொள்ளப்பட்டார்கள். அடிக்கடி அவன் அடிச்சுமையோடு மட்டுமே கப்பல் விடுவதுண்டு, தரப்பட்ட ஏற்றுச்சரக்கு அவ னுக்குப் பிடிக்காது என்ற ஒரே காரணத் திற்காக, அவன் லாபந்தரக் கூடிய சரக்கு

களை ஏற்றிக்கொள்ள மறுத்ததுண்டு. சோப்பு, ஆணிகள், எந்திர உதிரி உறுப்புகள் அல்லது கப்பற் கீழறையில் அமைதியாகக் கிடக்கும், மந்தமான தேவைகளின் உயிரற்ற உருவங்களை ஏற்படுத்தும் ஏதோ பொருள்களை எடுத்துக் கொள்ளும்படி அவனிடம் எவரும் எப்போதும் பேசுவது கிடையாது. ஆனால் பழங்கள், மங்கு, விலங்குகள், நறுமணப் பொருள்கள், தேயிலை, புகையிலை, காஃபி, பட்டு மற்றும் அரிய மர வகைகள்: எபேனி, சந்தனம் மற்றும் தேக்கு இவற்றை எடுத்துக் கொள்ள அவன் எப்போதுமே தயாராக இருந்தான். இவை எல்லாமே அவனது கற்பனையின் மேற்குலத்தன்மைக்குப் பொருத்தமானவை, ஒரு கண்ணுக்கினிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டது என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. இந்தத் தற்பண்பை ஆர்வமான முறையில் வளர்த்துக் கொண்ட சீக்ரெட் கப்பல் குழுவினர் சாதாரண லாபம் என்ற புகைக்குள்ளாகச் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருந்த மற்ற எல்லாக் கப்பல்களையும் ஓரளவுக்கு இறுமாப்புடன் பார்த்துக் கொண்டனர். இன்னமும், இந்த முறை கிரே அவர்களது வினவுகின்ற தோற்றங்களைக் கவனித்தான்: மிக முட்டாள்தனமான மாலுமிக்குக் கூட, ஒரு காட்டு நதியில் பழுது திருத்துவது அவசியமற்றது என்பது தெரியும்.

இயற்கையாகவே, பன்டேன் கிரேயினுடைய உத்தரவுகளை அவர்களுக்குத் தெரிவித்தான். கிரே அறைக்குள் சென்ற போது தனது

சகா ஆறாவது சுருட்டை முடித்துக் கொண்ட வாறு, அறையில் மேலுங்கீழுமாக நடை போட்டு, அதிகமான புகையினால் தலை சுற்றல் ஏற்பட்டு நாற்காலிகளின் மீது தடுமாறி விழுந்து கொண்டிருந்தான். மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது; திறந்த கப்பற் சாளரத்தின் வழியாகப் பொன்னிறமான ஒளி விட்டத்தில் பாய்ந்தது, அதில் காப்டனுடைய குல்லாயின் பளபளப்பாக்கப்பட்ட முன் விளிம்பு மின்னியது.

''ஒவ்வொன்றும் தயாராக இருக்கிறது,'' என்று பன்டேன் உம்மொன்று முகத்தை வைத்துக் கொண்டு கூறினான். ''நீங்கள் விரும்பினால், இப்போது கூட நங்கூரத்தை ஏற்ற முடியும்.''

''நீ என்னை நன்கு அறிந்திருக்கக் கூடும்,'' கிரே அன்போடு பேசினான். ''நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதில் புதிர் ஏதுமில்லை. லில்லியானாவில் நாம் நங்கூரத்தை இறக்கியவுடனேயே, இதுபற்றிய எல்லாவற்றையும் நான் உனக்குக் கூறுகிறேன். மட்டமான சுருட்டுகளுக்காக நீ இத்தனை தீக்குச்சிகளை வீணாக்க வேண்டி இருக்காது. நங்கூரத்தை ஏற்று, போ.''

பன்டேன் கூச்சத்தோடு முறுவலித்து, ஒரு புருவத்தை வருடிவிட்டான்.

''ஆமாம், எனக்குத் தெரியும். அதாவது நான்... இல்லை, பரவாயில்லை.''

அவன் சென்ற பிறகு சற்று நேரத்திற்குக் கிரே மௌனமாய் அமர்ந்திருந்தான், இலே

சாகத் திறந்திருந்த கதவு வழியாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் பிறகு தனது அறைக்குச் சென்றான். அங்கே அவன் முதலில் உட்கார்ந்தான், பிறகு படுத்துக் கொண்டான், சரக்குச் சங்கிலியை இழுத்துக் கொண்டிருந்த பாரஞ்சாம்பியின் ஓசையைக் கேட்டுக் கொண்டிருந்த போது, கப்பலின் முன்புற மேடைக்குப் புறப்பட்டுப் போக விருந்தான், ஆனால் மீண்டும் எண்ணிப் பார்த்து மேசைக்குத் திரும்பினான், அங்கே அவனது விரல் மெழுகுச் சீலையின் மீது நேரானதும் விரைவானதுமான கோட்டைக் கிழித்தது. கதவின் மீது முட்டியால் அடித்ததானது, பைத்தியம் கொண்ட பரவச நிலையினின்றும் அவனை வெளிக் கொணர்ந்தது; சாவியைத் திருகி லேதிகாவை உள்ளே வரவிட்டான். பலமாக மூச்சுத் திணறி, கடைசி நொடியில் கொலை தண்டனையைத் தடுத்து நிறுத்திய தூதுவனைப் போல காட்சியளித்துக் கொண்டு மாலுமி அங்கே நின்றான்.

"'வேகமாகக் கிளம்பு, லேதிகா,' எனக்கு நானே கப்பல் நிற்கும் துறையில் நின்று சொல்லிக் கொண்டேன்," வேகமாகப் பேசியபடி அவன் கூறினான், "பாரஞ்சாம்பியைச் சுற்றி நடனமாடிக்கொண்ட பையன்கள் தங்களுடைய கைகள் மீது துப்பிக்கொண்டதை நான் பார்த்த போது. எனக்குக் கழுகுக் கண் இருந்தது. நான் பறந்து போனேன்; படகுக்காரன் பின்னால் மிகவும் பலமாக மூச்சு

விட்டுக் கொண்டிருந்தேன். ஆகவே அவனுக்கு அகக்கிளர்ச்சியால் வியர்க்கத் தொடங்கியது. என்னை விட்டுவிட்டுப் போக நீங்கள் விரும்பினீர்களா, காப்டன்?''

குருதிச் சிவப்பான அவனது கண்களைக் கூர்ந்து பார்த்தபடி கிரே பேசினான்: ''லேதிகா, இன்று காலைக்குப் பிந்தாது நீ திரும்ப வேண்டும் என்று நான் எதிர்பார்த்தேன். உன் தலையின் பின்புறம் குளிர்ந்த நீரை விட்டுக் கொண்டாயா?''

''ஆமாம். வயிற்றுக்குள் விட்ட அளவுக்குக் குறைவாகவே, ஆனால் நான் ஊற்றிக் கொண்டேன். ஒவ்வொன்றையும் நான் செய்தேன்.''

''பேசு.''

''பேசிக் கொண்டிருப்பதில் அருத்தமில்லை, காப்டன். எல்லாமே இங்கு எழுதப்பட்டிருக்கிறது. படியுங்கள் இதை. என்னால் முடிந்ததைச் செய்திருக்கிறேன். நான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''எங்கே?''

''என் தலைமீது போதுமான தண்ணீரை நான் ஊற்றிக் கொள்ளவில்லை என்பதை உங்களது முகபாவத்திலிருந்தே என்னால் காண முடிகிறது.''

அவன் திரும்பி, ஒரு குருடனின் விநோதமான அசைவுகளுடன் வெளியேறினான். துண்டுத் தாளைக் கிரே விரித்தான்; வளைந்த வேலியைப் போலக் காணப்பட்ட அந்த எழுத்துகளை வடிக்கும் போது பென்சில் கூட

வியந்திருக்கக் கூடும். லேதிகா எழுதியிருந்தன இவை தான்:

''உத்தரவுகளைப் பின்பற்றி. மாலை ஐந்து மணிக்குப் பிறகு நான் தெருவிற்குள்ளாகச் சென்றேன். ஒவ்வொரு புறமும் இரண்டு சன்னல்களுடன் கூடிய பழுப்பு நிறக் கூரை கொண்ட வீடு ஒன்று இருந்தது; அருகே ஒரு காய்கறித் தோட்டங்கூட இருந்தது. சம்பந்தப்பட்ட நபர் இரண்டு முறை வெளியே வந்தாள்: ஒரு முறை நீர் எடுப்பதற்காகவும், மற்றொரு முறை தீ மூட்டுவதற்குச் சிறு கட்டைகள் எடுப்பதற்காகவும். இருட்டிய பிறகு சன்னலுக்குள்ளாகப் பார்க்க முடிந்தது, ஆனால் திரையிருந்த காரணத்தால் எதையுமே காண முடியவில்லை.''

பிறகு வீட்டுக் காரியங்கள் குறித்த சில குறியீடுகள் தொடர்ந்தன. அவை ஒரு போத்தலை வைத்துக்கொண்டு லேதிகா பொறுக்கிச் சேர்த்தது போலத் தோன்றியது, ஏனெனில் கீழ்வரும் வார்த்தையோடு அந்த மனுவானது திடீரென்று முடிந்தது: ''சீட்டை நேர்செய்வதற்கு எனது சொந்தப் பணத்தைக் கொஞ்சம் சேர்க்க வேண்டியிருந்தது.''

எனினும், அறிக்கையின் சுருக்கம் தெரிவித்த தகவல்கள், நாம் முதலாவது அத்தியாயத்திலிருந்தே அறிந்ததுதான். தாளை மேசைக்குள் கிரே வைத்தான், காவல்காரனைச் சீட்டியடித்து அழைத்து, பன்டேனை கூட்டி வருமாறு அனுப்பினான். ஆனால் சகாவுக்குப் பதில் கப்பற் பொறுப்பாளன் அத்வுட், மடித்த

சட்டைக் கைகளை விரைவாக இழுத்து விட்டுக் கொண்டே வந்தான்.

''நாம் அணையில் தடுத்து நிறுத்தப் பட்டிருக்கிறோம். உத்தரவுகள் என்ன என்று பார்த்து வருமாறு பன்டேன் என்னைக் கீழே அனுப்பினான். ஊது கொம்புகள், மேளங்கள் மற்றும் பிற வயலின்களுடன் கூடிய ஆட்களை விரட்ட அவன் மும்முரமாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறான். சீக்ரெட்டுக்கும் வரும்படி அவர்களிடம் நீங்கள் கூறினீர்களா? மேலே வரும்படி உங்களைப் பன்டேன் சொல் கிறான். அவன் தலை சுற்றிக்கொண்டிருப்ப தாகக் கூறுகிறான்.''

''ஆமாம், அத்வுட், கப்பலுக்கு வரும்படி நான் இசைவாணர்களை அழைத்தேன். இதற் கிடையே மாலுமிகளுக்கான அறைக்குப் போகும்படி அவர்களிடம் கூறு. நாம் பிறகு என்ன செய்வதென்று யோசிக்கலாம். அவர் களிடமும் கப்பல் குழுவினரிடமும் இன்னும் பதினைந்து நிமிடங்களில் நான் அங்கு வருவேன் என்று கூறு. ஒவ்வொருவரும் வருகை தர வேண்டும் என நான் விரும்புகிறேன். நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதை நீயும் பன்டேனும் கேட்பீர்கள் என்று நான் கருதுகிறேன்.''

அத்வுட் தனது இடது புருவத்தை உயர்த்தி னான். கதவருகே சில நொடிகள் நின்றான், பிறகு நழுவிச் சென்றான்.

கைகளில் தனது முகத்தைப் புதைத்தபடி கிரே அடுத்த பத்து நிமிடங்களைச் செல

விட்டான்; எதற்கும் அவன் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கவில்லை; எதையும் கணக்கிட்டுக் கொண்டிருக்கவுமில்லை. கணப்பொழுது மௌனமாக இருக்கவே வெறுமனே அவன் ஆசைப்பட்டான். இதற்கிடையில், ஒவ்வொருவரும் இவனை ஆர்வத்தோடும், உத்தேசங்கள் நிறைந்த விருப்போடும் எதிர்பார்த்திருந்தனர். அவன் தோன்றினான், நம்புதற்கறிய விஷயத்தை எதிர்பார்க்கும் கூடிய அவர்களது முகங்களைப் பார்த்தான். ஆனால் நடைபெற்றவை எல்லாமே இயற்கையாகவே என்று அவன் கருதியதனால் இந்தப் பிற மக்களுடைய ஆன்மாக்களின் இறுக்கம் அவனது சொந்த உள்ளத்தில் இலேசான எரிச்சலோடு பிரதிபலித்தது.

ஒரு பால ஏணியில் உட்கார்ந்து கிரே பேசினான்: ''விஷேடமானது எதுவும் இல்லை. கப்பற் பாய்களை மாற்றும் வரை நாம் நதியில் இருப்போம். பட்டு வாடா செய்யப் பட்ட செந்நிறப் பட்டை நீங்கள் எல்லாரும் பார்த்திருப்பீர்கள். அப்பட்டால் பாய் அலுவலர் பிளண்டினுடைய தலைமையில் சீக்ரேட்டுக்குப் புதிய கடற்பாய்களை அமைப்பார்கள். பிறகு நாம் பயணம் மேற்கொள்வோம், ஆனால் எங்கே போவதென்று நான் கூற மாட்டேன். எந்த வகையிலும் அது இங்கிருந்து அதிகத் தொலைவில் இல்லை. என் மனைவிக்காக நான் போகிறேன். அவள் இன்னமும் என் மனைவியாகி விடவில்லை, ஆனால் அவளாகத்தான் இருப்பாள். அதற்

காகவே எனது கப்பலின் பாய்களை நான் செந்நிறமாக மாற்றியிருக்கிறேன். ஒப்பந்தப்படி, தொலைவிலிருந்தே அவள் நம்மை அடை யாளங் காண முடியும். அவ்வளவேதான். நீங் கள் பார்ப்பது போல, இதில் எல்லாம் எந்த மாயமுமில்லை. மேற்கொண்டு இது பற்றி எது வும் சொல்ல வேண்டாம்.''

மாலுமிகள் மகிழ்ச்சியோடு அதிசயித்துப் போயினர் என்பதையும் ஆனால் பேசத் துணியவில்லை என்பதையும் அவர்களது புன் முறுவல்களிலிருந்தே அறிந்து கொண்ட அத்வுட் பேசினான்: ''உண்மையாகவே, அதற் காகத்தான் இதுவா, காப்டன்... இது நாங்கள் தீர்ப்பளிக்கக் கூடியதல்ல. எங்களால் கீழ்ப்படிய மட்டுமே முடியும். எல்லாமே நீங்கள் எப்படி விரும்புவீர்களோ அப்படி இருக் கும். எனது வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ளலாமா.''

''நன்றி உங்களுக்கு!''

கப்பற் பொறுப்பாளருடைய கையைக் கிரே இறுகப் பற்றினான், ஆனால் அவன் அதீத மனித முயற்சியால், மிக உறுதியாகக் காப்டன் கையைக் குலுக்கினான். பிறகு கப்பல் குழுவினர் வந்து, வாழ்த்துகளை முணுமுணுத்து ஒருவரது இனிய புன்னகை மற்றவருடையதை விஞ்சும் படி செய்தார்கள். யாரும் கூச்சல் போடவில்லை, யாரும் மகிழ்ந் தார்ப்பரிக்கவில்லை — காப்டனது குறுகிய உரை யிலே ஏதோ மிகச் சிறப்பான ஒன்றிருப்பதாக எல்லாரும் உணர்ந்தார்கள். பன்டேன் நிம்மதிப்

பெருமூச்சு விட்டு மகிழ்ச்சியடைந்தான் — அவனது இதயத்தில் ஏறியிருந்த சுமையானது உருகிப் போய்விட்டது. கப்பலின் தச்சன் மட்டுமே அதிருப்தியாகக் காணப்பட்டான். அவன் ஊக்கமில்லாதபடி கிரேயின் கையைக் குலுக்கி, வருந்தந்தோய்ந்தபடி கேட்டான்:

''அதைப் பற்றி உங்களால் எப்படிச் சிந்திக்க முடிந்தது, காப்டன்?''

''அது உன்னுடைய கோடரியால் அடித்தது போல இருந்தது. ஸிம்மர்! நாம் உனது பையன்களைப் பார்ப்போம்.''

வயலின் வாசிப்பவன், இசைவாணர்களை முதுகில் தட்டி, தூய்மையற்ற முறையில் உடையணிந்த ஏழு ஆட்களைக் கூட்டத்தினின்றும் வெளியே தள்ளினான்.

''இங்கே,'' ஸிம்மர் சொன்னான். ''இது பேரிசைக் கொம்பு. இவன் வாசிக்கவில்லை, பீரங்கி போலச் சுடுவான். தாடியில்லாத இந்த இரண்டு பையன்களும் எக்காளம் வாசிப்பவர்கள்; இவர்கள் வாசிக்கத் தொடங்கும் போது, ஒவ்வொருவருமே போருக்குப் புறப்பட்டுப் போக வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். பிறகு இங்கே கிளாரினட், கார்னெட், இரண்டாவது பிடில், எல்லாருமே துறைபோனவர்கள். மகிழ்ச்சி மிக்க எங்கள் குழுவின் தலைமையாசிரியன் இதோ — பிரிட்ஸ், மேளம் வாசிப்பவன். பாருங்கள், மேளம்வாசிப்பவர்கள் வழக்கமாக ஏமாற்றமடைந்தவர்கள் போலக் காணப்படுவார்கள், ஆனால் இவனோ பெருமையோடும், உணர்ச்சி வேகத்தோடும் வாசிப்

பான். அவனது வாசிப்பில் ஏதோ திறந்தம னமாகவும் அவனது மேளக்குச்சிகளைப் போ லவே நேரானதாகவும் இருக்கிறது. எல்லாம் சரியாக இருக்கிறதா, காப்டன் கிரே?''

''அற்புதம். கப்பற் கீழறையில் உங்களுக் காக ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந் நேரத்திற்குள்ளாக எல்லாவிதமான விரை யியக்க அசைவுகளாலும், மென்மையான இசை யாலும், உச்ச அளவில் உரத்த இசையாலும் அது நிறைந்திருக்கும். உங்களுடைய இடங் களுக்குச் செல்லுகள். ஒதுங்கிப் போ, பன் டேன்! இன்னும் இரண்டு மணி நேரத்தில் உனது பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன்.''

கடந்து சென்ற இந்த இரண்டு மணி நேரத்தை அவன் கவனிக்கவில்லை, ஏனெனில் தமனிகளில் நாடித் துடிப்பு நிறுத்தாதது போல, அவனது உள்ளுணர்ச்சியில் ஒருபோதும் நிற்காத இசையால் இந்நேரம் கடந்தது. அவனுக்கு ஒரே ஒரு சிந்தனைதான், ஓர் ஆசை, ஓர் இலட்சியம். செயலாற்றும் மனிதன் என்ற வகையான அவன் தனது சிந்தனை களில் நிகழ்ச்சிகளின் முன்னால் இருந்தான்; சதுரங்க ஆட்டத்திலே காய்களைப் போல அவற்றை இவ்வளவு விரைவாகவும், இலகுவா கவும் கையாள முடியவில்லையே என்ற கவலை மட்டுமே அவனுக்கு இருந்தது. மனத்தினுள் கிளர்ந்தெழுந்த உணர்வுகளின் ஒலி, தலைக்கு மேலாகக் கணீரென்று ஒலித்த ஒரு பெரிய மணி ஒலி போல, செவிடாக்கும் படி உடல் வழியாக எதிரொலித்தவற்றை, வெளித்

தோற்றமானது ஏதேனும் முன்னதாகக் காட்டவில்லை. கடைசியில், அது அவனை தனக்குத்தானே எண்ணிக் கொள்ளும் படி செய்தது: ''ஒன்று... இரண்டு... முப்பது...'', இப்படியாக, கடைசியில் அவன் ''ஆயிரம்'' என்று சொல்கின்ற வரை. இந்த மூளைப் பயிற்சியானது பயன் தந்தது; மற்றவனுடைய கண்களால் இந்த ஏற்பாட்டை அவன் இறுதி யாகக் காண முடிந்தது. ஆஸ்லோல் எந்த மாதிரியான நபர் என்பதைப் பற்றிக் கூட அவனால் கற்பனை செய்ய முடியவில்லை, ஏனெனில் அவளிடம் அவன் ஒருபோதும் பேசியதில்லை என்பதற்காக ஓரளவு வியப்ப டையவும் செய்தான். ஒருவனைப் புரிந்து கொள்வதற்கு அவனுடைய முகத் தோற் றத்தைக் கொண்டு தன்னை அம்மனிதனாகக் கற்பனை செய்து பார்க்க வேண்டும் என்று அவன் ஒரு முறை படித்திருக்கிறான். இவை களுக்கு அந்நியமான முறையிலே கிரேயின் கண்கள் ஏற்கெனவே ஒரு விநோதமான வெளிப் பாட்டினைக் காட்டத் தொடங்கியிருந்தது. அவனது மீசைக்குக் கீழாக் இருந்த உதடுகள் வலுவிழந்து நெளிந்து கொண்டிருந்தன. ஆனால் அச்சமயத்தில் அவனுக்குத் திடீ ரென்று உணர்வு வந்து விட்டது, வாய் விட்டு உரக்கச் சிரித்துக் கொண்டு பன்டேனை விடுபாடு செய்வதற்காக அவன் மேலே சென் றான்.

அது இருட்டாக இருந்தது. ஜாக்கெட்டின் கழுத்துப் பட்டையை மேலே உயர்த்தி விட்

டிருந்த பன்டேன் காம்பஸுக்கு அருகே மேலுங்கீழுமாக மென்னடை போட்டபடி கப்பல் சுக்கானிடம் கூறிக் கொண்டிருந் தான்:

''கப்பலை இடப்பக்கமாகத் திரும்பு, ஒரு கால் புள்ளி. இடப்பக்கம். நிறுத்து. இன்னும் ஒரு கால் புள்ளி இடப்பக்கம் திரும்பு.''

சீக்ரேட் கப்பற்பாய் பாதிதிருப்பியபடி சாதக மான காற்றோடு மிதந்து சென்றது.

''நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என் பது உங்களுக்குத் தெரியும்,'' பன்டேன் கிரேயிடம் கூறினான்.

''எதற்காக?''

''உங்களைப் போலவேதான். இப்போது நான் அறிவேன். பாலத்தில் இருக்கும் போது தான் அது சரியாகத் தெரியவந்தது,'' அவன் தந்திரமாகக் கண்சிமிட்டினான். சுங்கானின் நெருப்பு அவன் புன்னகையை வெளிக் காட்டி யது.

''மேலே என்ன?'' அவன் எதைப் பற்றிச் சொல்ல வருகிறான் என்பதை உடனடியாகப் புரிந்துகொண்டு கிரே கேட்டான். ''உனக்கு என்ன தெரியும்?''

''கள்ளவாணிகம் செய்வதற்கு இது சிறந்த முறை. எந்த மாதிரியான பாய்கள் வேண்டும் என்று ஒருவர் விரும்புவதுபோல கொண்டு செல்ல முடியும். நீங்கள் ஒரு மேதை, கிரே!''

''அப்பாவி பன்டேன்!'' கோபப்படுவதா, சிரிப்பதா என்று தெரியாதபடி காப்டன் கூறி னான். ''உன்னுடைய ஊகம் புத்திசாலித்தன

மானது, ஆனால் உண்மையில் அதற்கு எந்த ஆதாரமும் இல்லை. படுக்கைக்குச் செல். நீ தவறுகிறாய் என்று நான் கூறுவதை ஏற்றுக் கொள். நான் சொன்னது போலவே சரியாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறேன்.''

தூங்குவதற்காக அவனைக் கீழே அனுப்பினான். அவர்களது போக்கைக் கண்காணித்து அமர்ந்தான். இப்போது நாம் அவனை விட்டு விலகிச் செல்வோம், ஏனெனில் தனியனாக இருக்கவே அவன் விரும்புகிறான்.

6

ஆஸ்ஸோல் தனிமையில் இருக்கிறாள்

லங்கிரேன் இரவைக் கடலில் கழித்தான்; அவன் தூங்கவுமில்லை, மீன் பிடிக்கவுமில்லை, ஆனால் நீரின் சிற்றலை வீச்சைக் கேட்டுக் கொண்டும் கருமையை உற்றுப் பார்த்துக் கொண்டும், காற்றை நோக்கி முகத்தை வைத்துக் கொண்டும், சிந்தனை செய்து கொண்டும், எந்தவித நிச்சயமற்ற போக்கு மின்றி படகைச் செலுத்தினான். வாழ்க்கை யின் மிகவும் சிரமமான நேரங்களில் அவனது ஆன்மாவுக்குச் சக்தி தருவது இது போன்ற தனிமையான கடற்பயணங்களேயன்றி, மற்ற தல்ல. அவனது உள்மன உலகின் மிகவும் மங்கலான குரல்களை ஒலிக்கச் செய்வதற்கு அவனுக்குத் தேவைப்பட்டதெல்லாம் அமைதி, அமைதி மற்றும் தனிமைதான். இந்த இரவில் அவனது சிந்தனைகள் எதிர்காலம், ஏழ்மை மற்றும் ஆஸ்ஸோல் பற்றியதாக இருந்தன. சற்று நேரமாக இருந்தாலும், அவளை விட்டு நீங்குவது என்பது அவனுக்குத் தாங்கிக் கொள்ள முடியாத துன்பமாக இருந்தது; மேலும், விலக்கி வைக்கப்பட்ட வேதனைக்குப் புத்துயிர்ப்புத் தருவதற்கு அவன் அஞ்சினான்.

ஒருவேளை, ஒரு கப்பலில் வேலை செய்த பிறகு, கபேர்னாவில், சாகாதிருக்கும் அன்புக் குரியவள் அவனுக்காகக் காத்திருப்பது என் பதை அவன் திரும்பவும் கற்பனை செய்து பார்க்கலாம் — மேலும், திரும்புகையில் உயிரற்ற எதிர்பார்ப்பின் துயரத்தோடு அவன் வீட்டை அணுகலாம். மேரி திரும்பவும் கதவு வழியாக ஒருபோதும் வரப் போவதில்லை. ஆனால் அவன் ஆஸ்ஸோலுக்குத் தேவையான எல்லா வற்றையும் கொடுக்க விரும்பினான். ஆகவே, அவளைப் பற்றிய விசாரம் எப்படி கட்டளை யிடுகிறதோ, அப்படியே நடத்தி வர வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

லங்கிரேன் திரும்பிய போது சிறுமி இன்ன மும் வீட்டில் இல்லை. அவளது காலை உலா வல்கள் தந்தையை வருத்தவில்லை; இந்த முறை, ஆயினும், அவனது எதிர்பார்ப்பில் கவலைச் சுவடு தெரிந்தது. மேலுங்கீழும் நடை போட்ட படி, திடீரென்று ஆஸ்ஸோலைப் பார்ப்பதற் காகத் திரும்பினான்; விரைவாகவும், ஓசை யின்றியும் நுழைந்த அவள், ஒரு வார்த்தை கூடப் பேசாது அவனிடம் வந்தாள். அவளது கிளர்ச்சியைப் பிரதிபலிக்கும் பார்வையின் ஒளியால் அவன் ஏறத்தாழ அச்சமுற்றுப் போ னான். அவளது இரண்டாவது உயிருரு — ஒரு மனிதனுடைய கண்கள் மட்டுமே வழமை யாகச் சான்று கூறும் உண்மையான உயிருரு — வெளிச்சத்திற்கு வந்து விட்டது போலத் தெரிந்தது. அவள் மௌனமாக இருந்த போது லங்கிரேனின் முகத்தை அவ்வளவு அதிசயமாகப்

பார்த்ததால் அவன் விரைந்து கேட்டான்:

''உனக்கு உடல் நலமில்லையா?''

அவள் உடனடியாகப் பதில் பேசவில்லை. வார்த்தைகளின் பொருள் கடைசியாக அவளது உள்புறக் காதை அடைந்த போது ஆஸ்ஸோல் திடுக்கிட்டாள், கையால் தொடப்பட்ட சுள்ளி போல, அமைதியான வெற்றிக்குரிய நீண்ட, ஒழுங்கான சிரிப்போடு சிரித்தாள். அவள் ஏதோ சொல்ல வேண்டி இருந்தது, ஆனால் எப்போதும் போல, அது எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிக் கூட அவள் நினைத்துப் பார்க்கவில்லை. அவள் சொன்னாள்:

''இல்லை, நான் நன்றாக இருக்கிறேன்... என்னை ஏன் நீங்கள் அந்த மாதிரியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். உண்மையாகத் தான், நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், ஆனால் இது அந்த மாதிரி அருமை நாளான படியால் தான். நீங்கள் எதை முடிவு செய்து இருக்கிறீர்கள்? நீங்கள் எதையோ முடிவு செய்து இருக்கிறீர்கள் என்பதை உங்களது தோற்றத்தை வைத்தே என்னால் காண முடிகிறது.''

''ஏதாகிலும் நான் முடிவு செய்திருக்கிறேனா,'' என்று கூறினான் லங்கிரேன், அவளைத் தனது மடி மீது அமர்த்திக் கொண்டு, ''நான் ஏன் அதைச் செய்கிறேன் என்பதை நீ புரிந்து கொள்வாய் என்று எனக்குத் தெரியும். நாம் வாழ்வதற்கு ஒன்று

மில்லை. நான் திரும்பவும் நீண்ட கடற்பயணம் போக மாட்டேன், ஆனால் கஸ்ஸெட்டுக்கும் லிஸ்ஸுக்கும் இடையே போகும் தபால் படகில் நான் வேலை செய்யப் போகிறேன்.''

''ஆமாம்,'' என்று அவள் தொலைவிலிருந்து கூறினாள், அவனது அக்கறைகளையும், கவலைகளையும் பகிர்ந்து கொள்ள முயன்ற போது, ஆனால் அவ்வளவு . மகிழ்ச்சியாக இருப்பதை நிறுத்த முடியாமல் திகைப்புற்றாள். ''அது துயரமிக்கது. நான் மிகவும் துணையில்லாமல் இருப்பேன். விரைவில் திரும்பி விடுங்கள்.'' இதைக் கூறியபடி, அவள் அடக்கிவைக்க முடியாத புன்னகையோடு மலர்ச்சியுற்றாள். ''சீக்கிரமாக, அன்பே, உங்களுக்காக நான் காத்திருப்பேன்,'' என்றாள்.

அவளது முகத்தை உள்ளங்கைகளால் பற்றிக் கொண்டு, தன் பக்கமாகத் திருப்பி, ''ஆஸ்ஸோல்! என்ன நடந்ததென்று என்னிடம் கூறு,'' என்றான் லங்கிரேன்.

அவனது கவலைகளைத் தான் துரத்தியாக வேண்டும் என அவள் உணர்ந்தாள், தனது பெருமகிழ்ச்சியைக் கடந்து ஆழ்ந்த கவனமிக்கவளாக மாறினாள். அவளது கண்கள் மட்டுமே இன்னமும் ஒரு புதிய ஒளியைப் பளிச்சிட்டன.

''நீங்கள் விசித்திரமாய் இருக்கிறீர்கள். ஒன்றுமே இல்லை. நான் கொட்டைகள் சேகரித்துக் கொண்டிருந்தேன்.''

லங்கிரேன் தனது சொந்தச் சிந்தனைகளில்

ஆழ்ந்து போய் இருக்கா விட்டால், இதை உண்மையாகவே நம்பி இருக்க மாட்டான். அவர்களது உரையாடல் பிறகு மெய்நிகழ்வு பற்றியதாகவும், விவரமானதாகவும் மாறியது. தனக்குத் தேவைப்படுவனவற்றை விளக்கி, பையை மூட்டை கட்டும்படி மாலுமி தன் மகளிடம் சொல்லி, அவளுக்காகச் சில அறிவுரைகளையும் விவரித்துக் கூறினான்:

''சுமார் பத்து நாட்களில் நான் திரும்பி விடுவேன். எனது துப்பாக்கியை அடகு வைத்து விட்டு நீ வீட்டிலேயே இரு. யாராவது உன்னைத் துன்புறுத்தினால், 'லங்கிரேன் விரைவிலேயே திரும்பி வருவார்,' என்று சொல். என்னைப் பற்றிச் சிந்திக்கவோ, கவலைப்படவோ வேண்டாம்: எனக்கு தீங்கேதுவும் நேர்ந்து விடாது.''

பிறகு தனது சிற்றுண்டியை அவன் முடித்துக் கொண்டு அவளை அழுத்தமாக முத்தமிட்டு, தனது தோள் மீது பையைத் தொங்க விட்டுக் கொண்டு, நகரத்திற்குச் செல்லும் சாலைக்கு நடந்தான். வளைவு திரும்பும் வரை ஆஸ்ஸோல் அவனைத் தொடர்ந்து பார்த்து, பிறகு மீண்டும் வீட்டிற்குள் சென்று விட்டாள். செய்வதற்கு வீட்டு வேலைகள் அநேகம் அவளுக்கு இருந்தன, ஆனால் அவை எல்லாவற்றையும் மறந்து விட்டாள். ஓரளவு ஆச்சரியத்தால் உருவாகிய அக்கறையுடன், அந்த வீட்டிற்கு ஏற்கெனவே வந்த ஓர் அந்நியளைப் போல அவள் சுற்றிப்பார்த்தாள். நீண்ட காலத்தை முற்றிலும் மாறுபட்ட

வாழ்க்கையில் செலவிட்ட ஒருவர் திரும்பவும் வந்து பார்த்த பிறந்த இடத்தைப் போல இப்போது அவ்வீடு தோன்றியது. ஆனால் தனது இந்த மறுதலிப்பில் ஏதோ ஒவ் வாத ஒன்று இருக்கிறது என்பதை அவள் உணர்ந்தாள். லங்கிரேன் தனது பொம்மை களைச் செய்த மேசையில் அமர்ந்தாள். ஒரு படகின் பின்பகுதிக்குச் சுக்கானைப் பசை கொண்டு ஒட்டவைக்க முயன்றாள்; இந்தப் பொருள்களை அவள் பார்த்த பொழுது, அவைகளைப் பெரியதாகவும், உண்மையாக வும் கற்பனை செய்தாள். அன்று காலையில் நடந்ததெல்லாம் அவளுக்குள்ளாக நடுங்குகின்ற உணர்ச்சியோடு மீள எழுந்தன. சூரியனைப் போல பெரிதான தங்க மோதிரம் ஒன்று கடலுக்குக் குறுக்காக வந்து அவளது காலடி யில் விழுந்தது.

அவளால் வீட்டிற்குள் தங்கி இருக்க முடியவில்லை, வீட்டை விட்டு வெளியேறி லிஸுக்குப் புறப்பட்டாள். அங்கே அவள் செய்வதற்கு எதுவுமே இல்லை. அவள் ஏன் போய்க் கொண்டிருக்கிறாள் என்பதும் அவ ளுக்குத் தெரியாததாலும் அவளால் போகாமல் இருக்க முடியாது. வழியில் பாதை கேட்ட ஒரு மனிதனைச் சந்தித்தாள்; அவனிடம் எல்லா வற்றையும் விவரித்து அந்த நிகழ்ச்சியை உடனடியாக மறந்து விட்டாள்.

அவளது அன்பான கவனிப்பை முழுமை யாக சுவீகரித்துக் கொண்ட ஒரு பறவையை அவள் எடுத்துச் சென்றிருந்தது போல, நீண்ட

சாலையைக் கவனிக்காமல் நகரம் வரை சென்று வந்தாள். நகரை நெருங்கியதும், அதனது பெரிய வட்டத்திலிருந்தும் எழுந்த இரைச்சலால் அவள் ஓரளவுக்குக் கவனக்குறை வுற்றாள், ஆனால் முன்பே அவளுக்கு நடுக்கத் தையும், அச்சத்தையும் ஏற்படுத்தி அவளை அதிகமாகப் பேசாத கோழையாக்கிய அது இப்போதோ அவளை அவ்வளவுக்கு வசத்தில் வைத்திருக்கவில்லை. அவள் அதற்கு எதிர்த்து நின்றாள். வட்டமான மரச்சாலை நெடுகிலும் அவள் மெதுவாகக் கடந்து சென்றாள், மரங் களின் நீல வண்ண நிழல்களைக் கடந்தபடியும், தன்னைக் கடந்து சென்றவர்களை நல்லெண் ணத்தோடும், சுய உணர்வு இல்லாமல் உற்றுப் பார்த்தபடியும், மெதுவாக நம்பிக்கையோடு நடந்தாள். அவர்களுடைய பார்வைக்கு வழமை யற்ற தோற்றத்தைக் கொண்டு சிந்தனை யில் ஆழ்ந்தவளாகக் கடந்து செல்லும் ஓர் அந்நியளை ஒரு நாளில் கூர்ந்த பார்வை யாளர் இங்கே கவனித்ததுண்டு. சதுக்கத்தில், நீரூற்றினின்றும் ஓடும் நீரை நோக்கி அவள் கையை நீட்டி சிதறுகின்ற துளிகளை விரல் களால் தொட்டாள்; பிறகு, அமர்ந்து, சற்று நேரம் ஓய்வெடுத்து, காட்டிற்குச் செல் லும் சாலைக்குத் திரும்பினாள். புத்தம்புது உணர்வுகளோடு, பகற் பொழுதின் பிரதிபலிக் கும் கண்ணாடிகளை அமைதியான நிழல் களுக்காகப் பரிமாறிக் கொண்ட மாலைப் பொழுதின் நீரோடையைப் போல், அமை தியான மனநிலையில் அவள் பயணம் செய்

தாள். கிராமத்தை நெருங்கிய போது, தனது கூடை பூங்கொத்துகளைத் தளிர்விடுவதாகக் கற்பனை செய்து கொண்ட அதே நிலக்கரி விற்பவனை அவள் கண்டாள், தனது வண்டிக்கு அருகில் புகைக்கரிக் கறையாலும், அழுக்காலும் மூடப்பட்ட பாரா முகமாயிருக்கின்ற இரண்டு அந்நிய மனிதர்களுடன் அவன் நின்று கொண்டிருந்தான். ஆஸ்ஸோல் பெரிதும் மகிழ்ச்சியுற்றாள்.

''வணக்கம், பிலிப். இங்கு நீங்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை, ஆஸ்ஸோல். ஒரு சக்கரம் பிடி தளர்ந்து போச்சு. அதைச் சரி செய்தேன். இப்ப புகைப் பிடித்தபடி எனது நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கேன். நீ எங்கிருந்தாய்?''

ஆஸ்ஸோல் பதில் பேசவில்லை.

''பிலிப், நான் உங்களைப் பெரிதும் விரும்புகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். அதனால் தான் இதைச் சொல்வது உங்களிடம் மட்டுந்தான். நான் சீக்கிரமே போய்விடப் போகிறேன். அநேகமாக நான் நிரந்தரமாகப் போய் விடுவேன். ஆயினும் எவரிடமும் சொல்ல வேண்டாம்.''

''**நீயா** போக விரும்புறாய்? எங்கே போக?'' நிலக்கரி விற்பவன் மிகவும் வியப்புற்று வாயைத் திறக்க அவனது தாடியை இன்னும் நீளமுடையதாக்கிற்று.

''எனக்குத் தெரியாது.'' மரம் வெட்டப்பட்ட வெளியையும், எல்ம் மரத்திற்கு அடியில்

நின்ற வண்டியையும், மாலைப் பொழுதின் இளஞ்சிவப்பு நிற வெளிச்சத்தில் பச்சைப் பசேலென இருந்த புல்வெளியையும், கடுகடுப்பான நிலக்கரி ஆட்களையும் அவள் மெதுவாகச் சுற்றிப்பார்த்தாள். சற்று நேரம் சிந்தித்த பிறகு மேலும் தொடர்ந்தாள்: ''எனக்குத் தெரியாது. பொழுதென்ன, மணியென்ன என்பதெல்லாங் கூட எனக்குத் தெரியாது. எங்கே போகும் என்பதும் தெரியாது. இதற்கு மேலும் என்னால் கூற முடியாது. இதன் காரணமாகத்தான் விடைபெற்றுக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அடிக்கடி எனக்குச் சவாரி தந்திருக்கிறீர்கள்.''

அவனது பெரிய, நிலக்கரிக் கறை படிந்த கருத்த கையை எடுத்துக் கைகுலுக்க முயன் றாள். தொழிலாளியின் முகம் அழுத்தமான முறுவலிப்பைக் காட்டியது. சிறுமி தலை யசைத்து, திரும்பி நடந்து போனாள். பிலிப் பும் அவனது நண்பர்களும் தலைகளைத் திருப்பிப் பார்ப்பதற்கு முன்பாகவே அவள் மறைந்து விட்டாள்.

''இது ஆச்சரியமா, இல்லை?'' நிலக்கரி விற்பவன் கூறினான். ''அதை எப்படி அறிந்து கொள்வது? இன்று அவளிடத்தில் ஏதோ ஒன்று... வேடிக்கை, என்றே நான் நினைக் கிறேன்.''

''நீ சொல்வது சரி,'' என்று இரண்டாவது மனிதன் ஒப்புக்கொண்டான். ''அவள் வெறு மனே சொல்லிக் கிட்டிருந்தாளா, நம்மை நம்ப வைக்க முயன்றாளா என்பதை

உங்களால் கூற முடியாது. இது நம்முடைய காரியமல்ல.''

''இது நம்முடைய காரியமல்ல,'' என்றான் மூன்றாமவன், பெரு மூச்சு விட்ட போது.

பிறகு அவர்கள் எல்லாரும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். பாறை நிறைந்த சாலைக்கு மேலாக சக்கரங்கள் கடகடக்க புழுதி மேகத்தில் இவ் வண்டி மறைந்து போயிற்று.

7

செந்நிற 'சீக்ரெட்'

அது காலைப் பொழுதின் வெண்ணிறமான நேரம்; பெருங்காட்டில் விநோதமான பொய்த் தோற்றங்கள் நிறைந்த மங்கலான பனிமூட்டம் இருந்தது. தன்னுடைய நெகிடியை விட்டு சற்று முன்னர் வெளியேறியிருந்த ஒரு பெயரில் லாத வேடுவன், நதி நெடுகத் தனது பாதை யை வகுத்துப் போய்க் கொண்டிருந்தான்; மரங்களுக்கு இடைவெளியில் நதியின் காற்று வெறுமைகளின் வெளிச்சம் மினுமினுத்தது, ஆனால் மலைகளை நோக்கி முன்னேறிச் சென்றிருந்த ஒரு கரடியின் புத்தம்புது தடங் களைப் பார்த்ததால் சுறுசுறுப்பு மிகுந்த அந்த வேடுவன் ஆற்றை நெருங்கவில்லை.

எச்சரிக்கை தருவது போல எதிர்பாராத முறையில் ஒரு திடீர் ஓசையானது மரங்களின் வழியாக விரைந்து வந்தது; அது கிளாரினட் இசைப்பாட்டாக வந்துகொண்டிருந்தது. மேல் தளத்திற்கு வந்த இசைவாணன் சோகத் தையும் துயரத்தையும் திரும்பத்திரும்பக் கூறும் ஓர் இசைப் பகுதியை வாசித்தான். துன் பத்தை மறைக்கின்ற குரல் போல அந்த ஒலி நடுங்கிற்று; அது எழுந்தது, சோகமான அதிர்

வொலியோடு முறுவலித்தது, எதிர்பாராதபடி நின்றது. ஒரு தூரத்து எதிரொலியானது அதே இன்னிசையைத் தெளிவில்லாதபடி முனங்கியது.

ஓர் உடைந்த குச்சியால் பாதை வகுத்துக் கொண்டு வேடுவன் நீரை நோக்கிச் சென்றான். பனிமூட்டம் இன்னமும் மேலே போகவில்லை; நீரை விட்டு மெதுவாகத் திரும்பிய ஒரு பெரிய கப்பலின் நிழல் வடிவம் அதில் அணைந்து போய்விட்டது. அதனது மடிக்கப்பட்ட கடற்பாய்கள் உயிர் பெற்றன, தோரணங்களாகத் தொங்கிக் கொண்டிருந்தன, விரித்தபடியே வந்து கொண்டிருந்த அவை தனது பெரிய மடிப்புகளால் கப்பற்மரங்களை மறைத்துக் கொண்டிருந்தன. குரல்களையும் காலடி ஓசைகளையும் அவனால் கேட்க முடிந்தது. கரையிலிருந்து வந்த காற்று, வீசப் பார்த்தபடி, பாய்களைச் சோம்பலாகத் தொட்டது; இறுதியாக, சூரியனின் வெக்கை தேவையான விளைவை ஏற்படுத்தியது; காற்றின் அழுத்தம் அதிகமானது, பனிமூட்டத்தை விலக்கியது, ரோஜாக்கள் நிறைந்த செந்நிற வடிவங்களில் பரிணமிக்கும்படி செய்தது. வெண்ணிற கப்பற் பாய்மரங்கள், தளவாடங்கள் நெடுகிலும் செந்நிற நிழல்கள் நழுவிவந்தன, ஒவ்வொன்றும் வெள்ளையாகவே இருந்தன, நன்கு விரிக்கப்பட்ட கப்பற்பாய்களைத் தவிர, அவற்றின் வர்ணமானது உண்மையான மகிழ்ச்சியின் வர்ணமாக இருந்தது.

கரையினின்றும் பார்த்த வேடுவன், தான் என்ன பார்த்துக் கொண்டிருந்தோம் என்பது

உறுதியானது, தவிர மற்றதல்ல என்ற முடிவுக்குக் கடைசியில் வருகின்ற வரை தனது கண்களைச் சற்று நேரம் அழுத்தித் தேய்த்துக் கொண்டே இருந்தான். ஒரு வளைவு திரும்பி பின் கப்பல் மறைந்தது, ஆனாலும் அதைப் பார்த்துக் கொண்டே அவன் அங்கேயே நிலையாக நின்றான்; பிறகு, தோள்களைக் குலுக்கிக் கொண்டு, தனது கரடியைப் பின்தொடர்ந்து சென்றான்.

ஆற்றின் நெடுகிலும் சீக்ரெட் மிதந்து சென்ற போது, கிரே தானே கப்பலைச் செலுத்தினான். சுக்கானை மாலுமியிடம் நம்பி ஒப்படைக்கவில்லை, ஏனெனில் ஆழமில்லாத இடங்களைக் கண்டு அஞ்சினான். பன்டேன் அவனுக்கு அருகிலே அமர்ந்திருந்தான், நன்கு மழிக்கப்பட்ட முகத்துடனும், பிணங்கிய படியும், ஒரு புதிய முறுக்கிய கம்பளி நூல் சீருடையும், பளபளப்பான புதிய குல்லாயும் அணிந்து கொண்டிருந்தான். முன்னர் போலவே, செந்நிறச் சிறப்புக்கும் கிரேயின் நோக்கத்திற்கும் இடையே எந்தத் தொடர்பையும் காணவில்லை.

''இப்போது,'' கிரே சொன்னான், ''என்னுடைய கப்பற்பாய்கள் செந்தழலாகப் பிரகாசிக்கும் போதும், காற்று இதமாக வீசும் போதும், எனது உள்ளம் நிறைந்த மகிழ்ச்சி, அப்பத்தைக் கண்ட யானையின் மகிழ்ச்சியை விட அதிகமானதாக இருந்த போதும் நான் லிஸில் வாக்களித்தபடி எனது எண்ணங்களை உனக்கு இணைக்கவைக்க முயல்வேன். நான்

உன்னை எழுச்சியற்ற கூர்மதியாளன் என்றோ நெகிழ்வற்றவன் என்றோ கருதவில்லை என் பதைத் தயவு செய்து மனத்தில் வைத்துக் கொள்; நீ ஓர் எடுத்துக்காட்டான மாலுமி என்பது மிக முக்கியமானது. ஆனால் நீ, எண்ணற்ற மற்ற பிறரைப் போல, வாழ்க் கையின் அடர்த்தியான கண்ணாடி வழியா கவே எல்லாவித எளிமையான உண்மைகளின் குரல்களையும் கேட்கிறாய்; அவை கத்துகின் றன, ஆனால் அவற்றை நீ கேட்க மாட்டாய். நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது அழகானதும் அடைய முடியாததும் பற்றிய பழங்கால கருத்தானதாக, உண்மை யிலே, ஒரு பிக்னிக் போலத் தோன்றுகிறது, மேலும் என்ன, உண்மையிலேயே, பிக்னிக் போல அடையக்கூடியதும் சாத்தியமானதும் தான். உனது பார்வையில் நான் செல்கிற வழியைத் தவிர, **வேறுவழியில் திருமணம் செய்யக் கூடாத** பெண்ணை நீ சீக்கிரமே காண்பாய்.''

நாம் மிக நன்றாக அறிந்ததை அவன் சுருக்கமாகத் தெரிவித்து, இப்படியாக முடித் தான்:

''விதி, மன உறுதி மற்றும் மனித இயல்பு ஆகியன எங்ஙனம் நெருக்கமாக இங்கே கோத்துப் பின்னப்பட்டிருக்கிறது என்பதை நீ பார்க்கிறாய். எனக்காகக் காத்துக் கொண் டிருக்கும், எனக்காக மட்டுமே காத்திருக்க முடியும் ஒருத்தியிடம் நான் போய்க் கொண் டிருக்கிறேன்; அதே வேளை நான் அவளைத்

தவிர வேறு எவரையும் விரும்பவில்லை, ஒருவகையில் ஒரு சாதாரண உண்மையை நான் புரிந்து கொண்டது காரணமாக இருக்கலாம், அவளுக்கு நன்றி: அதிசயங்கள் என்பனவற்றை உண்மையாகுமாறு நீயே செய்ய வேண்டும். ஒரு மனிதன் காப்பாற்றி வைத்திருக்கிற செப்புக் காசைப் பெறுவதற்கு அதிகமான முக்கியத்துவத்தைக் காட்டும் போது, அவனுக்கு அந்தக் காசைக் கொடுப்பது அவ்வளவு கடினமல்ல, ஆனால், ஓர் ஆர்வமிக்க செடியின் — அற்புதத்தின் — விதையை ஆன்மா பேணிவளர்க்கின்ற போது நீ முடிந்தால் இந்த அற்புதத்தை உண்மையாக்கிக் காட்டு.

''இந்த மனிதன் புதிய ஆன்மா பெறுவான், நீயுங் கூடத்தான். எப்போது சிறை வார்டன் தன்னுடைய சொந்த விருப்பத்தால், ஒரு கைதியை விடுதலை செய்கிறானோ, கோடிச் செல்வர் ஒருவர் தனது எழுத்தனுக்கு நாட்டுப்புற மனையையும், பாடகியையும், பெட்டகத்தையும் கொடுக்கிறானோ, ஓர் அதிர்ஷ்டமற்ற குதிரை தன்னைக் கடந்து போவதற்காகத் தனது குதிரையைப் பின்னுக்குப் பிடித்து இழுத்து ஒரு குதிரையோட்டி வேகத்தைக் குறைக்கச் செய்கிறானோ, அப்போது ஒவ்வொருவருமே இது எவ்வளவு மகிழ்ச்சியானது என்பதையும் விவரிக்க முடியாத அளவுக்கு அருமையானது என்பதையும் புரிந்து கொள்வார்கள். ஆனால் எந்த வகையிலும் குறையாத பரிமாணம் கொண்ட அற்புதங்கள் இருக்

கின்றன: ஒரு புன்னகை, மகிழ்ச்சி, மன்னிப்பு மற்றும்... பொருத்தமாகப் பேசப்படும், தேவையுள்ள சொல். ஒருவனுக்கு இது கைவரப் பெற்றிருந்தது என்றால் எல்லாமே கைவரப் பெற்றிருந்ததுதான். என்னைப் பொருத்தமட்டில், எங்களது தொடக்கம் — ஆஸ்ஸோலினுடையதும் என்னுடையதும் — செந்நிறப் பாய் மரங்களின் ஒளியில் எங்களுக்காக எப்போதுமே நிலைத்திருக்கும், காதல் என்ன என்பதைப் புரிந்து கொண்ட உள்ளத்தின் ஆழத்தால் அது உருவாக்கப்பட்டது. நீ என்னைப் புரிந்து கொண்டிருக்கிறாயா?''

''ஆமாம், காப்டன்.'' பன்டேன் தொண்டையைச் சரி செய்து கொண்டான், நன்கு மடிக்கப்பட்ட, தூய்மையான கைக்குட்டையால் மீசையைத் துடைத்துக் கொண்டான். ''எல்லாவற்றையும் நான் புரிந்து கொண்டேன். நீங்கள் எனது உள்ளத்தைத் தொட்டு விட்டீர்கள். நேற்று ஒரு வாளியை மூழ்கடித்த நிக்ஸை நான் ஏசியதற்கு வருத்தம் தெரிவிப்பதற்காக நான் கீழே செல்லப் போகிறேன். அவனுக்கு நான் கொஞ்சம் புகையிலை கொடுப்பேன் — சீட்டாட்டத்தின் போது அவன் புகையிலையை இழந்து விட்டான்.''

தனது சொற்கள் இத்தனை விரைவாக அநுபவபூர்வப் பாதிப்பைப் பெற்றதால் ஒரு வகையில் அதிசயித்துப்போன கிரே பதில் பேசுவதற்கு முன்னரே, ஏணியில் சென்று கடகடக்க விட்ட பன்டேன் தொலைவில் நிம்மதிப் பெரு மூச்சு விட்டான். பின்னுக்குத்

திரும்பி மேலாக கிரே உற்றுப்பார்த்தான்; செந்நிறக் கடற்பாய்கள் அவனுக்கு மேலாக அமைதியாக அலைபாய்ந்தன; அவற்றின் வெட்டுவாய்களில் சிவப்புக் கலந்த நீலநிறப் புகை பிரகாசித்தது. சீக்ரெட் கடற்கரை யிலிருந்து தொலைவிற்கு நகர்ந்து கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. கிரேயினு டைய ஒலிக்கின்ற ஆன்மாவிலே எந்தச் சந்தே கமும் இல்லை—எந்த ஆர்வமும் பொடிப் பொடியாகவில்லை, எந்தச் சிறிய தொல் லைகளும் கிளர்ந்தெழவில்லை; ஒரு பொன் னுலகு இலக்கை நோக்கி, அமைதியாகச் செல்லும் கலம் போல, அவன் முழுமையான ஈடுபாடு கொண்டிருந்தான்; அவன் மனம், வார்த்தைகளை முன்னுணர்ந்து தந்திருக் குமே, அத்தகைய சிந்தனைகளால் நிறைந் திருந்தது.

நண்பகலுக்கு தொடுவானத்திலே ஒரு காவற் கப்பலினுடைய புகைக் கற்றை தோன்றியது. அந்தக் கப்பல் தனது போக்கை மாற்றிக் கொண்டு, அரை மைல் தூரத்திலிருந்து முன் னால் 'நிற்கப் போகும்!' அடையாளத்தை உயர்த்தியது.

''அவர்கள் நம்மைக் குண்டு வீசித்தாக்க மாட்டார்கள், நண்பர்களே,'' என்று கிரே கூறினான். ''கவலைப்படாதீர்கள்! அவர்கள் வெறுமனே தங்களது கண்களையே நம்பவில் லை.''

கப்பலை நிறுத்துவதற்கு அவன் உத்தர விட்டான். நெருப்புப் பற்றியது போல

உரக்கக் கத்திக் கொண்ட பன்டேன் காற்றி யினின்றும் விலக்கி சீக்ரெட்டைக் கொண்டு வந்தான்; கப்பல் நின்றது, அதே வேளை காவற்கப்பலினின்றும் குழுவினரும் வெள்ளைக் கையுறை அணிந்த ஒரு லெப்டினெண்டும் கொண்ட ஒரு நீராவிப்படகு இவர்களை நோக்கி விரைந்து வந்தது; லெப்டினெண்ட், கப்பலின் மீது ஏறிக்கொண்டு, வியப்போடு சுற்றிலும் பார்த்து, கிரேயுடன் தனது அறைக் குள்ளாக நுழைந்தான், அதினின்றும் ஒரு மணி நேரங்கழித்து அவன் வெளியேறினான், தற்போதுதான் பதவி உயர்வு பெற்றவனைப் போல புன்னகையுடன், தனது கையை அருவருப்பாக அலைத்தபடி, நீல நிற காவற் கப்பலுக்குத் திரும்பினான். கபடமற்ற பன் டேனுடன் பெற்றதைக் காட்டிலும் இந்த முறை கிரே வெளிப்படையாகவே வெற்றி ஈட்டியது தெரிந்தது, ஆதலால் சற்று இடை வெளிக்குப் பிறகு காவற்கப்பல் தொடுவானத் தை வேட்டு வரிசை வணக்க முறை ஒன்றால் கிழித்து விட்டுச் சென்றது. அதனின்றும் கிளம்பிய சுருள் சுருளான புகைக் காற்றும் முழு வதும் பரந்து பரவி, தொலைவில் கிடந்த அமைதி யான நீருக்கு மேலாகவும் பரவிச் சென்றது. காவற்கப்பலிலே நாள் முழுக்க இனம் புரியாத அரைகுறை விழாக் கோலம் தென்பட்டது; அந்த மனநிலையானது நிச்சயம் அதிகாரபூர்வ மானது இல்லை, அது வியப்பார்வத்தால் ஏற் பட்டது — காதல் அடையாளத்தில், எங்கு பார்த் தாலும் அதுபற்றிய பேச்சாகவே இருந்தது,

—அதிகாரிகளினுடைய உணவுக் கூடத்தினின் றும் எஞ்சின் அறை வரை; டார்ப்பீடோ பிரி வின் காவல்காரன், கடந்து சென்ற ஒரு மாலு மியிடம் வினவினான்:

''நீ எங்ஙனம் திருமணம் செய்து கொண் டாய், டாம்?''

''அவள் சன்னல் வழியாகத் தப்பித்து ஓட முயன்ற போது பாவாடையைப் பற்றி அவ ளைப் பிடித்தேன்,'' என்றான் டாம், தனது மீசையைப் பெருமையோடு முறுக்கிவிட்டுக் கொண்டு.

சிறிது நேரத்திற்கு, வெறுங்கடலிலே கடற் கரைக்கு அப்பால் சீக்ரெட் பயணம் செய்தது கொண்டிருந்தது; மதிய வாக்கில் அவர்கள் தொலைவிலுள்ள கரையைக் கண்டார்கள். தொலைநோக்கியை உயர்த்தி கபேர்னாவை உற்றுப்பார்த்தான் கிரே. கூரைகளின் வரிசை கள் இல்லாதிருந்தால், வீடுகளில் ஒன்றின் சன் னலருகே புத்தகத்தை வைத்து, ஆஸ்ஸோல் உட்கார்ந்து கொண்டிருப்பதை அவன் பார்த் திருக்கக் கூடும். அவள் படித்துக் கொண்டிருந் தாள்; பக்கம் நெடுகிலும் ஒரு பச்சை நிற சிறு வண்டானது ஊர்ந்து கொண்டிருந்தது, நிறுத்திக் கொண்டும், முன்னங்கால்களை உயர்த்திக் கொண்டும், சுதந்திரமாகவும், பழக்கியது போலவும் இருந்தது. ஏற்கெனவே அது இரண்டு முறை சன்னல் சட்டத்தின் மீது சீறிப்பாய்ந்தது, அங்கிருந்து அது நம்பிக்கை யோடு, அச்சமின்றி, ஏதோ சொல்ல விரும்பி யது போலத் திரும்பவும் தோன்றியிருக்கிறது.

பக்கத்தின் மூலையைப் பிடித்துக் கொண் டிருந்த அந்தப் பெண்ணினுடைய கையில் ஏறு வதில் இந்த முறை எப்படியோ அது ஒரு வழியாக வெற்றி கண்டது; இங்கே 'பார்' என்ற வார்த்தையின் மேல் அது நகராமல் நின் றது, ஒரு புதிய பனிப்புயலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போலத் தயங்கியது; உண்மை யில், தொல்லையிலிருந்து அபூர்வமாகத்தான் தப்பியது, ஏனெனில் ஆஸ்ஸோல் ஏற்கெனவே வியந்து கூறிவிட்டாள்: ''ஓ! அது... அற்ப மூட் டைப் பூச்சி!'' —பார்வையாளனை நேரடியாகப் புல்லை நோக்கித் தூக்கி எறிய அவள் தயா ராக இருந்தாள். ஆனால் தனது கண்களை ஒரு கூரையினின்றும் மற்றொன்றிற்குத் தற்செய லாகத் திருப்புகின்ற போது, தெருவின் கடைசி யில் தெரிந்த நீல வண்ணக் கடலிலே, செந் நிறக் கடற்பாய்களுடன் கூடிய ஒரு பொன் னிறக் கப்பலைக் காணுகின்ற வாய்ப்பு அவ ளுக்கு ஏற்பட்டது.

உடலைக் குலுக்கிக் கொண்டு, பின்னுக்குச் சாய்ந்து கிளர்ச்சியற்றுப் போனாள்; பிறகு அவள் துள்ளிக் குதித்து, மயக்கத்திலே மூழ்கிக் கொண்டிருந்த இதயத்தோடு, உள் ளெழுந்த அதிர்ச்சியால் ஏற்பட்ட அடக்க முடியாத கண்ணீரைச் சிந்தினாள். இதற் கிடையே, சீக்ரெட் ஒரு சிறிய முனையைச் சுற்றிக்கொண்டு வந்தது, அதனது இடப் பக்கம் கடற்கரையை நோக்கி இருந்தபோது; நீல வண்ண உள்துளைக்கு மேலாக இசை மெல் லொலி அலை மிதந்து வந்து கொண்டிருந்தது,

செந்நிறப் பட்டு கடற்பாய்களுக்குக் கீழே வெண் தளத்திலிருந்து வந்து கொண்டிருந்தது; மிகவும் புகழ்பெற்ற வார்த்தைகளினால் அவ்வளவு வெற்றிகரமாக அமையாத இசைப் பாடல் ஒன்றைக் கொண்டு வந்தது: ''நிரப்புங்கள், உங்கள் கண்ணாடிக் குவளைகளை நிரப்புங்கள் — காதலிப்பதற்காக நாம் பருகுவோம்...'' அதனது எளிமையில், மகிழ்ச்சி அடைந்த கிளர்ச்சி ஏற்பட்டு ஊடுருவிப் பாய்ந்தது.

தான் எங்ஙனம் வீட்டை விட்டுப் புறப்பட்டாள் என்பதைப் பொருட்படுத்தாதபடி, கடலை நோக்கி ஆஸ்ஸோல் ஓடினாள், தடுக்க இயலாத நிகழ்ச்சிகளின் காற்றால் பிடித்துச் செலுத்தப்பட்டபோது; முதலாவது முனையிலேயே நின்றாள், ஏறத்தாழ வலிமையை இழந்து போன அவளது முழங்கால்கள் பின்னின, மூச்சு ஏக்கத்தோடு வெளிவந்தது, உணர்வு ஒரு நூலிழையில் தொங்கியது. மனவுறுதியை இழந்து கொண்டிருக்கிற அச்சம் அவளிடம் ஒரு புறமிருக்க, அவள் காலைப் பதித்து மனத்தைத் தேற்றிக் கொண்டாள், மேலே ஓடினாள். அவ்வப்பொழுது ஒரு கூரையோ, வேலியோ செந்நிறக் கடற்பாய்களைப் பார்வையினின்றும் மறைக்கும்; அப்போது, ஏதோ ஒரு சாதாரண கானல் போல அவை மறைந்து போயிற்று என்ற அச்சத்தோடு வேதனைப்படுத்துகின்ற தடையைக் கடப்பதற்காக அவள் விரைந்து ஓடுவாள், கப்பலைத் திரும்பவும் கண்டு, நிம்மதிப் பெரு

மூச்சை விடுவதற்காக நின்று விடுவாள்.

இதற்கிடையே, பிரபலமான நிலநடுக்கங்களால் ஏற்பட்ட விளைவுகளோடு ஒப்பிடக் கூடிய அளவுக்கு, கபேர்னாவில் ஒருவிதக் குழப்பம், ஒருவிதப் பெருங்கூச்சல், ஒருவிதப் பரபரப்பு ஏற்பட்டது. இந்தக் கடற்கரையை இதற்கு முன்னர் இதுபோன்ற ஒரு பெரிய கப்பல் நெருங்கி வந்ததில்லை; அக்கப்பலுக்கு, பழிப்புக்காட்டுவது போல அமைக்கப்பட்டதாக, அந்தக் கப்பற்பாய்கள் இருந்தன; எல்லாச் சட்டங்களையும், நிதான அறிவினையும் மறுத்த குற்றமின்மையுடன் இப்போது அவை பிரகாசமாகப் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் கடற்கரையை நோக்கித் தாறுமாறாக ஓடிக் கொண்டிருந்தார்கள்; வீடுகளுக்குள்ளாக இருந்தவர்கள் வேலிகளைத் தாண்டிச் செல்லும் படியாக உரத்துக் கூச்சல் போட்டார்கள், ஒருவரோடு ஒருவர் முட்டி மோதிக் கொண்டார்கள், ஊளையிட்டார்கள், உருண்டு விழுந்தார்கள்; வெகு சீக்கிரத்திலே நீரின் விளிம்பில் ஒரு பெருங்கூட்டம் கூடியிருந்தது, இக்கூட்டத்திற்குள்ளாக ஆஸ்ஸோல் விரைந்தாள்.

அவள் அங்கு இல்லாதவரை, அவளது பெயரைப் படபடப்புடனும், முறைப்புடனும், வெறுக்கத்தக்க அச்சத்துடனும் சுற்றிச் சுழற்றினார்கள். பெரும் பகுதிப் பேச்சை ஆண்களே செய்தார்கள்; இடி முழக்கத்தால் திகைத்துப் போன பெண்கள் மூச்சுத் திணறியபடி

தேம்பினார்கள், பாம்பைப் போன்று 'உஸ்' ஸென்று ஒலி கிளப்பினார்கள், ஆனால் ஒருத்தி வம்பளக்கத் தொடங்கினாள் — தலையில் நஞ்சு ஏறியது. ஆஸ்ஸோல் அங்கே தோன்றிய அந்தக் கணமே ஒவ்வொருவரும் மௌனமாகிப் போனார்கள், அச்சத்தால் அவளிடமிருந்து விலகிச் சென்றார்கள்; சுடு மணலின் காலியான நிலப்பரப்பில் அவள் தன்னந்தனியளாக நின்றாள், தடுமாற்ற நிலையில், வெட்கமும் மகிழ்ச்சியுமாக, அவளது அற்புதத்தைக் காட்டிலும் எந்தவகையிலும் குறையாத செந்நிற முகத்தோடு, உயரமான கப்பலை நோக்கி ஆதரவற்றவளாகத் கைகளை நீட்டிக் கொண்டிருந்தாள்.

வெயிலில் காய்ந்து கறுத்த துடுப்புப் போடும் ஆட்களால் செலுத்தப்பட்ட ஒரு படகு கப்பலினின்றும் பிரிந்தது; அவர்களிடையே, அவள் எப்போதோ நினைத்தபடி, தனது இளமைப் பருவத்திலிருந்தே அறிந்து தெளிவில்லாது நினைவில் வைத்திருந்தாளே, அதே மனிதன் நின்றிருந்தான். மகிழ்ச்சியும், அழைக்கின்ற அடையாளமும் கூடிய புன்முறுவலோடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் எஞ்சி நின்ற அற்பத்தனமான ஆயிரக் கணக்கான அச்சங்கள் ஆஸ்ஸோலைப் பிடித்தன; ஒவ்வொன்றுக்கும் சாவு பயம் கொண்டு — ஒரு தவறு, புரிந்து கொள்ளாமை, ஒரு விநோதமான அல்லது தீய தடை — ஏற்ற இறக்கத்தோடு வீசிய அலைகளில் இடுப்பளவு ஆழ்ந்து அவள் உரக்கக் கத்தினாள்:

''நான் இங்கிருக்கிறேன்! நான் இங்கிருக்கிறேன்! அது நான் தான்!''

அப்போது ஸிம்மர் வில்லை உயர்த்தினான் — அதே இன்னிசை கூட்டத்தினரின் நரம்புகளைத் தொட்டது, ஆனால் இந்த முறை அது வாய்விட்ட குரலாக, இணைந்துபாடும் வெற்றி கீதமாக இருந்தது. மன எழுச்சியினால், மேகங்களினும் அலைகளினும் இயக்கத்தால், நீரின் மினுமினுப்பால், என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அப் பெண் அறிந்து கொள்ளச் சிரமப்பட்டாள்: அவள் தானும், கப்பல் அல்லது துடுப்புப் படகு — ஒவ்வொன்றும் நகர்ந்துகொண்டும், சுழன்று கொண்டும், விழுந்துகொண்டும் இருந்தன.

ஆனால் அவளுக்கு அண்மையில் ஒரு துடுப்பு நீரை இரைத்தது; அவள் தலையை நிமிர்த்தினாள். கிரே கீழே குனிந்தான், அவளது கைகள் அவனது இடைவாரைப் பற்றின. ஆஸ்ஸோல் தனது கண்களை இறுக்க மூடினாள்; பிறகு அவற்றை விரைவாகத் திறந்து, பிரகாசமான முகத்தை நோக்கி துணிவோடு முறுவலித்து, மூச்சு திணறக் கூறினாள்:

''நான் உங்களைக் கற்பனை செய்தது போலவே.''

''நீயுந்தான், என் அன்பே!'' நீரினின்றும் ஈரமாகிப் போன தனது செல்வத்தைத் தூக்கியபடி கிரே கூறினான். ''கடைசியில் நான் வந்து சேர்ந்து விட்டேன். என்னை நீ அடையாளங் காண முடிகிறதா?''

அவனது இடுப்பைப் பிடித்தபடியே அவள் தலையசைத்தாள், மறுபிறவி எடுத்த ஆன்மா வோடும் இறுக்கமாக மூடிய கண்களோடும். மென்மையான பூனைக் குட்டியைப் போல மகிழ்ச்சி அவளுக்குள்ளாகச் சுருண்டு கிடந்தது. கண்களைத் திறப்பதற்கு ஆஸ்ஸோல் துணிவு கொண்ட போது, அலைகின்ற துடுப்புப் படகு, அலைகளின் சிதறல்கள், பெரிதாக, முன் நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருந்த சீக்ரெட் — எல்லாமே கனவாக இருந்தது — அங்கே ஒளியும் நீரும் துள்ளியாடின, சூரிய ஒளியில் ஒளிக்கோடு பெற்ற சுவரின் மீது சூரியப் புள்ளிகள் போன்ற மகிழ்ச்சியோடு சுற்றிச் சுழன்றன. கிரேயினுடைய வலுவான கரங்களில் எங்ஙனம் கப்பலுக்குத் தூக்கப் பட்டாள் என்பதைக் கூட அவள் மறந்து போனாள். முரட்டுக் கம்பளங்களால் விரிக் கப்பட்டும், வேயப்பட்டும் இருந்த மேல்தளமா னது செந்நிறப் பாய்களின் விசிறியடிப்பால் சொர்க்கத் தோட்டம் போலிருந்தது. வெகு சீக்கிரத்திலேயே அறையில் — அதை விட எந்த அறையும் சிறந்ததாக இருக்க முடியாது— தான் இருப்பதை ஆஸ்ஸோல் பார்த்தாள்.

அப்போது அதற்கும் மேலாகக் கேட்டுக் கொண்டிருந்த வெற்றிக் களிப்பின் ஓசையா னது மீண்டும் காது செவிடுபட முழங்கியது. திரும்பவும் ஆஸ்ஸோல் கண்களை மூடிக் கொண்டாள், தான் உற்றுப்பார்த்தால் இவை எல்லாம் மறைந்துவிடும் என்ற அச்சம் அவளிடம் இருந்தது. கிரே அவளது கைக

ளைப் பற்றினான். எங்கே பாதுகாப்பு இருந்தது என்பதை இப்போது அறிந்து கொண்ட ஆஸ்ஸோல் மிகவும் அதிசயிக்கத் தக்க முறையிலே தோன்றியிருந்த தனது அன்புக்குரியவனின் நெஞ்சத்திலே கண்ணீர் படிந்த முகத்தைப் புதைத்துக் கொண்டாள். கிரேயும், சொல்ல முடியாத, யாரும் விவரிக்க முடியாத அரியதான நொடி தொடங்கி விட்டது என்பதால் அதிர்ச்சியும், வியப்பும் அடைந்திருந்தான். அவன், அவளது மோவாய் கட்டையைப் பற்றி, வெகு நாளைக்கு முன் அவன் கனவு கண்ட முகத்தை நிமிர்த்தி விட்டான். இறுதியாக அந்தப் பெண்ணின் கண்கள் விரியத் திறந்தன. ஒரு மனிதனிடத்தில் சிறப்பாக அமைய வேண்டிய எல்லாமே அவைகளிடம் இருந்தன.

''என்னுடைய லங்கிரேனை நம்மோடு நீங்கள் சேர்த்துக்கொள்வீர்களா?'' அவள் கேட்டாள்.

''ஆமாம்.'' இந்த உறுதியான 'ஆமாமை'க் கூறிய பிறகு அவளை மிகுந்த வாஞ்சையோடு அவன் முத்தமிட்டான், அவளும் நெஞ்சாரச் சிரித்தாள்.

அவர்கள் தனிமையில் விடப்பட வேண்டும் என்பதை அறிந்து கொண்டு, அவர்களை இப்பொழுது நாம் விட்டுவிடுவோம். உலகத்தின் பல்வேறு மொழிகளிலும் பேச்சுவழக்குகளிலும் ஏராளமான வார்த்தைகள் இருக்கின்றன, ஆனால் அன்றை நாளில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டதை அவற்றில்

எதனாலும் தெளிவில்லாதபடி கூட எடுத்துச் சொல்ல முடியாது.

இதற்கிடையே, மேல்தளத்திலே முக்கியப் பாய்மரத்தின் அருகில் இருந்த நூறாண்டு காலப் பழமை வாய்ந்த கருண்ட, நன்மை யை வெளிப்படுத்துவதற்காக மூடி அகற்றிய புழு அரித்த தேறல் கொண்ட மிடாவைச் சுற்றிக் கப்பல் குழுவினர் அனைவருமே கூடி நின்றார்கள். அத்வுட் அருகே நின்றான்; புதி தாகப் பிறந்த மழலையைப் போல மகிழ்ச்சி யோடு பன்டேன் அமர்ந்திருந்தான். கிரே தளத்திற்கு வந்தான், இசைக் கலைஞர்களுக்குச் சமிஞ்ஞை காட்டிவிட்டு, தனது தொப்பியை அகற்றி, தங்க ஊதுகுழலின் இசையில், அந்தப் புனிதமான ஒயினைச் சுவைப்பதில் முதலாவ தாக நின்றான்.

''அதோ...'' என்று அவன் கூறினான், குடித்து முடித்து விட்டு குவளையைச் சுழற்றி வீசி எறிந்த பிறகு, ''இப்போது குடியுங் கள். ஒவ்வொருவரும் குடியுங்கள்! குடிக்காது யாராவது இருந்தான் என்றால், அவன் என் னுடைய எதிரி.''

தன்னுடைய வார்த்தைகளை அவன் திரும் பச் சொல்ல வேண்டி வரவில்லை. எக்காலத் திற்கும் திடுக்கிட்ட கபேர்னாவை விட்டு, பாய்கள் அனைத்தையும் விரித்த சீக்ரெட் முழு வேகத்தில் முன்னேறிச் சென்ற போது, மிக முக்கியமான பெரு விருந்துகளில் இது போன்று நடப்பதைக் காட்டிலும், தேறல் கொண்ட மிடாவைச் சுற்றிலும் கூட்டம்

நெருக்கித் தள்ளிக் கொண்டது.

''நீ அதை எப்படி விரும்பினாய்?'' கிரே லேதிகாவிடம் கேட்டான்.

''காப்டன்,'' மாலுமி சரியான வார்த்தைகளைத் தேடிப் பிடித்தபடி கூறினான். ''அது என்னை பிடித்திருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் என்னுடைய உளப்பதிவுகளைப் பற்றி நான் சிந்தித்துப் பார்க்க வேண்டியவனாக இருக்கிறேன். தேன் கூடும் பழத்தோட்டமும்!''

''என்ன?''

''எனது வாய்க்குள்ளாகத் தேன்கூடு ஒன்றையும் ஒரு பழத்தோட்டத்தையும் வைத்துக் கொண்டிருப்பது போல இருக்கிறது என்று கருதுகிறேன். மகிழ்ச்சியாக இருங்கள், காப்டன். நான் சீக்ரெட்டின் 'சிறந்த சரக்கு' என்றும், சிறந்த பரிசு என்றும் அழைக்கலாமே, அந்தப் பெண் மகிழ்ச்சியாக இருப்பாள்!''

அடுத்த நாள் காலை விடியலின் போது கபேர்னாவுக்கு வெகு தொலைவில் கப்பல் இருந்தது. கிரேயின் மதுவினால் ஆட்கொள்ளப்பட்டு தளத்திலேயே நீட்டிப்படுத்திருந்த குழுவினரில் ஒரு பகுதி இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்; சுக்கானியும் காவல்காரனும் மட்டுமே சிரமத்துடன் நின்றார்கள். சிந்தனையில் ஆழ்ந்த வெறிமயக்கமான ஸிம்மரும் வாத்தியத்தில் தனது முகவாய்க் கட்டையை வைத்து கப்பலின் பின் பகுதியில்

அமர்ந்திருந்தான். வில்லால் தந்திகளை மீட்டி மென்மையாக வாசித்தபடி, மண்ணுலகத்திற்கு ஒவ்வாத மந்திரக் குரலில் அவற்றைப் பேசச் செய்த போது, மகிழ்ச்சி குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

1920 — 1921

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை — 600098

ஷோ-ரூம்
136, மவுண்ட் ரோடு, சென்னை — 600002

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர் — 641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008
செர்ரி ரோடு, சேலம் — 636001
1, ஏ. திருவனந்தபுரம் சாலை, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி — 627003

விற்பனை நிலையம்
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

ராதுகா பதிப்பகம் மாஸ்கோ

ISBN 5-05-001438-7